பக்கங்கள்: 24
விலை: 30.00
THEEMPUNAL
# தீம்புனல்
வாராந்தப் பத்திரிகை
தீ : 01 புனல்:41 05.02.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053



வடபகுதி மீனவர்களின் கடல் வளம் பாதிக்கப்படுவது
**நிறுத்தப்படுமா?**
பானு
பக்கம் 05



வடகொரியாவின் ஏவுகணைப்
**பரிசோதனையும் இராஜதந்திரமும்!**
ஐ.வி.மகாசேனன்
பக்கம் 06

பாணன்





# வடமராட்சியை உலுக்கிய மீனவர் போராட்டம்

1980 களுக்குப் பின்னர் வடமராட்சிப் பிரதேச மீனவர்கள் தமது தொழில் ரீதியாகப் பெரும் சவால்களையும் துன்பங்களையும் தொழில் இழப்புகளையும் சந்தித்து வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளில் ஆறுதலும் வளமான வாழ்வும் கிடைத்தாலும் அவை கானல் நீராகித் தொடர்ந்து துன்பங்களையே சந்தித்து வருகின்றார்கள்.

தமிழ் இன எழுச்சி ஆரம்பித்த காலங்களில் எம்மவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லும் போதெல்லாம் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல்களுக்கும் பிடிக்கப்படும் மீன்களை அவர்கள் பறிமுதல் செய்யும் நடவடிக்கைகளுக்கும் முகம் கொடுத்துத் தமது தொழில்களை நடத்தியுள்ளார்.

கடுமையான யுத்தம் மூண்ட காலங்களில் கடற்தொழிலை இழந்தும் இடம் பெயர்வுகளைச் சந்தித்தும் கடும் துன்பங்களைச் சந்தித்தும் வந்துள்ளார்கள். விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே புரிந்துணர்வு ஏற்பட்ட காலங்களில் தமது தொழில்களை மேற்கொண்டு வந்த போதிலும் அந்தக் காலங்களில்தான் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் முல்லைத்தீவு தொடக்கம் வடமராட்சி, காங்கேசன்துறை உள்ளிட்ட தீவகக்கடல் பகுதிகளில் ஊடுருவி மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள ஆரம்பித்த போது எமது மீனவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டனர். இவ்வாறு அத்துமீறிய இந்திய மீனவர்களை அக் காலங்களில் விடுதலைப் புலிகள் பிடித்து தம் கட்டுப்பாட்டில் வைத்து அவர்களுக்கு நிலைமைகளை எடுத்துக் கூறி அவர்களை விடுவித்தனர்.

இந்திய தமிழ் நாட்டுக் கரையோரத்தைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் நவீன விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப

22

# அப்பாவிகளை ஆக்கிரமிக்கும் மருத்துவ மாபியா

திரைப்படங்களில் வரும் அதிர்ச்சியான சம்பவங்கள் வாழ்க்கையில் ஏற்படுவது மிகமிகக் குறைவு. ஆனால், கண்டாவளைப் பாடசாலையில் மாணவர்களுக்கு அவ்வாறானதொரு அதிர்ச்சி நிலை ஏற்பட்டுள்ளது. அதற்குப் பின்னால் அரசியலும், அதிகாரமும் இருப்பதும் தெரிய வந்துள்ளது.

கிளிநொச்சி தர்மபுரம் பாடசாலையின் ஆரம்பப் பாடசாலையில் கடந்த மாதம் கண் பரிசோதனை மேற்கொண்ட தனியார் கண் மருத்துவ நிறுவனம் ஒன்று 71 மாணவர்களுக்குக் கண்பாதிப்பு உண்டு எனத் தெரிவித்தது. அவர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள தங்களது மருத்துவ நிலையத்திற்கு மேலதிக பரிசோதனைக்காக வருமாறு அழைப்பு விடுத்திருந்தது. இது வழக்கமான செய்திதான். மேலதிகப் பரிசோதனை மேற்கொண்டதில் 10 மாணவர்களை தவிர ஏனைய 61 மாணவர்களுக்கும் கண்ணில் பாதிப்பு உண்டு எனவும் இவர்கள் மூக்கு கண்ணாடி பயன்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்த நிறுவனம் கண்ணாடிகளின் விலைகளைப் பெற்றோர்களிடம் தெரிவித்தது. இதன் பின்னர்தான் சந்தேகமே ஏற்பட்டது. அந்த சந்தேகத்தை அப்படியே கடந்து போகாது கிளிநொச்சி கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் மருத்துவர் பிரியாந்தினி கமலசிங்கம் எடுத்த துரித நடவடிக்கையின் பிரகாரம் மேலதிகப் பரிசோதனை செய்யப்பட்டபோது 71 மாணவர்களில் வருகை தந்த 55 மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 38 மாணவர்களுக்குக் கண்ணில் எவ்விதப் பிரச்சினையும் இல்லை எனவும் ஏனைய 17 மாணவர்களுக்குக் கண்ணில் சிறு குறைபாடுகள் இருப்பதாகவும் மாவட்ட கண் வைத்தியர் அறிக்கையிட்டிருந்தார்.

இதனால் அந்த தனியார் நிறுவனம் நடத்திய கண் பரிசோதனையில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. மாணவர்களின் நலனுக்காகச் சோதனை செய்யாது வருமானத்தை எதிர்நோக்கிச் சோதனை செய்தது என்பதை அறிய முடிகிறது. கிராமங்களிலும், பாடசாலைகளிலும் இலவச மருத்துவ முகாம்களை லயன்ஸ் கிளப், தன்னார்வ நிறுவனங்கள் என்பன நடத்துவது வழமையானது. அங்கே இலவசக் கண்ணாடிகள் வழங்கப்படும். சிறப்பு மருத்துவ சேவை தேவையானவர்களுக்கு உரிய உதவிகள் இலவசமாக வழங்கப்படும்.

22

வர்மா



‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’

**ரவி**

யுத்தம் எப்போது ஆரம்பமாகும் என்ற பதற்ற நிலையில் ரஷ்ய, உக்ரேன் எல்லை இருப்பதால் வலிமையைக் காட்டுவதற்காக துருப்புகளும், ஆயுதங்களும் அங்கு குவிக்கப்படுகின்றன.

உக்ரேனை ஆக்கிரமிப்பதற்கு ரஷ்யா முயற்சிப்பதாக நேட்டோ நாடுகள் குற்றம் சுமத்துகின்றன. அந்தக் குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்துள்ளது. ரஷ்யாவின் எல்லையில் இருக்கும் உக்ரேனுக்கு உதவ அமெரிக்கா குரல்கொடுக்கிறது. தனது நாட்டு எல்லையில் அமெரிக்கா கால் வைப்பதை ரஷ்யா விரும்பவில்லை. நேட்டோவின் அங்கத்துவம் இல்லாத நாட்டுக்கு உதவும் நோக்கில் ரஷ்ய எல்லையில் இருப்பதற்கு அமெரிக்கா விரும்புகிறது.



# ரஷ்ய- உக்ரேன் எல்லையில் பதற்றம்

# துருப்புகள், ஆயுதங்கள் குவிப்பு

டவுனிங் ஸ்ட்ரீட் அதன் கிழக்கு எல்லைகளில் ரஷ்ய ஆக்கிரமிப்பைத் தடுக்க நேட்டோ அதன் பங்களிப்பை இரட்டிப்பாக்க முன்வந்துள்ளது.

நேட் டோவின் 30 உறுப்பு நாடுகள் அதன் கிழக்கு மற்றும் தென் கிழக்கு பகுதியில் அதன் இருப்பை அதிகரிக்க இன்னும் ஒப்புக்கொண்டுள்ளன. ரஷ்ய உக்ரேன் எல்லையில் படைகளைக் குவித்த நாடுகளும் அவற்றின் விபரங்களும்.

**ரஷ்யா**

உக்ரேனின் எல்லையிலும், கிரிமியா, டான்பாஸ் பகுதிகளிலும் சுமார் 130,000 துருப்புக்களை ரஷ்யாகுவித்துள்ளது.

**உக்ரேன்**

உக்ரேனில் சுமார் 250,000 பேர் கொண்ட இராணுவப் படை உள்ளது. நாட்டின் தலைநகரான கிய்வின் புறநகரில் ராணுவப் பயிற்சியில் ரிசர்வ் வீரர்கள் பங்கேற்று வருகின்றனர் .

2015 ஆம் ஆண்டு முதல் சுமார் 22,000 உக்ரேனிய இராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளித்துள்ள 100 பேர் கொண்ட பயிற்சிப் பணியை இங்கிலாந்து கொண்டுள்ளது.

இங்கிலாந்து இந்த மாதம் உக்ரைனுக்கு சுமார் 2,000 டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களை விமானம் மூலம் அனுப்பியது, அத்துடன் உக்ரேனிய ஆயுதப் படைகளுக்குப் புதிய உபகரணங்களில் பயிற்சி அளிக்க சுமார் 30 வல்லுநர்களையும் அனுப்பியுள்ளது. உக்ரேன் தலைநகர் கிவ்வுக்கு வெளியே ராணுவப் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன

**நேட்டோ**

நேட்டோ பதிலளிப்புப் படையானது 40,000 பேர் கொண்ட படையாகும்.

இதில் 5,000-வலிமையான மிக உயர்ந்த தயார் நிலை இராணுவப் படையணி, அத்துடன் 15,000 இராணுவ வீரர்கள் போர் விமானங்கள், போர்க்கப்பல்கள் மற்றும் கூட்டணி முழுவதும் சிறப்புச் செயற்பாட்டுப் படைகளை இயக்க உள்ளனர்.

நேட்டோ இன்னும் 20,000 இராணுவ வீரர்களை ஒரு சில நாட்கள் அல்லது வாரங்களுக்கு அப்பால் ஒரு நெருக்கடி நீடித்தால் அனுப்புவதற்கு தயாராக உள்ளது.



எமர்ஜென்சி துருப்புக்களுடன், எஸ்டோனியா, லாட்வியா, போலந்து மற்றும் லிதுவேனியா ஆகிய நாடுகளில் தலா 1,000 வீரர்கள் கொண்ட நான்கு போர்க் குழுக்கள் உள்ளன.

ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, ஸ்லோவாக்கியாவை தளமாகக் கொண்ட புதிய 1,000-பலமான போர்க் குழுக்களை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை நேட்டோ நட்பு நாடுகள் பரிசீலித்து வருவதாக ஸ்கை நியூஸ் தெரிவித்துள்ளது. எல்லைப் பிரச்சினை உக்கிரமடைந்த நிலையில் உக்ரேன் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான கடிதத்தை அமெரிக்காவுக்கு ரஷ்யா அனுப்பியுள்ளது.



கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரேன், "நேட்டோ" எனப்படும் வட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக் கும் அணியில் சேர ரஷ்யா எதிர்ப்பு தெரிவிக்கிறது. ஆனால், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இணைப்புக்கு ஆதரவு தெரிவிக்கின்றன. இதனால் ஆத்திரமடைந்துள்ள ரஷ்யா, ஒன்றரை லட்சம் ராணுவத்தினரை உக்ரேன் எல்லையில் நிறுத்தி உள்ளது.

இதனால் எழுந்துள்ள போர் பதற்றத்தைத் தணிப்பதற்காக, கடந்த வாரம் அமெரிக்கா, ரஷ்யாவிற்கு கடிதம் அனுப்பியது. அதில், "நேட்டோ அணியில் உக்ரேனைச் சேர்க்கக் கூடாது என்ற ரஷ்யாவின் கோரிக்கையை ஏற்க முடியாது" என, அமெரிக்கா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

எனினும், ரஷ்யாவின் இதர கோரிக்கைகளைப் பேசி தீர்க்கலாம் என, அமெரிக்கா அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் தகவல் வெளியானது. இந்நிலையில் அமெரிக்காவின் கடிதத்திற்கு, ரஷ்யா கடந்த செவ்வாய்க்கிழமை பதில் கடிதம் அனுப்பியுள்ளது அதன் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

எனினும், நேட்டோ அணியில் உக்ரேனை சேர்க்கக் கூடாது என்பதை ரஷ்யா உறுதியாக தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.மேலும், தன் எல்லையில் நேட்டோ நாடுகள் ஆயுதங்களை குவிக்கவோ, போர் பயிற்சி செய்யவோ கூடாது எனவும் ரஷ்யாவின் கடிதத்தில் குறிப்பிட்டு உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்யாவின் பதில் கடிதம், உக்ரேன் பதற்றத்தை தணிக்க உதவுமா என்பது சில தினங்களில் தெரியவரும் என அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளன.

■

**"எல்லைப் பிரச்சினை உக்கிரமடைந்த நிலையில் உக்ரேன் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான கடிதத்தை அமெரிக்காவுக்கு ரஷ்யா அனுப்பியுள்ளது. கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரேன், "நேட்டோ" எனப்படும் வட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக்கும் அணியில் சேர ரஷ்யா எதிர்ப்புத் தெரிவிக்கிறது. ஆனால், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இணைப்புக்கு ஆதரவு தெரிவிக்கின்றன. இதனால் ஆத்திரமடைந்துள்ள ரஷ்யா, ஒன்றரை லட்சம் ராணுவத்தினரை உக்ரேன் எல்லையில் நிறுத்தி உள்ளது. இதனால் எழுந்துள்ள போர் பதற்றத்தைத் தணிப்பதற்காக, கடந்த வாரம் அமெரிக்கா, ரஷ்யாவிற்கு கடிதம் அனுப்பியது. அதில், "நேட்டோ அணியில் உக்ரேனை சேர்க்கக் கூடாது என்ற ரஷ்யாவின் கோரிக்கையை ஏற்க முடியாது" என, அமெரிக்கா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது."**

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL
தீம்புனல்

# சுதந்திரமாக மீன் பிடிப்பதற்குப் போராடும் மீனவர்கள்

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினம் நேற்று பெப்ரவரி 4 ஆம் திகதி தலைநகரில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இலங்கைத் தலைவர்களும் உலகத் தலைவர்களும் வாழ்த்துத் தெரிவித்தனர். இலங்கை சுதந்திரமடைந்து 74 வருடங்கள் கடந்த போதும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் உணர்வு பூர்வமாகச் சுதந்திர தினத்தைக் கொண்டாட முடியாத நிலையில் உள்ளனர். அதற்கு முக்கிய காரணம் இலங்கையின் அரசியல் பின்புலம். தமிழ் மக்களைப் புறக்கணிப்பதால் கிடைக்கும் வாக்கு வங்கி அரசியல் முன்னிலையில் இருப்பதால் தமிழ்ப் பகுதிகளில் சுதந்திர தினத்தின் கோலாகலம் இல்லாமல் போய் விட்டது.

வடபகுதி மீனவர்களின் போராட்டம் பற்றிய செய்திகள் யாழ்ப்பாணப் பத்திரிகைகளின் முக்கிய செய்திகளாயின. சுதந்திர தினம் பற்றிய செய்திகள் மீனவரின் போராட்ட செய்தியால் மழுங்கடிக்கப் பட்டன.

தமிழக மீனவர்களின் அத்து மீறல் இந்த வருட சுதந்திர தினத்தைப் பின்னுக்குத் தள்ளி விட்டது. காலையில் வேலைக்குப் போகும் அனைவரும் மாலையில் பாதுகாப்பாக வீட்டுக்குத் திரும்பி விடுவார்கள். ஆனால், மீனவர்களின் வாழ்க்கை அப்படிப்பட்டதல்ல. கடலுக்குச் செல்லும் மீனவர் உயிருடன் வீட்டுக்குத் திரும்புவார் என்ற உறுதிமொழியை யாராலும் கொடுக்க முடியாது. இயற்கை அனர்த்தங்களால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் அவர்கள் மாண்டு போகும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

தமிழக மீனவர்களால் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இலங்கைக் கடலில் அத்து மீறும் தமிழக மீனவர்களால் இலங்கையின் வடபகுதி மீனவர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

இதுவரை காலமும் அத்து மீறிய தமிழக மீனவர்கள் தற்போது இரண்டு இலங்கை மீனவர்களைக் கடலில் கொலை செய்ததால் போராட்டம் வீறுகொண்டெழுந்துள்ளது. மீனவர்களின் முன்னைய போராட்டங்களை இலங்கை அரசாங்கம் கண்டு கொள்ளவில்லை. இந்திய அரசாங்கமும் அதற்குச் செவி சாய்க்கவில்லை. தமிழக அரசியல் வாதிகள் தொடர்ச்சியாகக் குரல் கொடுப்பார்கள். அந்த குரலும் தமிழகத்திற்கு அப்பால் கேட்பதில்லை.

அத்து மீறும் தமிழக மீனவர்கள் தொடர்பாக இருநாட்டு மீனவர் சங்கங்களும் பேச்சுவார்த்தைகளை நடத்தின அவற்றில் எது வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அரச உயர் தலைவர்களின் பேச்சு வார்த்தைகளும் பலனளிக்கவில்லை.

இன்று சனிக்கிழமை ஐந்தாவது நாளாக மீனவர்கள் போராட்டம் நடத்தினர். பருத்தித்துறை மீனவர்கள் தமிழக மீனவர்களால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அமைச்சர் மட்டத்தில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. மீனவர்களின் போராட்டத்துக்குப் பொதுமக்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். அரச அலுவலகங்கள், வீதிகள் என்பனவற்றை மறித்து போராட்டம் நடத்திய மீனவர்கள் பொது மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கு எதுவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

உயிரைப் பணயம் வைத்துத் தொழில் செய்யும் மீனவர்களின் பிரச்சினைக்கு உரிய நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம்.

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கபடுவதும் கொல்லப்படுவதும் அதைக் கண்டித்துத் தமிழகத்தில் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் அடிக்கடி நடைபெறுகின்றன. இந்தப் பிரச்சினைகளால் பாதிக்கப்படுவது இரண்டு நாட்டு மீனவர்கள்தான். ஆகையால் தமிழ் பேசும் மீனவர்களை மோத விட்டு வேடிக்கை பார்ப்பதை இரண்டு நாட்டு அரசாங்கங்களும் கைவிட வேண்டும். மரணமாகும் மீனவர்கள் தமது நாட்டுப் பிரஜை என்பதை இரு நாட்டு அரசியல்வாதிகளும் மறந்து போய் விடுகிறார்கள்.

ஒரு மீனவர் இறந்தால் அவரது குடும்பம் பாதிக்கப்படும் என்பதை மனதில் நிறுத்த வேண்டும். அந்தக் குடும்பத்துக்கு நிவாரணம் கொடுப்பதால் ஆகப்போவது ஒன்றும் இல்லை. மீனவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் அவர்களின் பிரச்சினைகளுக்கு முடிவு கட்ட வேண்டியதும் பொறுப்புள்ள அரசின் கடமையாகும்.

இதனை மீனவர் பிரச்சினையாகக் கருதாது இரண்டு நாடுகளின் பிரச்சினை என்பதை மனதில் நிறுத்தித் தீர்வுகொடுக்க வேண்டியது அவசியம். ■

# அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை இழந்த ஆண்டகை

ஊர்மிளா

இலங்கையில் உள்ள கத்தோலிக்க மக்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணை உரிய முறையில் நடைபெறவில்லை எனக்கூறிய கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உரிய விசாரணையை நடத்த உதவியளிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்தவுள்ளதாகக் கடந்த வாரம் கொழும்பில் நடந்த கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்தார். இலங்கையில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களினால் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டனர். விகாரைகள், சைவ ஆலயங்கள், மசூதிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்றவையும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு இரையாகின. எங்கெங்கெல்லாம் தாக்குதல் நடத்தப்படக்கூடாதோ அங்கெங்கெல்லாம் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அரசாங்கத்தின் மீது நம்பிகை இழந்த காரணத்தினால் ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்பைக் கோருவதற்கான முடிவை எடுத்ததாகவும் இனிமேலும் அரசாங்கததின் உறுதிமொழியை நம்ப முடியாதெனவும் பேராயர் கூறினார். பிரதான வல்லரசு நாடுகள் மூலமாகவே இந்தக் கோரிக்கையை விடுக்கவுள்ளதாக அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் பேராயர். 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற தொடர் தாக்குதல்களினால் கொல்லப்பட்ட, காயமடைந்த மக்களுக்கு உரிய நீதி இன்னமும் கிடைக்கவில்லை. ஈஸ்டர் ஞாயிறு அன்று, தேவாலயங்களில் பிரார்த்தனை செய்தவர்களையும் நட்சத்திரக் ஹோட்டல்களையும் குறிவைத்து தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. குறைந்தது 253 பேர் கொல்லப்பட்டனர். சுமார் 500 பேர் காயமடைந்தனர். பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கையர்கள், ஆனால், இங்கிலாந்து, டென்மார்க், போர்த்துக்கல், இந்தியா, துருக்கி, அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, ஜப்பான், சுவிட்சர்லாந்து, ஸ்பெயின், பங்களாதேஷ், அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் இந்தப் பயங்கரவாதத் தாக்குதலினால் கொல்லப்பட்டனர். நேஷனல் தவ்ஹீத் ஜமாத் எனப்படும் அதிகம் அறியப்படாத உள்ளூர் போராளி இஸ்லாமியக் குழுதான் இதற்குக் காரணம் என்று இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர். முன்னதாக ஐ.எஸ் அமைப்பு தாக்குதல்களை நடத்தியதாகக் கூறியது. நாட்டை உலுக்கிய இத் தாக்குதல் போன்று மேலும் பல தாக்குதல்கள் நடைபெறலாம் என்ற அச்சம் உருவானது. துரிதமாக நடைபெற்ற விசாரணைகளின் பின்னர் கிழக்கு நகரமான சாய்ந்தமருதில் உள்ள வீடொன்றை பொலிஸார் சோதனையிட்டதில் குண்டுவெடிப்பின் மூளையாக சந்தேகிக்கப்படும் இஸ்லாமிய போதகர் சஹ்ரான் ஹாசிமின் உறவினர்கள் உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர். இலங்கையின் பல இடங்களிலும் இருந்து அவர்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டனர். 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டபாய ராஜபக்ஷவை வேட்பாளராகக் களமிறக்குவதில் தீவிரமாக செயற்பட்டவர்களில் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் ஒருவர். மக்கள் மத்தியில் இது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தினார். கோட்டபாய வெற்றிபெற்ற பின்னர் அவருடைய அரசாங்கத்தின் மீது அதீத நம்பிக்கை வைத்திருந்தார். ஆனால் இரண்டு ஆண்டுகளின் பின்னரான சூழலில் நம்பிக்கையிழந்து விட்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டதாகக் குற்றம் சாட்டிய மகிந்த ராஜபக்ஷ ஐ.நாவுக்குச் சென்றார். இலங்கையின் இறுதி யுத்தம் தொடர்பான குற்றச் சாட்டுகள் ஐ.நாவில் பாரப்படுத்தபட்டுள்ளன. உள்ளகப் பொறிமுறையின் மூலம் விசாரணை நடத்தலாம் என இலங்கை அரசாங்கம் அப்போது அறிவித்தது. அரசாங்கம் நடத்தும் விசாரணையில் இலங்கைத் தமிழர்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். அந்த இடத்துக்கு இப்போது கத்தோலிக்க மக்கள் வந்துள்ளனர். கடந்த காலங்களில் நடைபெற்ற விசாரணை அறிக்கைகள் எல்லாம் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இவை எல்லாவற்றையும் தெரிந்துகொண்டுதான் ஈஸ்டர் தாக்குதலை ஜனாதிபதி விசாரணைக்குழு விசாரிக்க ஆரம்பித்தது. பொரளை தேவாலயத்தில் சக்தி வாய்ந்த குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அச்சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். பொலிஸாரால் கைது செய்யப்பட்டவருக்கும் அங்கு வைக்கப்பட்ட குண்டுக்கும் தொடர்பு இல்லை என்பதை உறுதிப்படுத்தும் காணொளிகள் வெளியாகி உள்ளன. அது தொடர்பான விசாரணைகள் கூட உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை எனவும், இதனால் சந்தேகம் மேலும் அதிகரித்துள்ளதென்றும் பேராயர் கூறியுள்ளார். பேராயரை சாந்தப்படுத்த அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. ஈஸ்டர் தாக்குதலில் இறந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதில் பேராயர் உறுதியாக இருக்கிறார். ஆணைக்குழுவின் விசாரணைகளை உன்னிப்பாக அவதானித்து வருகிறார். ஈஸ்டர் தாக்குதல் விசாரணையில் நம்பிக்கை இழந்த பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நீதிகோரி சர்வதேச சமூகத்தை நாடவுள்ளதாகப் பல முறை கூறியிருந்தார். அது தொடர்பான எந்த ஒரு முயற்சியையும் அவர் எடுக்கவில்லை. செயற்பாடுகள் எதனையும் இதுவரை பகிரங்கப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. விசாரணையை நடத்த வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்தவுள்ளதாக அவர் தெரிவித்திருப்பதும் அறிவிப்பில் இருக்குமா அல்லது செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளபடுமா என்பதைக் காலம்தான் கூற வேண்டும். ■



# 1948 இல் பறித்தெடுக்கப்பட்ட சுதந்திரம்...!

பிதாமகன்


இந்திய வம்சாவளி மலையக மக்களுக்கும் இலங்கை சுதந்திர தினத்துக்கும் உள்ள நெருங்கிய தொடர்புகள் இந்த உலகத்தில் வேறு எந்த நாட்டு மக்களுக்கோ அல்லது சமூகங்களுக்கோ இல்லை எனலாம். இலங்கைக்கு பாதியளவான சுதந்திரம் கிடைத்த ஆண்டு 1948 பெப்ரவரி 4 ஆம் திகதியாகும்.

முழுமையான சுதந்திரம் இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்ட 1972 மே மாதம் 22 ஆம் திகதி கிடைத்ததென்பதை இலங்கையே மறந்து விட்டிருக்கின்றது. அது வேறு கதை. ஆனால் 1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் கிடைத்த அந்தக் காலப்பகுதியை மலையக சமூத்தினர் எத்தனை வருடங்கள் சென்றாலும் மறக்க மாட்டார். ஆம் அந்த ஆண்டு சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமராக முடிசூட்டிக்கொண்ட டி.எஸ்.சேனநாயக்க அதே ஆண்டு ஓகஸ்ட் மாதம் இந்த சமூகத்தின் பிராஜாவுரிமையை பறித்தெடுத்ததன் மூலம் இந்த மக்களை வாக்குரிமையற்றவர்களாக்கி, நாடற்றவர்களாக்கி அவர்களின் சுதந்திரத்தைப் பறித்தெடுத்தார்.

சுதந்திரம் கிடைத்த ஆண்டிலேயே தமது சகல உரிமைகளையும் பறிகொடுத்த சமூகத்தினர் உலகில் வேறு எங்கும் இருக்கின்றார்களா? அன்றைய ஐக்கிய தேசிய கட்சி செய்த இந்த அராஜக செயற்பாடுகளுக்குக் காரணமே எண்ணிக்கையில் அதிகமாக இருந்த இந்திய வம்சாவழி மக்களாவர். இந்த மக்களின் பிராஜா உரிமை பறிக்கப்படும் போது அப்போதைய பாராளுமன்றில் இம்மக்களைப் பிரதிநிதித்துப்படுத்திய 7 உறுப்பினர்கள் இருந்தனர். எனினும் அடுத்தடுத்த தேர்தல்களின் போது இச்சமூகத்தின் பிரதிநிதிகள் அதிகரிப்பதானது தமக்கு பாதக விளைவை ஏற்படுத்தி விடும் என்ற காரணத்தினாலேயே இந்த முடிவை டி.எஸ்.சேனநாயக்க எடுத்தார். சுதந்திர இலங்கையில் பேரினவாதத்தால் இனரீதியான பாதிப்புக்குள்ளான முதல் சமூகமாக இந்திய வம்சாவளி மலையக மக்கள் விளங்குகின்றனர். இதில் வேதனையான விடயம் என்னவெனில் இந்த செயற்பாட்டுக்கு வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லிம் தலைவர்கள் ஆதரவாக இருந்தனர் என்பதுதான்.

சிறுபான்மை பிரதிநிதித்துவம் அதிகரித்தால் அவர்கள் அனைவரும் ஒன்று சேர்வது தமக்கு பாதகமாக அமையக்கூடும் என்ற ஐக்கிய தேசிய கட்சியின் நரித்தனம் அப்போது இவர்களுக்கு விளங்கியிருக்கவில்லை. ஆகவே நாட்டின் ஒரு தரப்பு சிறுபான்மை மக்களை அக்கட்சி நசுக்கத் தீர்மானித்தது.

அதன் பிறகு சுமார் 40 வருடங்கள் வரை இந்தச் சமூகமானது அரசியல் பிரதிநிதித்துவத்தை இழந்து தவித்தது. பின்வந்த அரசாங்கங்களுடன் உருவான இந்திய - இலங்கை ஒப்பந்தங்களால் மீண்டும் ஒரு தொகையினர் தமிழகம் சென்றடைந்தனர். இலங்கைக்கு உழைக்கும் வர்க்கத்தினராக இவர்கள் வருகை தந்து 200 வருடங்களை நெருங்கும் இத்தருணத்தில், ஒவ்வொரு சுதந்திர தினத்தன்றும் அதை உணர்வுபூர்வமாகக் கொண்டாட முடியாத நிலையில் இச்சமூகத்தின் சில தலைமுறையினர் இன்னும் கூட இலங்கையிலும் தமிழகத்திலும் வாழ்ந்து வருகின்றனர்.



சுதந்திர தினமன்றே மலையக மக்களது உரிமைகள் பறிக்கப்பட்டதானது ஒரு வடுவாக இன்றும் இந்தச் சமூகத்தை நெருடி வருகின்றது. ஏனெனில் 40 வருடங்கள் வரை இச்சமூகத்தின் அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டதால் பல நெருக்குவாரங்களுக்கு உள்ளாகி இலங்கையின் ஏனைய சமூகங்களிலிருந்து ஒதுக்கப்பட்ட ஒரு வர்க்கத்தினராகவும் 1980 களுக்குப்பின்னரே இலவசக் கல்வியை முழுமையாக அனுபவிக்கும் உரிமையை பெற்றவர்களாகவும் விளங்கினர். அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாத காரணத்தினால் இன்று வரையில் இந்த மக்களுக்கு உரிய சுகாதார வசதிகள் கிடைக்கப்பெறவில்லை. இன்றும் கூட ஆங்கிலேயர் காலத்தில் உருவாக்கப்பட்ட தோட்ட டிஸ்பென்சரிகள் என்று அழைக்கப்படும் தோட்ட வைத்தியசாலைகளிலேயே இவர்கள் மருத்துவ சேவைகளைப் பெறுகின்றனர். அரச நிர்வாகத்துறையில் உள்வாங்கப்படுவதற்கான அரச திணைக்களங்களோ நிறுவனங்களோ இப்பகுதிகளில் அதிகமாக உருவாக்கப்படவில்லை. கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் தாமதமாகவே இச்சமூகத்துக்குக் கிடைத்த காரணத்தினால் அரச சேவைகளில் இச்சமூகத்தினர் மிகவும் குறைவான விகிதத்திலேயே இணைந்தவர்களாக உள்ளனர்.



அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாத காரணத்தினால் இம்மக்கள் எவ்விதத்திலும் தமது எதிர்ப்பை வெளிக்காட்ட முடியாதிருந்தனர். இவர்களின் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் வலுக்கட்டாயமாக ஏற்படுத்தப்பட்டன. போராட்ட உணர்வோடு அதை எதிர்த்து தோட்டத்தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்த போது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாகினர். இப்படியாகப் போராட்டங்களினால் உயிர் நீத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 63 இற்கும் அதிகமாகும். இந்நிலையில் ஸ்ரீமா - சாஸ்த்திரி ஒப்பந்தத்தில் சுமார் 4 இலட்சம் பேர் தமது தாயகம் நோக்கிச் சென்றனர். மிகுதியாக இலங்கையில் இருக்க விரும்பியவர்களுக்குக் கட்டங்கட்டமாக பிரஜா உரிமை வழங்கப்படும் என்று கூறப்பட்டாலும் அது தாமதித்தே வழங்கப்பட்டது. அதுவும் அவர்களுக்கு முழுமையான இலங்கையர் அந்தஸ்து வழங்கப்படாது வெறும் சத்தியக்கடதாசி மூலமே இலங்கை பிரஜைகள் என்ற ஆவணம் வழங்கப்பட்டது. அதாவது 1988 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்கச் சத்தியக்கடதாசி மூலம் பிரஜாவுரிமை வழங்கும் சட்டம் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரஜா உரிமை வழங்கும் சட்டமும் உருவாகியது. பின்னர் 2009 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரஜா உரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமும் - 2009 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நாடற்ற ஆட்களுக்கு விசேட திருத்தச் சட்டமும் உருவானது.

ஆக 1948 ஆம் ஆண்டு இந்த மக்களிடம் இருந்து பறிக்கப்பட்ட பிரஜா உரிமையானது சட்டங்களின் அடிப்படையில் இறுதியாக வழங்கப்பட்ட ஆண்டு 2009 ஆகும். இந்த ஆண்டு இலங்கைத் தமிழர்கள் மத்தியில் முக்கியத்துவம் பெற்ற ஆண்டாக விளங்குகின்றது. 30 வருட கால யுத்தம் முடிவுக்கு வந்ததும் இந்த ஆண்டுதான். பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் மடிந்தும் முடமாகியும் போன ஒரு வரலாற்று யுத்தம் முடிவுக்கு வந்த அதே ஆண்டு இதே நாட்டின் மத்திய மலை நாட்டுப்பகுதியில் வாழ்ந்து வரக்கூடிய மலையகத் தமிழர்களின் வரலாற்றில் இடம் பெறக்கூடிய சம்பவமும் இடம் பெற்றது.

இந்த ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி யுத்தம் முடிவுக்கு வந்த தினத்தையே அப்போதைய அரசாங்கம் இரண்டாவது சுதந்திர தினம் எனப் பிரகடனம் செய்தது. இந்நாட்டின் பெரும்பான்மையின மக்கள் வீதிகளில் பட்டாசு கொளுத்தியும் பாற்சோறு சமைத்து அனைவருக்கும் விநியோகித்தும் கொண்டாடினர். இன்னும் கொண்டாடிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் 1948 ஆம் ஆண்டிற்குப்பிறகு மாறா வடுக்களை மனதிலும் உடம்பிலும் சுமந்து கொண்டு வாழ்ந்து வரும் இந்நாட்டின் தமிழர்களுக்கு இனி எத்தனை பெப்ரவரி 4 வந்தாலும் சுதந்திர தினத்தைக் கொண்டாடும் உணர்வுகள் வரப்போவதில்லை.

அப்படி உணர்வு ரீதியாகச் சுதந்திர தினத்தைக் கொண்டாடும் சூழ்நிலைகளை எந்தப் பேரினவாத அரசாங்கமும் உருவாக்கப்போவதில்லை என்பதே யதார்த்தம். ■

> **“சுதந்திர தினமன்றே மலையக மக்களது உரிமைகள் பறிக்கப்பட்டதானது ஒரு வடுவாக இன்றும் இந்த சமூகத்தை நெருடி வருகின்றது. ஏனெனில் 40 வருடங்கள் வரை இச்சமூகத்தின் அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டதால் பல நெருக்குவாரங்களுக்கு உள்ளாகி இலங்கையின் ஏனைய சமூகங்களிலிருந்து ஒதுக்கப்பட்ட ஒரு வர்க்கத்தினராகவும் 1980 களுக்குப்பின்னரே இலவசக் கல்வியை முழுமையாக அனுபவிக்கும் உரிமையை பெற்றவர்களாகவும் விளங்கினர். அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாத காரணத்தினால் இன்று வரையில் இந்த மக்களுக்கு உரிய சுகாதார வசதிகள் கிடைக்கப்பெறவில்லை.”**

# வடபகுதி மீனவர்களின் கடல் வளம் பாதிக்கப்படுவது நிறுத்தப்படுமா?

பானு



பாக்கு நீரிணை கடற்பரப்பில் அண்மைக் காலமாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கையால் தொடரும் மோதல்களும் சிறைப்பிடிப்புக்களும், போராட்டங்களும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இலங்கையின் வடக்கே அதிகமான தமிழர்கள் வாழ்கிறார்கள் அதே போல் இந்தியாவின் தெற்கே தமிழ் நாட்டில் தமிழர்கள் வாழ்கின்றார்கள். ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களின் பிரச்சினைகள் இலகுவாகத் தீர்க்கப்படலாம். ஆனால் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களை மோத வைத்துப் பார்க்கும் நிலையை இரு நாட்டு அரசுகளும் ஏற்படுத்துகின்றனவா? என்ற கேள்வி சமூக ஆர்வலர்கள் மத்தியில் ஏற்படுகின்றது.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு - கிழக்கில் யுத்தம், சமாதானம் இடம் பெற்ற காலத்தில் இந்திய மீனவர்கள் இலங்கையின்வடக்கு கடலில்அத்து மீறிய சம்பவங்கள் மிகவும் குறைவு என்று கூறலாம். அதற்கான காரணம் விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டில் வடக்கு பகுதியின் அதிகமான பிரதேசங்கள் இருந்தால் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களிடம் பிரச்சினைகள் ஏற்படுத்துவதை அவர்கள் விரும்பவில்லை அதற்கான காரணத்தையும் ஏற்படுத்தவில்லை. அதேவேளை இலங்கை கடற்படையின் கண்காணிப்பு அதிகளவில் இருந்தது.

இலங்கையின் வடக்கு பகுதி மீன் வளம் நிறை பகுதி இப்பகுதியில் இந்திய மீனவர்கள், இலங்கையின் தென்பகுதி மீனவர்களும் வர்த்தக ரீதியிலான மீன் பிடித்தல் முறையான இழுவைப்படகு,றோலர், வள்ளம் போன்ற படகுகளில் டைமைற், சிலிண்டர் பயன்படுத்தி அட்டை; சங்குகள் எடுத்தல், சுருக்குவலை போன்ற மீன் பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன்வளத்தை அழிக்கின்றனர். கட்டுமரம், தெப்பம், சிறிய படகுகள் போன்றவற்றில் படுப்பு வலைகள், இறால் கணவாய் கூடுகள், நீள் தூண்டில்கள், கரை வலை போன்ற மரபு ரீதியான தொழில் முறைகளில் வட பகுதி மீனவர்கள் ஈடுபடுகின்றனர். இதனால் கடல் மீன்வளங்கள் அழிவடையாது நீண்ட தலைமுறையினர் நீண்ட காலம் தொழிலில் ஈடுபட இத் தொழில் முறை சாதகமான சூழலை ஏற்படுத்துகிறது.

இந்திய மீனவர்களும் தென் இலங்கை மீனவர்களும் நவீன மீன்பிடி முறைகளான இழுவைப்படகு, றோலர், சுருக்குவலை, தங்கூசிவலை போன்ற தொழில் முறைகளைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுவதனால் இத் தொழில் முறைகள் கடலின் அடித்தளம் வரையாக காணப்படும் சிறிய மீனினங்களை அழிக்கிறது. அதேவேளை முருங்கைக்கற்பாறைகள் சேதமடைவதனாலும் மீன் இனப் பெருக்கத்திற்கான வாய்ப்புகள் குறைவடைகிறது. சட்ட விரோதமான தொழில் முறைகளைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுவதனால் பாதிக்கப்படுவது வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரமே. வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டால் அதைப் பற்றி இலங்கை அரசு கண்டும் காணாமலும் உள்ள நிலையே உள்ளது.

தமது நாட்டு மீனவர்கள் என்ற மனநிலையில் அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்று சிந்திப்பதில்லை. தமிழ் தலைமைகளும் சிதறு தேங்காய் போல் ஆளுக்கொரு கட்சியை அமைத்துத் தமக்குள் முரண்படுவதை குறிகோளாகக் கொண்டுள்ளனரே தவிர மக்களின் அபிலாசைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கையாள்வது குறைவாகவே உள்ளது.

வடபகுதியில் யாழ்ப்பாணத்தின் வடமராட்சி கிழக்குக்கு உட்பட்ட வத்திராயன் கிராமத்தில் இருந்து மாமனும் மருமகனும் தைமாதம் 27 ஆம் திகதி தொழிலுக்குச் சென்ற சமயம் இந்திய மீனவர்களின் றோலர் படகு தாக்கி உயிரிழந்தனர். ஆழியவளைக் கடற்பரப்பில் ஒருவரின் உடல் கரையொதுங்கியது. வடமராட்சிக் கிழக்கு மீனவர்கள் கடலில் நீண்ட நேரம் தேடி அதே நாள் மற்றையவரின் உடலை கண்டுபிடித்தனர். இறந்த மீனவர்களைத் தேடும் பணியில் கூட இலங்கைக் கடற்படை இறங்கவில்லை. இராணுவம் ஒத்துழைக்கவில்லை தமிழ் மக்கள் இறந்து போவதை இராணுவமும் அரசும் விரும்புகிறதா? என்ற கேள்வி எழத் தோன்றுகிறது.

வடமராட்சி கிழக்கு வத்திராயன் மீனவர்கள் இறந்ததற்கு நீதி வேண்டி மாசி மாதம் 01 ஆம் திகதி வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தை முடக்கி அரச உத்தியோகத்தரை சேவைக்கு உள் நுழையாதபடி மீனவர்கள் போராட்டம் நடத்தின. நீதி கிடைக்க வேண்டும், இனிவரும் காலங்களில் இந்திய மீனவர்களின் அத்து மீறலை கட்டுப்படுத்த வேண்டும். எமது கடற்பரப்பில் எமது பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு நாம் மட்டும் தொழிலில் ஈடுபட வேண்டும் என்று கூறி நீண்ட நேரம் போராட்டம் இடம் பெற்றது. வடமராட்சி கிழக்கு பொலிஸ் அதிகாரி, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர், கடற் தொழில் அமைச்சர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியும் உறுதியான முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. இதனால் மீனவர்கள் கொதிப்படைந்தனர். வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கு ஆதரவாக சுப்பர்மடம், பொலிகண்டி, மாதல் பகுதிகளிலும் போராட்டம் இடம் பெற்றது. வடமராட்சி பிரதேச செயலகத்தை மாசி மாதம் 2 ஆம் திகதி முடக்கி வடமராட்சி மீனவர்கள் போராட்டம் செய்தனர்.




வடமராட்சி சக்கோட்டை கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன் பிடித்த இந்திய மீனவர்களை வடமராட்சியில் இருந்து நாற்பது படகுகளில் சென்றவர்கள் இந்தியப் படகை சிறைப் பிடித்தனர். இந்திய மீனவர்கள் படகுகளில் கற்களையும் மற்றும் பெற்றோல் குண்டுகளையும் வீசியதாகவும் இலங்கை மீனவர்கள் குற்றம் சுமத்தினர். சிறைப்பிடிக்கப்பட்ட 21 மீனவர்களையும் இரண்டு படகுகளையும் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு பருத்தித்துறை நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனை அறிந்த தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 21 மீனவர்களையும் கைப்பற்றப்பட்ட இரண்டு படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரிடம் கோரியுள்ளார்.

எமது எல்லைக்குள் இந்திய மீனவர்களோ தென்னிலங்கை மீனவர்களோ வருவதைத் தடை செய்ய வேணும் இதற்கு சரியான உறுதி மொழியை தரவேண்டும். உரிய பதில் எதுவும் கிடைக்காமல் போராட்டங்களை நிறுத்த மாட்டோம் மீனவர்களின் உயிரிழப்பை கருத்தில் கொண்டு சரியான இறுக்கமான முடிவு எடுக்க வேண்டும். கடற்றொழில் அமைச்சர் தமிழராக இருந்தும் இரு தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் உள்ளது வேதனையான விடயம் என மீனவர்கள் ஆதங்கம் வெளியிட்டனர்.

வடபகுதி மீனவர்களின் பிரச்சினைகள் முளையிலே கிள்ளி எறிய வேண்டும் இல்லாவிட்டால் இது பாரதூரமான நிலைக்குச் சென்று விடும். இந்திய மற்றும் இலங்கையின் வடபகுதி மீனவர்களின் பிரச்சினைகள் தற்போது இரு நாட்டு அரசுகளும் எல்லைகளை வரையறுத்து இராணுவங்களின் படகுகளை எல்லைகளில் நிறுத்தி மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி தொடர்ந்தும் பிரச்சினைகள் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். இதை கண்டும் காணாமல் அரசுகள் இருந்தால் இருநாட்டு மீனவர்களும் தொடர்ந்து மோதுவதால் உயிர் இழப்புக்கள், பொருள் சேதங்கள் ஏற்படும்.

“இந்திய மீனவர்களும் தென் இலங்கை மீனவர்களும் நவீன மீன்பிடி முறைகளான இழுவைப்படகு, றோலர், சுருக்குவலை, தங்கூசிவலை போன்ற தொழில் முறைகளைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுவதனால் இத் தொழில் முறைகள் கடலின் அடித்தளம் வரையாக காணப்படும் சிறிய மீனினங்களை அழிக்கிறது. அதேவேளை முருங்கைக்கற்பாறைகள் சேதமடைவதனாலும் மீன் இனப் பெருக்கத்திற்கான வாய்ப்புகள் குறைவடைகிறது.”

ஈழத்தில் யுத்தம் உக்கிரமடைந்த காலத்தில் தமிழ்நாட்டு தமிழர்கள் ஈழத்தமிழர்களுக்காக போராட்டங்களை நடத்தி தீக்குளித்து ஈழத்தமிழ் மக்களின் இனப்படுகொலைகளுக்கு நீதி வேண்டி போராடினார்கள் ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள் என்றபடியால் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடனும் இன்ப துன்பங்களில் பகிர்ந்து கொண்டார்கள். ஆனால் இன்று மீனவர்களின் பிரச்சினைகளைச் சரியான முறையில் எல்லையை வரையறுத்து இருநாட்டு அரசுகளும் சரியான தீர்மானங்களையும் கடல்சட்டங்களையும் நடைமுறைப்படுத்தினால் இரு நாட்டு மீனவர்களுக்கும் எதிர் காலத்தில் பிரச்சினைகள் ஏற்படாது. வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படாது சுதந்திரமாக தமது கடலில் தொழில் செய்யலாம் இது நடக்குமா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும். பொறுத்திருந்து பார்ப்போம். ■

தீம்புனல் THEEMPUNAL

> அணுசக்திப் பேச்சுவார்த்தைகளை மறுதொடக்கம் செய்ய அமெரிக்க ஜனாதிபதி பைடன் நிர்வாகத்திற்கு அழுத்தம் கொடுக்க அமெரிக்க பிரதேசங்களை அடையும் திறன் கொண்ட ஆயுதங்களை ஏவுவதற்கு வடகொரியா முயற்சிப்பதாக சர்வதேச அரசியல் பரப்பில் எச்சரிக்கைகள் எழுகையில், Hwasong-12ஐக் காட்டுவதன் மூலம் வடகொரியா இந்த ஆண்டு இதுவரை தனது வலுவான செய்தியை அமெரிக்காவிற்கு அனுப்பியுள்ளது.

# வடகொரியாவின் ஏவுகணைப் பரிசோதனையும் இராஜதந்திரமும்!

**ஐ.வி.மகாசேனன்**

சர்வதேச அரசியலில் அரசுகளிடையேயான உறவில் எப்போதுமே யதார்த்தவாத சிந்தனையான அராஜகவாதமும் அதிகாரமுமே நிரம்பி உள்ளது. சர்வதேச அரசியல் நிகழ்வுகளை தேடுமிடத்து மாறி மாறி அராஜகம் பற்றிய உரையாடல்களே முதன்மை பெறுகிறது. அத்துடன் அவற்றுக்கிடையிலான இடைவினை தொடர்புகளும் தவிர்க்க முடியாததாகக் காணப்படுகிறது. குறிப்பாக கடந்த ஆறு வாரங்களாக தொடர்ச்சியாக ரஷ்ய-உக்ரைன் விவகாரத்தை மையப்படுத்தியே உலக அரசியல் பயணிக்கிறது. அதனை விடுத்து வேறு சர்வதேச அரசியல் நிகழ்வினை தேடுவோமாயினும் கூட அதிலும் ஏதொவொரு வகையில் ரஷ்ய-உக்ரைன் விவகாரத்தின் தாக்கங்களும் உரையாடப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகும். இதுவே சர்வதேச அரசியலின் யதார்த்தமுமாகும். இக்கட்டுரை ரஷ்ய-உக்ரைன் விவகாரத்துக்குள் உலக நாடுகளின் பார்வைகள் குவிந்திருக்கையில், வடகொரியா அணுவாயுத பரிசோதனையில் நிகழ்த்தி வரும் உச்சத்தை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

வடகொரியா உலக நாடுகளின் எச்சரிக்கைகளையும் மீறி அவ்வப்போது ஏவுகணைச் சோதனை நடத்தி வருகிறது. இந்நிலையில் வடகொரியா ஜனவரி மாதத்தில் மாத்திரம் ஏழாவது முறையாக ஏவுகணைச் சோதனையை ஜனவரி-30 (2022) மேற்கொண்டுள்ளது. வடகொரியாவின் கிழக்குக் கடற்கரையில் ஏவுகணை ஏவப்பட்டதாக தென்கொரியா தெரிவித்துள்ளது. இந்த ஏவுகணை 2,000 கிலோமீட்டர் உயரத்தை எட்டியதாகவும், 800 கி.மீ தூரத்திற்கு 30 நிமிடங்கள் பறந்ததாகவும் ஜப்பானிய மற்றும் தென்கொரிய அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர். இந்த ஏவுகணை, ஜப்பான் கடலில் விழுந்தது. கடந்த 2017 ஆம் ஆண்டுக்குப் பிறகு வடகொரியா சோதித்து பார்க்கும் மிகவும் சக்தி வாய்ந்த ஏவுகணை இதுவாகும் என கூறப்படுகிறது.

வடகொரியாவின் ஏவுகணை பரிசோதனை தொடர்பான தகவலை தென்கொரியா மற்றும் ஜப்பான் அதிகாரிகள் முதலில் வெளிப்படுத்திய போதிலும், வடகொரிய அரச ஊடகமான KCNA செய்தி நிறுவனம் பரிசோதனையின் இரண்டு புகைப்படங்களை வெளியிட்டு வடகொரிய அரசு Hwasong-12 என்ற இடைநிலை ஏவுகணையை (IRBM) உள்ளூர் நேரப்படி ஜனவரி-30 காலையில் சோதித்ததை உறுதிப்படுத்தியுள்ளது. மேலும், Hwasong-12 என்ற இடைநிலை ஏவுகணை பசுபிக் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்காவின் தீவுப்பிரதேசமாகிய குவாமை அடையும் திறன் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளது. ஏவுகணையில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களாக KCNA செய்தி நிறுவனத்தின் வெளியீடுகளில் சீனாவுடனான நாட்டின் எல்லைக்கு அருகில் உள்ள ஏவுகணையிலிருந்து எழும்புவதைக் ஒருவர் படம் பிடித்துள்ளார். மற்றொன்று விண்வெளியில் இருந்து ஏவுகணையின் போர்க்கப்பலில் பொருத்தப்பட்ட கேமரா மூலம் எடுக்கப்பட்ட படங்களைக் காட்டுகிறது.

அணுசக்தி பேச்சுவார்த்தைகளை மறுதொடக்கம் செய்ய அமெரிக்க ஜனாதிபதி பைடன் நிர்வாகத்திற்கு அழுத்தம் கொடுக்க அமெரிக்க பிரதேசங்களை அடையும் திறன் கொண்ட ஆயுதங்களை ஏவுவதற்கு வடகொரியா முயற்சிப்பதாகச் சர்வதேச அரசியல் பரப்பில் எச்சரிக்கைகள் எழுகையில், Hwasong-12 ஐக் காட்டுவதன் மூலம் வடகொரியா இந்த ஆண்டு இதுவரை தனது வலுவான செய்தியை அமெரிக்காவிற்கு அனுப்பியுள்ளது. ஒரு நிலையான பாதையில் சுடப்படும் போது, அணுசக்தி திறன் கொண்ட தரையிலிருந்து தரையிறங்கும் ஆயுதம் கோட்பாட்டளவில் ஜப்பானில் எங்கும் அடையும் திறன் கொண்டது. அதே போலவே குவாம் மற்றும் அலாஸ்காவின் அலுடியன் தீவுகள் சங்கிலியின் மேற்கு முனை வரை தாக்கும் திறன் கொண்டவை என்றே அமெரிக்க அதிகாரிகள் கவலையைப் பகிர்ந்துள்ளனர். மேலும், குறுகிய தூர ஏவுகணைகளை உள்ளடக்கிய தொடர்ச்சியான பரிசோதனைகளுக்குப் பிறகு, அணு ஆயுதங்கள் அல்லது அமெரிக்க நிலப்பரப்பின் சில பகுதிகளைத் தாக்கும் திறன் கொண்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் (ICBMs) சோதனைகளுக்குத் தயாராகலாம் என்று சில பார்வையாளர்கள் நம்புகின்றனர். வடகொரியா 2017 இல் Hwasong-15 ICBMI சோதனை செய்தது. இது அமெரிக்க நிலப்பரப்பைத் தாக்கும் திறனைப் பெற்றுள்ளது என்று சில நிபுணர்கள் கூறியுள்ளனர். இதன் வரிசையிலேயே ஜனவரி-30 இல் பரிசோதிக்கப்பட்ட Hwsong-12 இடைநிலை ஏவுகணையினையும் மதிப்பீடு செய்கிறார்கள். இதனடிப்படையில் வடகொரியாவின் அதிகரித்து வரும்



ஏவுகணைச் சோதனைகள் அணு ஆயுதங்கள் மற்றும் ICBM சோதனைகளை மீண்டும் தொடங்குவதற்கு முன்னோடியாக இருக்கலாம் என்ற தேடலை சர்வதேச அரசியல் பரப்பில் உருவாக்கியுள்ளது. இதனை நுணுக்கமாக அவதானித்தல் வேண்டும்.

வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் தலைமையில் ஜனவரி-31 இல் மேற்கொள்ளப்பட்ட ஒரே மாதத்தின் ஏழாவது ஏவுகணைப் பரிசோதனையானது, பொருளாதாரத் தடைகள் நிவாரணம் என்பவற்றுக்குள்ளும் அதன் அணுசக்தி அந்தஸ்தை சர்வதேச அங்கீகாரம் பெறுவதற்கான உந்துதலின் ஒரு பகுதியாகத் தோன்றுகிறது. அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் மற்றும் பெருந்தொற்று தொடர்பான சிக்கல்களால் கிம் ஜாங் உன், வெளியில் இருந்து நிவாரணம் பெற விரும்பினாலும் அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகளை சரணடைய விரும்பவில்லை என்பதனையே தொடர்ச்சியான ஏவுகணைப் பரிசோதனை மூலம் உறுதி செய்கின்றார். கிம்மின் அழுத்தப் பிரச்சாரம் வாஷிங்டனை வடக்கை ஒரு அணுசக்தியாக ஏற்கும் படி கட்டாயப்படுத்துவதையும் அவர்களின் அணு ஆயுதக் குறைப்பு-உதவி இராஜதந்திரத்தை பரஸ்பர ஆயுதக் குறைப்புக்கான பேச்சுவார்த்தைகளாக மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இரண்டாவது, சமகால சர்வதேச அரசியலில் அமெரிக்காவின் தலைமை உலக அதிகாரத்திற்கு சரியான தலைமையை வழங்கக்கூடிய ஆளுமையை கொண்டிருக்கவில்லை என்ற பார்வை காணப்படுகின்றது. குறிப்பாக, ஜோ பைடன் ஆட்சிப்பீடமேறி ஒரு வருடத்தினுள் ஆப்கானிஸ்தானிலிருந்து படைகளை வெளியேற்றியமை ஐரோப்பாவுக்கு தலைமை தாங்க முடியாமை ஆக்காஸ் உடன்பாட்டில் பிரான்ஸ் ஜேர்மனி என்பனவற்றை அரவணைத்துச் செயற்படாமை மற்றும் ரஷ்ய-உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவின் அதிகாரம் மேலோங்கும் தோற்றம் என விமர்சனங்களை மாத்திரமே பெற்றுள்ளார். இக்காலப்பகுதியை தனக்குச் சாதகமான களமாக பயன்படுத்திக்கொள்ள வடகொரியாவின் ஜனாதிபதி கிம் ஜோங் உன் எத்தனித்துள்ளார் என்பதையே வட கொரியாவின் ஏவுகணை நடவடிக்கை புலப்படுத்துகிறது. அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்ற பிறகு, வடகொரியா சோதனை செய்ததில் ஜனவரி - 31 மேற்கொண்ட பரிசோதனை மிகவும் சக்தி வாய்ந்த ஏவுகணையாக உள்ளது. இது இராஜதந்திரத்தில் நீடித்த முட்டுக்கட்டைக்கு மத்தியில் வாஷிங்டன் மற்றும் அண்டை நாடுகளிடமிருந்து சலுகைகளைப் பெறுவதற்காக சர்வதே அரசியலின் அரசுகளிடையேயான உறவுகளின் முதன்மையான அராஜகவாத யதார்த்தவாதக் கோட்பாட்டை மீண்டும் புத்துயிரளித்து முதன்மைப்படுத்த கிம் ஜோங் உன் தயாராகுகிறார் என்பதே வெளிப்படுகிறது.

மூன்றாவது, சர்வதேச அரசியலில் சமகாலத்தில் ரஷ்ய -உக்ரைன் விவகாரத்திலேயே அமெரிக்க மற்றும் மேற்கு நாடுகள் அதிக கவனத்தை குவித்து வருகின்றன. இச்சூழ்நிலையில் வடகொரியா தனது பிராந்திய முரண்பாட்டு அரசுகளுக்கு நெருக்கடியை உருவாக்குவதனூடாக தனது அதிகாரத்தைப் பிராந்தியத்தில் பலப்படுத்தி கொள்வதற்கான முன் முயற்சிகளை மேற்கொள்வதனை இராணுவ பலத்தாலும் ஆயுத வலுவாலும் நடவடிக்கையூடாக அறிய முடிகிறது. ஜப்பானின் வெளியுறவு அமைச்சகத்தின் ஆசிய மற்றும் கடல்சார் விவகாரங்களுக்கான இயக்குநர் ஜெனரல் ஃபுனாகோஷி டேகிரோ, வடகொரியாவிற்கான பைடனின் சிறப்பு தூதர் சுங் கிம் மற்றும் தென்கொரியாவின் அணுசக்தி தூதர் நோ கியு-டுக் ஆகியோருடன் தனித்தனியாக தொலைபேசி அழைப்புகளில் வடகொரியாவின் மேம்படுத்தப்பட்ட ஏவுகணைப் பரிசோதனை தொடர்பாக விவாதித்ததாக தெரிவித்துள்ளார். மேலும், ஏவுகணையின் மேம்படுத்தப்பட்ட அழிவு சக்தி மற்றும் வடகொரியாவின் அச்சுறுத்தலை எதிர்கொண்டு முத்தரப்பு ஒத்துழைப்பை மீண்டும் உறுதிப்படுத்தியது என்ற புரிதலை அதிகாரிகள் பகிர்ந்து கொண்டதாக ஜப்பான் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது வடகொரியாவின் தொடர்ச்சியான ஏவுகணைப் பரிசோதனை பிராந்தியத்தைக் கொதிநிலைக்கு தள்ளியுள்ளது என்பதையே உறுதி செய்கிறது.

நான்காவது, ரஷ்யாவுக்கான ஆதரவுத் தளமாகவும் வடகொரியாவின் ஏவுகணை நடவடிக்கைகளை விளங்கிக்கொள்ளக்கூடியதாகவும் உள்ளது. ரஷ்ய-உக்ரைன் விவகாரத்தில் உக்ரைனுக்கான ஆதரவு தளத்தில் அமெரிக்காவின் முழுமையான இராணுவ பார்வையும் ரஷ்யா மீதே குவிக்கப்பட்டுள்ளது. இத்தருணத்தில் வடகொரியாவின் ஏவுகணைப் பரிசோதனை அமெரிக்காவுக்குக் கடும் நெருக்கடியைக் கொடுக்கக்கூடியதாகும். குறிப்பாக ஜனவரி-31 பரிசோதிக்கப்பட்ட Hwasong-12 இடைநிலை ஏவுகணை தொடர்பான செய்தியிடலிலும் பசுபிக் பிராந்தியத்திலுள்ள அமெரிக்காவின் தீவை தாக்கும் திறன் கொண்டதென குறிப்பிட்டுள்ளமையானது ஏவுகணைப் பரிசோதனை முழுமையாக அமெரிக்காவிற்கு சவால் விடுவதற்கான நகர்வு என்பதையே வெளிப்படுத்தி நிற்கிறது. அமெரிக்காவிற்கு நெருக்கடியை அதிகரிப்பதனூடாக தனது நட்பு நாடான ரஷ்யாவிற்கு ஆதரவான சமிக்ஞையை வடகொரியா வெளிப்படுத்துவதாகவும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ரஷ்ய- உக்ரைன் விவகாரம் உலக அரசியலில் முதன்மையான சர்வதேச பிரச்சினையாக உருவமெடுத்த சமகாலப் பகுதியிலேயே ஜனவரி மாதத்துக்குள் ஏழு ஏவுகணைப் பரிசோதனைகளை வடகொரியா மேற்கொண்டுள்ளமையானது கவனிக்கத் தக்க விடயமாகும்.



எனவே, வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் அமெரிக்காவினை சூழ்ந்துள்ள நெருக்கடிகளையும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் ஆளுமைப் பலவீனங்களையும் கடந்த ஒரு வருடங்களில் வெகுவாகப் பரிசீலித்துள்ளார். இவ் முன் அனுபவங்களை கொண்டே 2022 ஆம் ஆண்டின் முற்பகுதியிலிருந்து வடகொரியாவின் ஏவுகணை அரசியலுக்கு மீள் புத்துயிரளித்து வருகின்றார். வளர்ச்சியடைந்து வரும் ஏவுகணைப் பரிசோதனை நடவடிக்கைகளூடாக நீண்ட காலமாக நிறுத்தப்பட்ட அணுசக்திப் பேச்சுவார்த்தைகள் மீது பைடன் நிர்வாகத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கான அதன் நோக்கத்தை வழக்கத்திற்கு மாறாக வேகமான சோதனைகளால் சுட்டிக்காட்ட முனைவதனையே கிம் ஜோங் உன்னின் ஜனவரி மாத ஏழு ஏவுகணை பரிசோதனைகளும் வெளிப்படுத்தி நிற்கிறது. ■



# நீதியற்ற ஊரில் நாதியற்றவள் பிள்ளை பெற்றால் என்ன நடக்கும்?

**அவதானி**

**“தென்னிலங்கை சிறைகளிலும் ஏனைய பிரதேசங்களிலும் போதைவஸ்துக்கு அடிமையானவர்கள் இல்லையா..? வடக்கிற்கு எவ்வாறு போதைவஸ்து வந்துகொண்டிருக்கிறது...? கடல் மார்க்கமாக வருமாயின், கடலில் கண்காணிப்பில் ஈடுபடும் - ரோந்து செல்லும் கடற்படையினர் என்ன செய்கிறார்கள்..? தென்னிலங்கையிலிருந்து தரைமார்க்கமாகப் போதைவஸ்து வடக்கிற்கு வருமாயின் வீதிகளில் கடமையிலிருக்கும் காவல்துறை என்ன செய்கிறது..?”**

“இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகின்றார் ஞானத் தங்கமே அவர் ஏதும் அறியாரடி ஞானத் தங்கமே..” இந்தப் பாடல் வரிகளைக் கேட்டிருப்பீர்கள். 1967 ஆம் ஆண்டு வெளிவந்த திருவருட்செல்வர் திரைப்படத்தில் இப்பாடல் ஒலிக்கிறது.

அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்திருக்கும் நீதியமைச்சர் அலி சப்ரி திருவாய் மலர்ந்தருளிய உரைகளைக் கேட்டதையடுத்து மேற்குறித்த பாடல்தான் நினைவுக்கு வந்தது.

அவர் சொன்னார்: “ வடக்கில் உள்ள சில அரசியல்வாதிகள், இங்குள்ள இளைஞர், யுவதிகளைத் தவறாக வழிநடத்துகிறார்கள். கிடைக்காது எனத் தெரிந்து கொண்டும், அதனைப்பெற முயற்சிக்கின்றோம் எனச் சொல்லிக்கொண்டு இங்குள்ள மக்களை ஏமாற்றுகிறார்கள்.”

அவர் சுட்டிக்காட்டியிருப்பது, வட பகுதியிலிருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியிருக்கும் உறுப்பினர்களைத்தான் என்பது தெளிவானது.

அவ்வாறாயின், இன்றைய அரசு குறிப்பிட்ட இளைஞர், யுவதிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துள்ளதா..? போர்க்காலத்தில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த சில வருடங்களாக அறப்போராட்டம் நடத்திவருகிறார்களே..? அவர்களுக்கு என்ன நீதி கிடைத்திருக்கிறது?

இவர்கள் நீதிஅமைச்சர் குறிப்பிடும் தமிழ் அரசியல்வாதிகளுக்குப் பின்னால் செல்லவில்லையே! காணாமல் போனவர்கள் பற்றி நீதி கேட்டு அறப்போராட்டம் ஒரு புறம் நடக்கின்றது. அத்துடன் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற குரலும் பல காலமாக ஒலிக்கிறது. இந்த இரண்டு விவகாரங்களுமே நீதியமைச்சரின் கவனத்திற்குட்பட்ட விடயங்கள்.

எனினும், யாழ். சிறையிலிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் போதைவஸ்துக்கு அடிமையானவர்கள் என்று சொல்லி, அவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கவேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கையை வேறு திசைக்குத் திருப்புகிறார் நீதியமைச்சர்.

தென்னிலங்கை சிறைகளிலும் ஏனைய பிரதேசங்களிலும் போதைவஸ்துக்கு அடிமையானவர்கள் இல்லையா..? வடக்கிற்கு எவ்வாறு போதைவஸ்து வந்து கொண்டிருக்கிறது..? கடல் மார்க்கமாக வருமாயின், கடலில் கண்காணிப்பில் ஈடுபடும் - ரோந்து செல்லும் கடற்படையினர் என்ன செய்கிறார்கள்..?

தென்னிலங்கையிலிருந்து தரைமார்க்கமாகப் போதைவஸ்து வடக்கிற்கு வருமாயின் வீதிகளில் கடமையிலிருக்கும் காவல்துறை என்ன செய்கிறது..?

அவ்வாறாயின் போதைவஸ்து பரிமாற்றத்திற்குள் ஏதோ மர்மம் இருப்பதாகத்தானே அர்த்தம். தென்னிலங்கையில் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த சிலர் சுட்டுக்கொல்லப்பட்ட செய்திகளின் பின்னணி குறித்து நீதியமைச்சர் ஏதும் அறிவாரா..? அரசுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுக்கும் தமிழ் அரசியல்வாதிகளைத்தான் அவர் சுட்டிக்காண்பித்து பேசுகிறார் என்பது தெளிவானது.

அதேசமயம் அரசை ஆதரித்துக் கொண்டு, அரசில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் இருக்கிறார்களே. இவர்களில் இருவர் முன்னாள் ஈழவிடுதலைப் போராளிகள். இவர்களைத் பாராளுமன்றத்திற்கு அனுப்பிய ஏராளமான தமிழ் வாக்காளர்கள் வடக்கிலும் கிழக்கிலும் இருக்கிறார்களே. அவர்களின் அபிலாஷைகள் குறித்து யார்தான் பேசுவது..?

மைத்திரி - ரணில் நல்லிணக்க ஆட்சிக்கு முண்டு






கொடுத்துக் கொண்டிருந்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள். இவர்களது தேன்நிலவு காலத்திலாவது காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைத்திருக்க வேண்டும். அரசியல் கைதிகள் விடுதலையாகியிருக்க வேண்டும்.

ஆனால், அதுவும் நடக்கவில்லையே..?

இலங்கை சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த நீதியமைச்சர் அலி சப்ரி அவர்களும், மற்றும் ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன், சிவநேசதுரை சந்திரகாந்தன், விநாயகமூர்த்தி முரளிதரன், வியாழேந்திரன் ஆகியோரெல்லாம் இணைந்திருக்கும் இன்றைய அரசில், காணாமலாக்கப்பட்டவர்களுடைய உறவினர்களுக்கும் நீதி கிடைக்காதமையினாலும், அரசியல் கைதிகள் விடுதலை என்பது தொடர்ந்தும் பேசும் பொருளாகவே இருப்பதனாலும்தானே, நீதி அமைச்சர் சொல்லும் தமிழ் இளைஞர், யுவதிகளும் நீடித்த போரினால் பாதிக்கப்பட்ட மக்களும் குறைந்தபட்சம் தங்களது கோரிக்கைகளுக்காகத் தங்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் பின்னால் செல்ல நேரிட்டுள்ளது.

அரசுடன் ஐக்கியமாகியிருக்கும் மேற்குறிப்பிட்ட தமிழ் அரசியல்வாதிகள் இதுவரையில் காணாமலாக்கப்பட்டவர்கள் குறித்தும் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாகவும் ஏதும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்திருக்கலாம்தானே..?

தென்னிலங்கையில் பத்து வருடங்களுக்கு முன்னர் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிய கொடவின் மனைவி சந்தியா இன்றும் நீதி கோரி தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி வருகிறார். இவர் எந்த அரசியல்வாதிக்குப் பின்னால் சென்றார்..?

இறுதியில் கொழும்பு முகத்துவாரம் காளிகோயிலில் நேர்த்திவைத்து தனது தலையை மொட்டை அடித்து இன்றும் போராடிக்கொண்டிருக்கிறாரே அந்தப்பெண்மணி. இது தென்னிலங்கையில் நடக்கிறது.

அரசு சார்பு அமைச்சர்கள் சிலர், அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை எனவும், காணாமலாகிய பலர் வெளிநாடுகளில் வசிக்கிறார்கள் எனவும் சொல்லி வந்திருப்பதை ஊடகங்களில் படித்திருக்கின்றோம்.

அதேசமயம் இன்றைய அரசின் பிரதிநிதிகளான சிலர் கடந்த தேர்தல் காலத்தில் கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு அரசியல் கைதியின் உறவினர்களையும் குழந்தைகளையும் சந்தித்து, தாம் பதவிக்கு வந்ததும், குறிப்பிட்ட அரசியல் கைதியின் விடுதலைக்கு ஆவன செய்வதாகக் கூறினரே..? ஆனால், அது வெறும் தேர்தல் கால பொய் வாக்குறுதி என நிரூபணமாகிவிட்டதே!

நீதி அமைச்சர் யாழ்ப்பாணத்தை விட்டு விடைபெறுமுன்னர் ஒரு உறுதிமொழியையும் கூறிவிட்டுச்சென்றுள்ளார்.

அதாவது இனிவரும் காலங்களில் தானும் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தும்போது, தமிழ்பேசும் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப்பேசி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பாராம்.

இச்செய்தி, செய்தியாகவே இருக்குமா..? நடைமுறைப்படுத்தப்படுமா..? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

சில மாதங்களுக்கு முன்னர், பாராளுமன்றத்தில் நடந்துகொண்டிருந்த விவாதங்களை பக்கத்து அறையிலிருந்து செவிமடுத்துக்கொண்டிருந்த ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, மும்மொழியிலும் சிறப்பாக பேசிய இளம் தமிழ் அரசியல்வாதி கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினரை அழைத்து, “ நீங்கள் வாதிடும் விடயங்களையெல்லாம் என்னுடன் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும்” என்று நல்லெண்ண சமிக்ஞை விடுத்தாரோ..?

அதன் பின்னர் ஏதாவது நடந்ததா..?

இப்போது வடக்கிற்கு வந்து திரும்பியிருக்கும் நீதியமைச்சர் மற்றும் ஒரு கண்துடைப்புக் காரியத்தை சொல்லிவிட்டுச் சென்றுள்ளார்.

விடாக்கண்டர்களும் கொடாக்கண்டர்களும் இருக்கும்வரையில், பாதிக்கப்பட்டவர்களின் நீதிக்கான போராட்டம் தொடர்ந்துகொண்டு தானிருக்கும். ■

# சரிந்து கொண்டிருக்கும் ஒரு சரித்திரம்

## உடனடி உதவிக்கரம் நீட்ட வேண்டிய பாடசாலைகள் 07

திருநாவுக்கரசு தயந்தன்
மூத்த பொறியியலாளர்

*எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் சாதிப்பதில் பெரும்பான்மையாக இருந்த சரித்திரங்களைக் கொண்டிருந்த சமூகம் எங்களுடையது! ஆனால் பல்வேறு உள்ளக வெளியக அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் எங்கள் சமூகத்தின் கல்விச் சரித்திரங்கள் சரிந்து வருவது வெளிப்படை உண்மை! உண்மைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தால் மீண்டும் பல சாதனை, சரித்திரங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறு காரணிகளை யதார்த்தமாக ஆராய்வதோடு நடைமுறைச்சாத்தியமான பரிந்துரைகளையும் தேவையான மாற்றங்களையும் விவாதிக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்! சுயவிருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளி, நடுநிலைமையுடன் தொடரை வாசிக்குமாறும் பொருத்தமான களப்பணிகளிலும் செயற்பாடுகளிலும் இணையுமாறும் வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!*

*-ஆசிரியர்*

அத்தியாயம் - 05

**பகுதி - 02**

இன்னுமொரு உண்மையையும் பகிரங்கப்படுத்த விரும்புகிறேன். வடக்கு மாகாணத்தில் முக்கிய பாடங்களான கணிதத்திலும் தமிழிலும் சித்தி பெற்றிருந்த 955 மாணவர்கள், தாங்கள் “S” எடுத்திருந்த ஒரு பாடத்தில் “C” எடுக்க முடியாததாலும், 981 மாணவர்கள் ஏதாவது ஒரு மேலதிக பாடத்தில் “S” சித்தி பெறமுடியாததாலும் உயர்தர தகுதியை இழந்தது உங்களுக்குத் தெரியுமா? இதில் ஏதாவது ஒன்று நடந்திருந்தாலும் கிட்டத்தட்ட 74% சித்தி விகிதத்துடன் வட மாகாணம் 5 ஆம் இடத்தில் இருந்திருக்கும்!

வர்த்தமானியில் வெளியிடப்பட்டும் இன்னமும் அவ்வாறான விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த நிலைக்கு வடக்குக் கல்வி நிர்வாகம் தானே முழுப் பொறுப்பை ஏற்கவேண்டும்?

அதே அறிக்கையில் சொல்லப்பட்ட விடயங்களைப் பொறுக்கி எடுத்து தென் பகுதி பாடசாலைகள் பயன்படுத்துகிறார்களே அது தெரியுமா? எங்கள் மண்ணில் கல்விப் புலத்தில் நடக்கும் எதுவும் தெரியாமல் நீங்கள் என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்?

பதினொரு வருடமாகப் போரின் வடுக்களைப் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள்! அவை பேசப்பட வேண்டியவைதான்! ஆனால் எம் கல்விச் சமூகமும் அழிந்து போன பின்னர் நீங்கள் யாரைப்பற்றி பேசப்போகிறீர்கள்? நீங்கள் படித்த பாடசாலைகள் நாளடைவில் ஒவ்வொன்றாக மூடப்பட்ட பின்னர் உங்கள் அத்திவாரங்கள் இடிக்கப்பட்ட பின்னர் பேசி என்ன பயன்? நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் மனச்சாட்சிகளின் முன் குற்றவாளிக் கூண்டில் நிற்பீர்கள்!

**பல கண்கள் அவதானிக்க ஆரம்பித்தாலே, பாடசாலை நிர்வாகம் விழித்துவிடும்! வேலைகளை செய்யாது அதிபர்/ஆசிரியர் உள்ளிட்ட யாராவது இருப்பின் பகிரங்கப்படுத்துங்கள்!**

ஒவ்வொரு தவணைப் பெறுபேறுகளையும் பெற்று ஊரவர்கள் உதவியுடன் அந்த மாணவர்களின் பெற்றோருடன் பேசித் தேவையான சமூகப் பொருளாதார உதவிகளைச் செய்யுங்கள்!

கல்வித்திணைக்களம் வெளியிட்ட புள்ளிவிபரங்களில் குறைந்த அளவு மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளே அதிக சரிவில் உள்ளது வெளிப்படையாகி உள்ளது.

| G.C.E. O/L 2019 Student Population Ranges and Qualified for A/L Percentages Northern Province | | | | | |
|---|---|---|---|---|---|
| Student Count - O/L | No. of School | No. of Students | A/L Qualified # | A/L Qualified % | Contribution to A/L Qualified % of NP |
| <15 | 179 | 1688 | 758 | 44.91 | 4.56 |
| > 15 - < 41 | 177 | 4249 | 2070 | 48.72 | 12.45 |
| > 41 - < 85 | 84 | 4870 | 2863 | 58.79 | 17.22 |
| > 85 | 40 | 5815 | 4415 | 75.92 | 26.56 |
| Total | 480 | 16622 | 10106 | 60.80 | 60.80 |


அட்டவணை 7

**மாணவர்கள் 955**

தாய்மொழி சித்தியுடன் 2C 3S அல்லது அதற்கும் கூடிய பெறுபேற்றினைப் பெற்ற 955 மாணவர்கள் பரீட்சைத் திணைக்களத்தின் க.பொ.த. உயர்தரத்துக்கு தகுதிபெற்றோர் எனும் வகுதிக்குள் உள்வாங்கப்படுவதற்கான தகமையான 3C2S எனும் பெறுபேற்றினை பெறவில்லை. இவர்கள் S சித்திபெற்ற பாடமொன்றில் C சித்தி பெற்றிருப்பார்களானால் வடக்கின் பெறுபேறு கணிசமாக உயர்ந்திருக்கும். இவர்கள் தொடர்பான பாட ரீதியான பகுப்பாய்வு வருமாறு.

| Results | Tamil | Mathematics |
|---|---|---|
| + | 0 | 1 |
| B | 1 | 6 |
| C | 268 | 76 |
| S | 686 | 378 |
| W | 0 | 494 |
| Grand Total | 955 | 955 |

| Results | Basket 1 (Social Science Subjects) | Basket 2 ( Aesthetics Subjects) | Basket 3 ( Technical Subjects) |
|---|---|---|---|
| + | | 2 | |
| A | 2 | 7 | 7 |
| B | 19 | 35 | 47 |
| C | 178 | 433 | 313 |
| S | 590 | 432 | 511 |
| W | 166 | 46 | 77 |
| Grand Total | 955 | 955 | 955 |




இந்த அவலங்களை வாசிக்கும் போது உங்கள் கண்கள் பனிக்கவில்லையாயின் நீங்கள் மனிதத்துவத்தை இழந்து விட்டீர்கள் என்றுதான் கொள்ள வேண்டும்.

நீங்கள், இந்த உலகின் எந்த மூலையில் இருந்தாலும் ஊரில் இருந்தாலும் சரி இன்றே உங்கள் பாடசாலைகளைத் தொடர்பு கொள்ளுங்கள்! என்ன நடக்கிறது என்று கேளுங்கள்!

என்ன செய்யலாம் என கலந்தாலோசியுங்கள்! அடுத்தடுத்த வருடங்களில் பரீட்சை எழுத இருக்கும் ஒவ்வொரு மாணவனையும் மாணவியையும் தொடர்பு கொள்ளுங்கள்! அவர்கள் பெற்றோரைத் தொடர்பு கொள்ளுங்கள்! ஊரில் தூங்கிக் கொண்டிருக்கும் மற்றைய கல்வியியலாளர்களையும் தட்டி எழுப்புங்கள்! வீட்டில் விஜய் ரீவியும் சன் ரீவியும் பார்த்துக் கொண்டு பிள்ளைகளின் கல்வியைப் பற்றி அக்கறை அற்று இருக்கும் அந்த சில பெற்றோருக்கும் சற்று அறிவைக் கொடுங்கள்! மாமா வெளி நாட்டுக்கு கூப்பிடுவார் என்பதால் அவர்கள் பிள்ளைகளின் கல்வியை மறந்திருக்கலாம்! எல்லோரும் கலந்து ஆலோசியுங்கள்! கல்வித் திணைக்களத்தால் கொடுக்க முடியாத வளங்களை நீங்கள் உருவாக்குங்கள்.

அந்த அந்த பிரதேசங்களில் இருந்து பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களையோ/ ஓய்வு பெற்ற ஆசிரியர்களையோ/ கல்வியறிவு உள்ள வேறு துறையில் வேலை செய்யும் யாரை வேண்டுமானாலும் பயன்படுத்தி மேலதிக வகுப்புகளை கல்லூரியில் / பாடசாலைகளில், சமூக நிலையங்களில் ஏற்பாடு செய்யுங்கள்!

பல கண்கள் அவதானிக்க ஆரம்பித்தாலே, பாடசாலை நிர்வாகம் விழித்துவிடும்! வேலைகளை செய்யாது அதிபர்/ஆசிரியர் உள்ளிட்ட யாராவது இருப்பின் பகிரங்கப்படுத்துங்கள்!

ஆனால் குறைந்த அளவு மாணவர்கள் இருப்பதால் ஆசிரியர்களுக்கும் பாடசாலைக்கும் ஆர்வம் குறைந்து விடும் என்பதை நான் முற்றாக நம்பவில்லை. அது உங்கள் முயற்சி சம்பந்தப்பட்டது. நல்ல உதாரணம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாசாலை குறைந்த வளங்களுடன் 20 ற்கு உட்பட்ட மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய இப்பாடசாலை, 100% சித்தியைப் பதிவு செய்ய முடிந்தது.

பாடசாலை சமூகமும் சூழ உள்ள சமூகமும் சேர்ந்து உழைத்த உழைப்பின் வெற்றி அது! அண்மைய விழிப்புணர்வுகளுடன் சில சமூகக்குழுக்கள் ஏற்கெனவே ஆரம்பித்து விட்டன! உரும்பிராயின் இரண்டு பாடசாலையின் வீழ்ச்சியை சரிசெய்ய 20 இளைஞர்கள் புறப்பட்டுஉள்ளனர்! பல புதிய கல்விப் புல கட்டமைப் புகள் பரந்துபட்ட ரீதியிலும் கிராமிய ரீதியிலும் பேசப்படுகின்றன. நேற்றும் “செயல்” என்ற புதிய அசைப்பு அங்குரார்ப்பண கூட்டத்தை நடத்தியது. அரசியலுக்கு அப்பாற்பட்டு எமது மாகாணங்களின் கல்விப் புலத்திற்கான நீண்டகால திட்டமிடல்களை (Strate gies) மேற்கொள்ளக் கூடிய அமைப்புகளின் உருவாக்கங் கள் காலத்தின் தேவையாகி உள்ளது. ஒவ்வொரு கிராமங்களுக்கும் அவ்வாறானஅமைப்புகள் அவசியம்!

ஆக, நீங்கள் ஒவ்வொருவரும், உங்கள் பாடசாலை அல்லது உங்கள் தாய்மண்ணான நீங்கள் பிறந்த ஊரில் உள்ள பாடசாலைகளில் எடுத்துக் கொள்ளும் அல்லது நாளை முதல் எடுத்துக் கொள்ளப்போகும் அக்கறை ஒரு மாபெரும் மாற்றத்திற்கான புரட்சிக்கு வித்திடும் என நம்புகிறேன். சமூக அழுத்தம் என்பது மிகப்பலம் பொருந்தியது. சக்தி வாய்ந்த ஆயுதம்! அது பல குறைபாடுகளைச் சரிசெய்வதோடு மட்டுமல்லாது பல தவறுகள் செய்பவர்களையும், சோம்பேறித்தனமாக இருப்பவர்களையும் கட்டுப் பாட்டில் வைக்கும்! அத்தோடு ஒவ்வொரு ஊரிலும் உண்மையாக உழைத்துக் கொண்டும் போராடிக்கொண்டும்இருப்பவர்களுக்கு உரமூட்டி உறுதிப் படுத்தும்! சரிந்து கொண்டிருக்கும் எங்கள் சரித்திரத்தில் படுகுழியில் வீழ்ந்திருக்கும் சில பாடசாலைகளை அதிஉச்ச சக்தியைப் பிரயோகித்து மீட்டெடுப்போம். இனிவரும் காலங்கள் எங்கள் பிள்ளைகளின் கல்வி சரித்திரங்களை மீட்டெடுத்த காலங்களாக மலரட்டும்.

**“கேடில் விழிச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றையவை”- திருக்குறள்**

வடக்கு மாகாண கல்விப்புலத்தைத் தூக்கி நிறுத்த நீண்ட கள ஆராய்ச்சிகளை உள்ளடக்கி 2014-2015 இல் பல கல்விசார் நிபுணர்கள் சேர்ந்து உருவாக்கிய அறிக்கை எங்கள் தமிழ் அரசியல்வாதிகளால் குப்பையில் போடப்பட்டது உங்களுக்குத் தெரியுமா?

இன்னொரு விடயத்தையும் இங்கு ஞாபகப்படுத்த வேண்டும். 2014-2015 காலப்பகுதியில் வடமாகாண சபையால் போரின் பின்னரான வடமாகாண கல்வி சூழலை ஆராய்ந்து னுச.எதிர்வீரசிங்கம் தலைமையிலான குழுவினால் நீண்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பல பரிந்துரைகள் அடங்கிய நீண்ட அறிக்கை ஒன்று தயாரானது. ஆனால், அரசியல் காரணங்களுக்காக அந்த அறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தாமல் அதே வடமாகாண சபை கைவிட்டதாகக் கூறப்படுகிறது. அந்த அறிக்கையின் சில பரிந்துரைகள் ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்டு


**மாணவர்கள் 981**

கணிதம், தாய்மொழி சித்தியடைந்த 981 மாணவர்கள் உயர்தரம் கற்பதற்குரிய பொதுவான தகைமையான கணிதம், தாய்மொழி சித்தியுடனான 3C 3S தகுதியைப் பெறத் தவறியுள்ளனர். இவர்கள் தொடர்பான பாட ரீதியான பகுப்பாய்வு வருமாறு.

| Results | Tamil | Mathematics |
|---|---|---|
| B | 1 | 7 |
| C | 200 | 135 |
| S | 780 | 839 |
| Grand Total | 981 | 981 |

| Results | Basket 1 (Social Science Subjects) | Basket 2 ( Aesthetics Subjects) | Basket 3 ( Technical Subjects) |
|---|---|---|---|
| + | 2 | 9 | 0 |
| A | 2 | 4 | 7 |
| B | 16 | 24 | 42 |
| C | 123 | 307 | 207 |
| S | 551 | 543 | 551 |
| W | 287 | 94 | 174 |
| Grand Total | 981 | 981 | 981 |

\+ - பரீட்சைக்கு தோற்றவில்லை




**(அத்தியாயம் தொடரும்)**

# சைனஸ் பிரச்சினையில் இருந்து விடுபட இயற்கையான எளிய வைத்தியம்

**பைஷல் இஸ்மாயில்**



சைனஸ் என்று சொல்லப்படக்கூடிய 'Sinusitis' குறித்த தெளிவான புரிந்துணர்வு பெரும்பாலானோரிடம் இல்லை. சாதாரணமாக சளி பிடித்தால் கூட சைனஸ் பிரச்சினையாக இருக்குமோ என்று பதறிப்போய் விடுகிறார்கள். இச்சூழலில் சைனஸ் என்றால் என்ன? அப்பிரச்சினை ஏன் ஏற்படுகிறது? அதனை வீட்டிலேயே குணப்படுத்த இயலுமா? இது போன்ற அடிப்படைக் கேள்விகளை காது, மூக்கு, தொண்டை மருத்துவர் ப்ரீத்தியிடம் கேட்டோம். அவர் அளித்த விளக்கம் இங்கே... நம் தலையின் எடை குறைவாக இருக்க வேண்டும் என்பதற்காக மூக்கை சுற்றியிருக்கும் பகுதிகளில் காற்று நிரம்பி இருக்கும்.

மூக்கின் ஈரப்பதத்துக்காக உற்பத்தியாகிற அர உரள படலம் மூக்குக்கு வராமல், உள்ளேயே காற்று இருக்கும் இடத்தில் அடைத்துக்கொண்டு அதனால் நீர் கோத்தால் அதுதான் சைனஸ் பிரச்சினையாக மாறுகிறது. இதன் விளைவாக தலையின் கனம் கூடுதல், தலைவலி, கண் வலி, மூக்கடைப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் ஏற்படும். அப்படி இல்லையென்றால் தலையின் எடை கனமாகி அதனைக் கழுத்தால் பேலன்ஸ் செய்ய முடியாத நிலை ஏற்படும் என்பதற்காக இயற்கையில் அமைந்திருக்கும் அம்சம் இது. அப்படியாகக் காற்று நிரம்பியுள்ள பகுதிகளுக்குப் பெயர்தான் சைனஸ்.

**மூக்கடைப்பு நோய் (சைனஸ்) பிரச்சினை என்றால் என்ன?**

மூக்கைச் சுற்றி நான்கு ஜோடி காற்றுப்பைகள் உள்ளது. இதற்கு மூக்கடைப்பு, சைனஸ், பீனிசம், நீர்க்கோவை, மூக்கு நீர் பாய்தல், சளி எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது. நாம் சுவாசிக்கும் காற்றை தேவையானளவு வெப்பத்தில் நுரையீரலுக்குள் அனுப்பும் முக்கியமான வேலையை இந்த சைனஸ் காற்றுப் பைகள் செய்கின்றன. அதாவது, 'மியூகஸ் மெம்பரேன்' எனும் சளிச் சவ்வு மூக்கினுள் இருக்கின்றது. இது சைனஸ் திரவத்தை ஈரப்படுத்திக் கொண்டே இருக்கும். இதன் ஊடாக வெளிக்காற்று வெப்பத்துடன் நுழைந்தாலும், அதை தேவையான அளவு வெப்பத்தில் ஈரப்படுத்தி நுரையீரலுக்குள் அனுப்பி விடும். இந்த சைனஸ் அறைகளின் திரவ வடிகால்கள் அடைபட்டு அங்கு திரவம் தேங்கும் போது மூக்கடைப்பு நோய் சைனஸ் (Sinusitis) பிரச்சினை ஏற்படுகிறது.

இன்று ஏராளமானோருக்கு சளி (சைனஸ்) பிரச்சினை உள்ளது. இப்பிரச்சினையால் ஏராளமான மக்கள் ஒவ்வொரு வருடமும் பாதிக்கப்பட்டு வருகிறனர். ஆனால் பலருக்கும் இருப்பது சளி என்று சரியாகத் தெரிவதில்லை. பொதுவாக சளிப் பிரச்சினையை, சாதாரண சளி என்று சரியாகக் கவனிக்காமல் விட்டு விடுவார்கள். இதனால் சளிசுரப்பி அல்லது சுவாசப் பாதையில் அழற்சி மற்றும் வீக்கமடைந்து சுவாசிப்பதில் சிக்கல் நிலையும் ஏற்பட்டு விடும். மேலும், உடல் ஆரோக்கியம் பெருமளவில் பாதிப்பிற்குள்ளாகுவதுடன், சிலசமயங்களில் காது கேட்கும்திறன், பார்வைப் பிரச்சினைகள் போன்றவற்றை சந்திக்கவும் நேரிடலாம் ஒருவருக்குச் சாதாரண சளி என்றால் ஒரு வாரத்தில் குணமாகிவிடும். ஒரு வாரம் கடந்தும் சளி சரியாகாவிட்டால், அவர்களுக்கு சைனஸ் சுரப்பியில் அழற்சி ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்பதை நாம் அறிந்திருப்பது மிக அவசியமாகும்.

**அதன் அறிகுறிகள் என்ன?**

அடிக்கடி தும்மல், மூக்கு ஒழுகுதல், மூக்கடைப்பு, தலைவலி போன்றவை சைனஸ் பாதிப்பின் பொதுவான அறிகுறிகளாகும். கண்ணுக்குக் கீழே, கன்னம், முன்நெற்றி ஆகிய இடங்களைத் தொட்டால் வலி ஏற்படுதல், தலையைக் குனிந்தால் தலைப்பாரம் அதிகரிக்கும், காய்ச்சல், தொண்டையில் சளி கட்டல், இரவு நேரங்களில் கடுமையான இருமல், உடற் சோர்வு, மஞ்சள் அல்லது பச்சை நிறத்தில் கட்டியான மூக்குச் சளி வெளியேறல், சளியில் துர்நாற்றம் வீசும், வாசனை தெரியாது, ருசியை உணர முடியாது, வாய் துர்நாற்றம், காது அடைப்பு, பல் வலி போன்ற அறிகுறிகள் தோன்றும்.

**இவைபற்றி தெளிவாகக் குறிப்பிட முடியுமா?**

முகத்தில் வலி - ஒருவருக்கு சைனஸ் பிரச்சினை இருந்தால் முகத்தில் வலியைச் சந்திக்க நேரிடும். அதுவும் மூக்கைச் சுற்றியுள்ள பகுதியில்தான் வலியை அனுபவிக்கக்கூடும். அத்தோடு மேல் தாடை மற்றும் தாடைகள் இணையும் பகுதிகளிலும் வலியைச் சந்திக்க நேரிடும். தேவையில்லாத அழுத்தம் அல்லது பாரம் முகத்தில் கொடுப்பது போன்ற உணர்வு எழும். ஒரு வேளை சளி பிரச்சினைகளுக்கு மருந்து எடுத்தாலும் இந்த வலியில் இருந்து விடுபட முடியாது. இன்னும் சில சமயங்களில் தலையைத் திருப்பினால் கூட வலி மற்றும் அழுத்தத்தை அனுபவிக்கக்கூடும்.

மஞ்சள் நிற சளி வெளியேற்றம் - சாதாரண சளி பிடித்திருந்தால் மூக்கிலிருந்து நிறமற்ற சளி வெளியேறும். அதுவே சைனஸ் பிரச்சினையாக இருப்பின் மூக்கில் இருந்து சளி மஞ்சள் நிறத்திலோ அல்லது பச்சை நிறத்திலேயோ வெளியேறும். இதே போன்று வாயின் வழியாகவும் சளி வெளியேறும். இதற்குக் காரணம் சைனஸ் வைரஸாகும். சுவாசிக்கும் போது, நாசித்துளைகளில் சற்று வலியையும் சந்திக்கக்கூடும்.

கடுமையான இருமல் - நீண்ட நேரம் கடுமையாக இருமல் இருந்தால் சைனஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என்று அர்த்தம். குறிப்பாக, இரவு நேரத்தில் இருமல் வருவதோடு, தூங்கும் நிலையும் பாதிக்கும். அதுவும் ஒருவர் மல்லாக்க படுக்கும்போது நாசித்துளையில் உள்ள சளி அப்படியே மீண்டும் தொண்டைக்குச் சென்றுவிடும். இதனால் இரவு நேரத்தில் கடுமையான வறட்டு இருமலைச் சந்திக்க நேரிடுகிறது. இம்மாதிரியான நிலையில் தலையை சற்று உயரமாக வைத்துக் கொண்டு ஒரு பக்கமாக தூங்கவேண்டும்.

வாய் துர்நாற்றம் - ஒருவருக்கு சைனஸ் தொற்றுக்கள் இருந்தால் அவரது வாய் கடுமையான துர்நாற்றத்துடன் இருக்கும். பொதுவாக வாய் துர்நாற்றத்திற்கான பக்றீரியாக்கள் உள் நாகில் வளர்ச்சி பெறுகிறது. இதனால் வாயினுள் துர்நாற்றம் வீசுகிறது. சைனஸ் இருக்கும் போது மூக்கைச் சுற்றி பக்றீரியாக்கள் நிறைந்த சளி தேங்குவதால் கடுமையான துர்நாற்றத்தை உண்டாக்குகிறது. இதற்கு என்னதான் வாயை சுத்தமாக வைத்துக் கொள்ள பற்களைத் துலக்கினாலும் அந்தத் துர்நாற்றம் நீங்காது.

காது அடைப்பு - காதுகளுக்கும், சைனஸ் பிரச்சினைக்கும் தொடர்புள்ளது. சைனஸ் பிரச்சினை உள்ளவர்களுக்கு காதுப் பிரச்சினைகள் வரும் அபாயம் அதிகரிக்கும். அதுவும் காது மடல் இருந்து வலி ஆரம்பித்து, பின் காதுகளுக்குள் வலி தீவிரமாகத் தொடங்கும்.

பல் வலி - சைனஸ் பிரச்சினைக்கும், பல் வலிக்கும் என்ன சம்பந்தம் உள்ளது என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் சைனஸ் இருந்தால், அடிக்கடி பல் வலியைச் சந்திக்கக்கூடும். சைனஸ் சுரப்பியில் அதிக அழுத்தம் ஏற்படும் போது, தாடையின் மேல் பகுதியில் அதிக அழுத்தம் கொடுக்கப்படும். இதனாலேயே பல்வலி ஏற்படக் காரணமாக அமைகின்றது. இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டால், வைத்தியரைச் சந்தித்து அதற்கான மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் சைனஸினால் ஏற்படும் பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியும். சைனஸ் பிரச்சினைகளில் இருந்து விடுபட ஏராளமான இயற்கை வைத்தியங்கள் உள்ளது. அவற்றில் சில எளிய இயற்கை வைத்தியங்களை நாமே செய்து கொள்வதன் மூலம் சைனஸ் பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம். அதற்கு முன்னர் சைனஸ் பற்றிய தெளிவும், அதனால் ஏற்படுகின்ற அறிகுறிகள் பற்றியும் நாம் அறிந்திருப்பது மிக மிக அவசியமாகும்.

**மூக்கடைப்பு நோய் எதனால் ஏற்படுகிறது?**

ஆரோக்கியக் குறைவு, சுற்றுச்சூழல் மாசு, ஒவ்வாமை இந்த மூன்றும்தான் சைனஸ் பிரச்சினைக்கு முக்கிய காரணங்களாகும். குறிப்பாக பக்றீரியா, வைரஸ், பூஞ்சைத் தொற்றுகள் மூலமாகச் சளி பிடிக்கும்போது சைனஸ் பிரச்சினை ஏற்படுகின்றது. மேலும், மாசடைந்த காற்றில் கலந்துவரும் தொற்றுக்கிருமிகள் சைனஸ் அறைக்குள் புகுந்துவிடும்போது, முக்கினுள் இருக்கும் 'சளி சவ்வு' வீங்கி அழற்சி ஏற்படும். இதனால் அளவுக்கு அதிகமாக நிணநீர் திரவம் சுரந்து மூக்கு வழியாக வெளியேறும். காய்ச்சல், தூசு, புகை, வாசனைத் திரவியம் காரணமாக ஒவ்வாமை ஏற்பட்டால், மிகவும் குளிர்ச்சியான உணவுப் பொருட்களை சாப்பிட்டால், பனியில் நடந்தால், மழையில் நீண்ட நேரம் நனைந்தால், சைனஸ் அறையில் அழற்சி அதிகரிக்கும்போதும், மூக்கில் சதை வளரும்போதும் நீர் வெளியேற முடியாதளவுக்கு மூக்கு அடைத்துக் கொள்ளும்.

**மூக்கடைப்பு நோய் ஏற்படாமலிருக்க என்ன செய்யவேண்டும்?**

சுயசுத்தம், சுற்றுப்புறச் சுகாதாரம் பேணுவதன் மூலம் கிருமித் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம். சமச்சீரான உணவுகளை எடுத்தல், காய்ச்சலை ஏற்படுத்தக்கூடிய விடயங்களில் இருந்து விடுபடல், காய்சல் உள்ளவர்களுடன் இருப்பதைத் தவிர்த்தல், ஒவ்வாமை உணவுப் பொருளை எடுக்காமல் இருத்தல், தூசு, புகைக்கு ஒவ்வாமை உள்ளவர்கள் வாகனத்தில் செல்லும்போது முகக் கவசம் அணிந்து கொள்ளல், தேவையான அளவுக்கு நீர் குடித்தல், ஐஸ், ஐஸ்கிரீம் போன்ற குளிர்ச்சியான உணவுப் பதார்த்தங்களைத் தவிர்த்தல் வேண்டும்.


மிக முக்கியமாக, குளிர்பானங்களைக் குடிக்கவே கூடாது, பனியில் அலையக் கூடாது, புகைபிடிக்கக் கூடாது, புகையுள்ள இடங்களில் வசிக்கக் கூடாது, மூக்குப்பொடி போடக் கூடாது, அசுத்தமான நீர் நிலைகளில் குளிக்கக் கூடாது, மூக்கைப் பலமாகச் சிந்தக் கூடாது, விரல்களால் அடிக்கடி மூக்கைக் குடையக் கூடாது, மூக்கடைப்பைப் போக்கும் இன்ஹேலரை அடிக்கடி பயன்படுத்துதல் போன்ற செயற்பாடுகளில் இருந்து கட்டாயமாகத் தவிர்த்திருப்பது மிக முக்கியமானதாகும்.

**இதுதொடர்பில் நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?**

இந்தப் பிரச்சினைக்கு ஒவ்வாமைதான் மிக முக்கிய காரணியாக இருப்பதால், ஒவ்வாமையை ஏற்படுத்தும் விடயங்களில் இருந்து தவிர்ந்து நடத்தல் வேண்டும். சைனஸ் பாதிப்பு ஏற்பட்டால் கொதிக்க வைத்த சுடு நீரில் ஒரு துணியை நனைத்து அதிகப்படியான நீரைப் பிழிந்து அந்தத் துணியால் நெற்றி, மூக்கு, கண்கள் போன்ற இடங்களில் ஒத்தடம் கொடுக்கவேண்டும். இவ்வாறு 15 நிமிடத்திற்கு ஒரு முறை என ஒரு நாளைக்கு மூன்று தடவை செய்தால், மூக்கு பகுதியில் இரத்த ஓட்டம் அதிகரித்து சைனஸ் சுரப்பியில் உள்ள அடைப்புக்கள் திறக்கப்படும். நன்கு கொதிக்க வைத்த நீருடன் சிறிது வேப்பிலை அல்லது வெந்தயத்தைப் போட்டு ஆவி பிடிக்கவும். இவ்வாறு செய்வதன் மூலம் சைனஸால் ஏற்படும் தலைவலி, மூக்கடைப்பு போன்ற பிரச்சினைகளில் இருந்து உடனடியாக விடுபடலாம். நீரில் வேப்பிலை, வெந்தயம் போன்றவற்றை சேர்ப்பதால் அதிலுள்ள அன்டி பக்றீ ரியா, சைனஸ் சுரப்பிகளில் உள்ள தொற்றுக்கள் போன்றவற்றை அழிக்க உதவுகின்றது. அது மாத்திரமல்லாமல் சளி இளகி எளிதில் வெளியே வந்து விடும்.

வெள்ளைப் பூண்டில் அன்டி பக்றீரியா மற்றும் பூஞ்சை எதிர்ப்புத் தன்மைகள் உள்ளது. எனவே சைனஸ் பிரச்சினை உள்ள ஒருவர் வெள்ளைப் பூண்டு பற்களை நீரிலிட்டு கொதிக்க வைத்து அந் நீரைக் குடிக்கலாம். இதனால் உடனடி நிவாரணம் கிடைக் கும். தேசி இலைகளை நீரில் போட்டு கொதிக்க வைத்து அந்நீரில் ஆவி பிடிக்க வேண்டும். இதனால் அதில் உள்ள மருத்துவப் பயன்கள் சைனஸ் சுரப்பிகளில் உள்ள தொற்றுக்களை அழித்து, சைனஸ் பிரச்சினை யில் இருந்து விடுவிக்கும். தேசி இலைகளைப் போட்டு கொதிக்க வைத்த நீரால் தினமும் 2 முறை வாயைக் கொப்பளித்தாலும் சைனஸில் இருந்து விடுபடலாம்.

குறிப்பாக காலையிலும் இரவிலும் நீராவி பிடிப்பது நல்லது. இதனால் மூக்கில் உள்ள சளி இளகிச் சுலபமாக வெளியேறிவிடும். தொற்றுக் கிருமிகள் இருப்பதாகத் தெரிந்தால் வைத்தியரின் ஆலோசனைகளுக்கமைவாகத் தகுந்த மருந்துகளை எடுத்துக் கொள்வது சிறந்தது. ■



**வைத்தியர் கோ.பிரியா**
BSMS, MSc (Yoga Therapy, Varma & Herbal Science)
**ஆதி அகத்தியர் சித்த வைத்தியசாலை**
**அஸ்தம்பட்டி, சேலம், தமிழ்நாடு.**

# இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை கொழும்பு மீறியது எப்படி?



அ.நிக்ஸன்

**2006** ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்‌ஷ ஜனாதிபதியாக இருந்தபோது இலங்கை ஒற்றையாட்சி அரசின் உயர் நீதிமன்றத்தினால் இரண்டாகப் பிரிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைப்பதற்கான எந்தவொரு நகர்வுகளையும் இந்தியா இதுவரை மேற்கொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியோ இதுவரை அது பற்றி இந்தியாவிடம் எந்தவொரு கோரிக்கையை முன்வைக்கவுமில்லை.

அதுவும் 2009 மே மாதத்திற்குப் பின்னரான பன்னிரெண்டு ஆண்டுகளில் அது பற்றி எந்தவொரு முயற்சியும் எடுக்காத நிலையிலேயே 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி நரேந்திர மோடிக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு இலங்கையில் எட்டு மாகாண சபைகள் அன்று உருவாக்கப்பட்டிருந்தன. 1987 ஆம் ஆண்டு இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இந்த மாகாண சபை முறை உருவானது என்பது வரலாறு.

2005 இல் மகிந்த ராஜபக்‌ஷ, ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது வடக்குக் கிழக்கைப் பிரிக்க ஜே.வி.பி உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்வித்திருந்தது.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டது இலங்கை அரசியல் யாப்புக்கு முரணானது எனவும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒவ்வொரு ஆண்டும் கையொப்பமிட்டு இணைப்பை நீடிக்க முடியாதெனவும் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

13 ஆவது திருத்தச் சட்டத்தின்படி மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பரவலாக்கம் செய்யப்பட்டிருந்தது. அந்த அதிகாரங்கள் இலங்கை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. ஆனால் வடக்குக் கிழக்கு மாகாண இணைப்புக்கு பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

> **இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் தமிழர்களின் அரசியல் விடுதலைக்கு நிரந்தரத் தீர்வைக் காண முடியாது என்பதையே வடக்குக் கிழக்குப் பிரிப்பு வெளிப்படையாகக் காண்பித்துப் 16 வருடங்கள் கடந்து விட்டன.**

ஆனால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ், வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இரண்டையும் தற்காலிகமாக இணைக்க முடியுமெனவும், தற்காலிக இணைப்பை உறுதிப்படுத்தி ஒவ்வொரு ஆண்டும் ஜனாதிபதி கையொப்பமிட வேண்டும் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

அதனாலேயே முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்த்தன, பிறேமதாச, டி.பி.விஜயதுங்க, சந்திரிகா, ஆகியோர் தமது பதவிக் காலங்களின்போது இந்தத் தற்காலிக இணைப்பை உறுதிப்படுத்தி ஒவ்வொரு ஆண்டும் கையொப்பமிட்டு வந்தனர். 2005 ஆம் ஆண்டுக்கான நீடிப்பைச் சந்திரிகா கையொப்பமிட்டு உறுதிப்படுத்தி விட்டார்.

ஆனால், அதே ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற மகிந்த ராஜபக்‌ஷ, 2006 ஆம் ஆண்டுக்கான நீடிப்புக்குக் கையொப்பமிடவில்லை.

மாறாக இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வடக்குக் கிழக்கு மாகாணம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அப்போது உயர் நீதிமன்ற பிரதம நீதியரசராக இருந்த சரத் என் சில்வா ஜே.வி.பியின் மனுவைப் பரிசீலித்து வடக்குக் கிழக்கு மாகாணத்தை இரண்டாகப் பிரித்தார்.

அதாவது இந்த இணைப்புத் தற்காலிகமானது என்றும் பாராளுமன்றத்தில் சட்டத்தால் அங்கீகரிக்கப்படாமல் ஜனாதிபதி ஒவ்வொரு ஆண்டும் கையொப்பமிட்டு நீடிக்க முடியாதெனவும் சரத் என் சில்வா தனது தீர்ப்பில் வியாக்கியானம் கொடுத்திருந்தார்.

ஆகவே இரண்டு சமூகங்களிடையே இருந்த அதிகாரப் பங்கீட்டுப் பிரச்சினை ஒன்றுக்காக இரண்டு நாடுகள் இணங்கிச் செய்து கொண்ட சர்வதேச ஒப்பந்தம் ஒன்றில் கூறப்பட்டுள்ள முக்கியமான ஆவணம் ஒன்றை எவ்வாறு உயர்நீதிமன்றம் ஒருதலைப்பட்சமாக ரத்துச் செய்ய முடியும் என்பதுதான் இங்கே கேள்வி.

எனவே வடக்குக் கிழக்கு மாகாணம் சட்டத்திற்கு முரணாக ஒன்பது ஆண்டுகள் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்ததா? என்ற கேள்வி எழுவதுடன், இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விடயத்தை ஒருதலைப்பட்டசமாக எவ்வாறு மீற முடிந்தது என்ற சந்தேகங்களும் எழுகின்றன.

சர்வதேச ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய சரத்துகளை ஒப்பந்தத்தில் ஈடுபட்ட ஒரு நாடு தன்னிச்சையாக மீறினால், அதற்கு எதிராகப் பாதிக்கப்பட்ட நாடு சர்வதேச நீதிமன்றத்தில் (International court of Justices) (ICJ) முறையிட முடியும்.

ஆகவே இலங்கை தமது ஒப்பந்தத்தை மீறிவிட்டதாகக் குற்றம் சுமத்தி இந்திய மத்திய அரசு ஏன் இதுவரை காலமும் சர்வதேச நீதிமன்றத்தில் முறையிடவில்லை என்ற கேள்வி இத்தனை ஆண்டுகளின் பின்னர் எழுவது இயல்பானது.

ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் காண இந்தியா அழுத்தம் கொடுக்கும் என்று கடந்த முப்பது ஆண்டுகளாக இந்திய அரசு கூறி வருகின்றது. 2006 ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டபோது பிரதமர் பதவியில் இருந்த மன்மோகன், சிங், தற்போது பிரதமராகப் பதவி வகிக்கும் நரேந்திரமோடி ஆகியோரை புதுடில்லிக்குச் சென்று பல தடவை சந்தித்துப் பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் இதுபற்றி அங்கு வாய்திறந்து எதுவும் பேசினார்களா?

சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து இலங்கை உயர் நீதிமன்றத்தினால் ஒருதலைப்பட்சமாக பிரிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணத்தை மீண்டும், இணைக்க முடியதா என்று இந்தியப் பிரதமர்களிடம் இவர்கள் எப்போதாவது கேள்வி எழுப்பியதுண்டா? 2015 இல் நரேந்திரமோடியைக் கொழும்பில் சந்தித்துப் பேசிய விக்னேஸ்வரன் இது பற்றி எடுத்துரைத்தாரா?

இலங்கை பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து மீண்டும் வடக்குக் கிழக்கு மாகாணத்தை இணைக்க முடியும் என்று சரத் என் சில்வா தலைமையிலான உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தமது தீர்ப்பில் கூறியிருந்தனர். ஆனால் இலங்கை பாராளுமன்றத்தில் அது சாத்தியப்படாது என்று தெரிந்துதானே ஜே.ஆர் அன்று தற்காலிகமாக இணைக்கும் அந்த ஏற்பாட்டைத் தனது அதிகரித்துக்குள் எடுத்துக் கொண்டார்.

அதுவும் அவருடைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு அன்று அறுதிப் பெரும்பான்மைப் பலம் இருந்தது. இலகுவாக வடக்குக் கிழக்கு இணைப்புக்கான சட்ட அங்கீகாரத்தை அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றியிருக்கலாம்.

ஆனால் ஜே.ஆர் விரும்பவில்லை என்று அப்போதைய தூதுவர் ஜே.என் டிக்சிற் கொழும்பு அசெய்மன்ற் என்ற தனது நூலில் கூறியிருக்கிறார்.

2015 ஆம் ஆண்டு ஜெனீவா மனித உரிமைச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், 13 ஆவது திருத்தச் சட்டம் உரிய முறையில் நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்தது.

அமெரிக்க- இந்திய அரசுகளுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அன்று ஒத்துழைப்பு வழங்கியிருந்தது. அப்போது கூட வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும் என்ற ஒரு வார்த்தை கூட தீர்மானத்தில் சேர்க்கப்படவில்லை. ஆகவே இலங்கைக்கு மாத்திரமல்ல இந்தியாவுக்கும் அது விருப்பமில்லை என்பது புரிகிறது.

அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் ஈழத்தமிழர் விடயத்தில் இந்தியாவும் இலங்கையும் சொல்வதையே கேட்கின்றன எனபதும் வெளிப்படை. அதற்கு ஏற்ப தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இசைந்து கொடுக்கிறது என்பதும் பட்டவர்த்தனம்.

எனவேதான் இரண்டு அரசியல் சமூகங்களிடையேயான அரசியல் அதிகாரங்களை எவ்வாறு பங்கிடுவது என்பது தொடர்பான விடயங்களில், 2009 இற்குப் பின்னரான சூழலில் தமிழரசுக் கட்சி ஈடுபடவில்லையென்ற குற்றச்சாட்டுகள் தற்போது வெளிப்படுகின்றன.

இரு நாடுகளுக்கிடையே அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட நாடுகள் செய்து கொண்ட ஒப்பந்தங்கள், மற்றும் உடன்பட்டுக் கொண்ட விடயங்களை ஒரு தலைப்பட்சமாக மீறும்போது அல்லது கைவிடப்படும் போது அல்லது அவற்றைச் செயற்படுத்துவதில் மாறுபட்ட நிலை காணப்பட்டால், அவற்றுக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட நாடு சர்வதேச நீதிமன்றத்தில் முறையிட முடியும்.

ஒரு நாட்டுக்குள் ஓரினத்தால் மற்றுமொரு இனத்தின் உரிமைகள் நசுக்கப்படும்போது அல்லது இன அழிப்பு இடம்பெற்றால் அதற்கு எதிராக முறையிடக் கூடிய இடமே சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம். (International Criminal Court) (ICC)

ஆகவே இந்த இரண்டு நீதிமன்றங்களையும் நாடக் கூடிய ஏதுநிலை ஈழத் தமிழர்களுக்கு இருந்தும், 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான பன்னிரெண்டு ஆண்டுகளில் இலங்கை ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள் நின்று கொண்டு தமிழ்த் தேசிய அரசியல் பேசப்படுகின்றது.

குறைந்த பட்சம் வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்காகச் சர்வதேச நீதிமன்றத்தில் இந்திய அரசைக் கொண்டு முறையிடக் கூடிய ஏற்பாடுகளையேனும், தமிழ் அரசியல் பிரதிநிதிகள் மேற்கொள்ளவில்லை. இந்தோ- பசுபிக் பிராந்திய அரசியல் நலனுக்காக மாத்திரம் செயற்படும் இந்தியாவை எப்படிக் கையாள்வது என்ற திட்டத்தை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதாவது தமிழரசுக் கட்சி வகுக்கவில்லை.

இலங்கை அரசியல் யாப்புக்கு அமைவான சாதாரண கட்சி அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையில் குறைந்த பட்சமாவது இந்தியாவைத் தமிழர் பக்கம் உள்வாங்குவதற்கான அரசியல் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டிருக்கலாம்.

போர் இல்லாதொழிக்கப்பட்ட 2009 மே மாத்திற்குப் பின்னரான சூழலில் அதாவது 2015 இல் மைத்திரி- ரணில் ஆட்சியின்போது, இந்திய அரசாங்கமே தேவையில்லை என்ற தொனியில் தமிழரசுக் கட்சி செயற்பட்டுமிருந்தது. அவ்வளவுக்கு மைத்திரி- ரணில் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இருந்தது. ஆனால் நடந்தது என்ன? 2009 இல் போரை நடத்தியவர்கள் மீண்டும் 2020 இல் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் நிறைவடைந்துமுள்ளன.

வடக்குக் கிழக்கு இரண்டாகப் பிரிக்கப்படும் போது தமிழர்களின் சார்பில் அன்று சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வாதிட்டிருந்தார். (அவர் இன்று ஜனாதிபதி சட்டத்தரணி) இரண்டு அரசுகள் செய்து கொண்ட சர்வதேச ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்த முக்கிய சரத்து ஒன்றை எப்படி ஒரு நாட்டின் உயர் நீதிமன்றம் தன்னிச்சையாக ரத் துச் செய்யமுடியுமென அன்று சுமந்திரன் கேள்வி எழுப்பியிருந்தாரா?

அப்படிக் கேள்வி எழுப்பியிருந்தால், நீதியரசர்கள் அதனைக் கவனத்தில் எடுக்காமல் பௌத்த தேசியவாதக் கண்ணோட்டத்தில் செயற்பட்டு வடக்குக் கிழக்கு மாகாணங்களை இரண்டாகப் பிளவுபடுத்தி விட்டனர் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளில் குறைந்தது மூன்று தடவைகள் இந்தியப் பிரதமரைச் தமிழரசுக் கட்சி சந்தித்திருந்தது.

சந்திப்பின்போது பிரிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணத்தை மீண்டும் இணைக்கச் சர்வதேச நீதிமன்றத்தை ஏன் நாட முடியாதென்று கேள்வி முன்வைக்கப்பட்டதா? அல்லது இப்படியொரு ஆலோசனை தமிழரசுக் கட்சியிடம் இருந்ததா? இந்தோ- பசுபிக் அரசியல் சூழலுக்கு ஏற்ப இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்போம் என எப்போதாவது தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததா?

குறைந்த பட்சம் வடக்குக் கிழக்கு மாகாணத்தை மீண்டும் இணைக்கச் சர்வதேச நீதிமன்றத்தை நாடக்கூடிய வாய்ப்பிருந்தும், ஏன் அதற்கான அழுத்தம் கொடுக்கப்படவில்லை? தாமாகவே சென்று இந்தியா முறையிடாது என்பதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆனால் அதற்கான புறக் காரணிகளை உருவாக்கியிருக்க வேண்டியது தமிழ்த் தரப்பின் பொறுப்பல்லவா? இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் தமிழர்களின் அரசியல் விடுதலைக்கு நிரந்தரத் தீர்வைக் காண முடியாது என்பதையே வடக்குக் கிழக்குப் பிரிப்பு வெளிப்படையாகக் காண்பித்துப் 16 வருடங்கள் கடந்து விட்டன.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கும் இது சமர்ப்பணம். ■

# பேராசிரியர் ம.மு. உவைஸின்
## நூற்றாண்டு விழாவும் முத்திரை வெளியீடும்


இக்பால் அலி

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மொழித் துறை பிரிவின் ஏற்பாட்டில் பேராசிரிய அல்லாமா ம. மு. உவைஸின் நூற்றாண்டு விழாவும் ஞாபகார்த்த முத்திரை வெளியிடும் பண்டார நாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் பேராசிரியர் அல்லாம உவைஸ் பற்றி தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மொழித் துறையினால் வெளியிடப்பட்ட "மர்கசி" எனும் பேராசிரியர் அல்லாமா ம.மு.உவைஸ் நூற்றாண்டு விழா சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நூலின் நூற்றாண்டு விழா தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை தலைவி கலாநிதி ஸாதியா பௌஸர் அனுப்பி வைத்தார்.

இந் நூற்றாண்டு சிறப்பு மலர் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா, கே. ஆர். பாத்திமா சிபா ஆகிய இரு ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவந்துள்ளது. மர்கசி என்பது அ. ம. மு. உவைஸின் வீட்டின் பெயராகும்.

இந்த மலரில் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் தொன்மை, சிறப்பு, பயன்பாடு, வளம் முதலிய பற்றி ஆய்வு ரீதியிலான ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் அமைந்த கட்டுரைகளும், பேராசிரியர் அல்லமா ம.மு.உவைஸ் நூற்றாண்டு சிறப்பினைக் குறிப்பிட்டு வாழ்த்துரைகளும், மலரின் பின்பகுதியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிழல் படங்களும் தாங்கிய வண்ணம் அந்நாரின் அழகுற அமைந்த புகைப்பட அட்டைப்படத்துடன் வெளிவந்துள்ளது. இந்த நூற்றாண்டு சிறப்பு மலர் தமிழ் கூறும் நல்லுலகில் காலம் கடந்தும் பேசப்படும் என்பதில் சந்தேகமில்லை.




இஸ்லாமிய தமிழ் இலக்கியம் பற்றிப் பேசுபவர்களும் எழுதுபவர்களும் பேராசிரியர் அல்லாமா ம.உவைஸை முன்னிறுத்தாமல் எவருக்கும் பேச முடியாது. அ.ம.மு.உவைஸ் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் பிதாமகன் என்பதுதான் உண்மை. அவருடைய ஆய்வுக்குப் பின்புதான் இஸ்லாமிய தமிழ் இலக்கியம் என்ற பதம் புதிதாக உருப்பெற்றது. அது பற்றி மேலும் தேடவும் படிக்கவும் முனைந்தனர். உலகத் தமிழ் இலக்கியப் புலங்களில் உரையாடலுக்கான களமாகவும் அமைந்தது.

முஸ்லிம்களது ஐங்காலத் தொழுகை, நோன்பு பிடித்தல், ஹஜ் வணக்க வழிபாடு, இரு பெருநாட்கள், திருமணங்கள் மட்டுமன்றி இஸ்லாமிய மார்க்க நெறிமுறையிலான கொடுக்கல் வாங்கல், குடும்ப வாழ்க்கை முறை, பிள்ளைகள் பராமரிப்பு, முஹம்மது நபி முதல் ஏனைய நபிமார்களது மிகவும் அற்புதமான வாழ்வியல் வரலாறு மற்றும் இன்னோரின் இஸ்லாமிய கலாசார பண்பாட்டின் அழகியல் கலை அம்சங்களை வெளிப்படுத்திக் காட்டி அகமகிழச் செய்தவர். முஸ்லிம் புலவர்களுடைய ஆக்கங்களைச் சரியான முறையில் மதிப்பீடு செய்து அவர்களது பணியையும் பங்களிப்பையும் வெளிக் கொணர்ந்தவர். இத்தகைய புகழ் பெற்ற அறிஞரின் சிறப்பை நினைவு கூர்ந்து தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறையினர் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திற்கு உயிர் வடிவம் கொடுத்து அவரின் தமிழ் ஆய்வுக் கலைக்கு அழகு சேர்த்துள்ளனர்.

இந்நூற்றாண்டு மலரில் இந்நாட்டின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தன, ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அலஹப்பெரும, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் சிரேஸ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் ரமிஸ் அபூபக்கர், தென்கிழக்குப் பல்கலைக் கழகக் கலை மற்றும் கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம். எம். பாஷில் ஆகியோர் வாழ்த்துரையில் தம் பணிகள் மூலம் தடம்பதித்து விட்டுச் சென்ற அவர் பற்றிய பண்பும், ஆளுமைப் பலமும், கடின உழைப்பும், பரந்த மனமும் குறித்து ஆங்கிலத்தில் சிலாகித்து எழுதியிருந்தனர்.

நூலின் மற்றுமொரு பகுதியில் பேராசிரியர் கலாசூனி அல்லாமா கலாநிதி ம.மு.உவைஸ் குறித்த மும்மொழிக் கட்டுரைகள் தமிழுக்கு மட்டுமல்ல சிங்கள ஆங்கில மொழிக்குப் பெருமை சேர்க்கும் விதமாக அமைந்துள்ளது. சிங்கள மக்களிடையே தேசிய நல்லிணக்கம் சகவாழ்வு மற்றும் புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்கான ஒரு நல்ல முயற்சியாகும். ஆங்கிலத்தில் மறைந்த எம். எம். எம். மஹ்ரூப்பின் கட்டுரையுடன் கலாநிதி விமல் ஜீ பலகல்ல எழுதிய "நான் அறிந்த உவைஸ்" என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையொன்று இடம்பெற்றுள்ளது.

அக்கட்டுரையில் அவர் கரத்தினால் எழுத்தப்பட்ட சி. என். தேவராஜா எழுதிய தமிழ் நூல் ஒன்றை "வாணிஜ அங்க கணிதய" என சிங்களத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார். நபி நாயகம் அவர்களது வரலாற்றையும் அல்குர்ஆனையும் இஸ்லாம் என்றால் என்ன? என 1,2, 3 பாகம் என மொழிபெயர்த்தவர்.

அத்துடன் விசேடமாக பிரபல்யமான சிங்கள எழுத்தாளர் மார்டின் விக்கிரமசிங்கவின் "கம்பெரலிய" என்ற சிங்கள நாவலை தமிழ் மொழியில் "கிராமிய பிறழ்வு" என மொழி பெயர்த்து வெளியிட்டார். 40 வருட காலமாக முஸ்லிம்கள் சிங்கள மொழியில் கல்வி கற்பதற்கென ஈடுபாடு காட்டி அதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தவர். அந்த வகையில் சமயத் தேவைகளை சிங்கள மொழியில் நிறைவேற்றுவதற்கு இளைஞர்களுக்குரிய வகுப்புக்களையும் ஆரம்பித்துள்ளார். இவ்வாறு சிங்களத்திலோ ஆங்கிலத்திலோ தமிழிலோ அவர் செய்த இலக்கியப் பணிகள் கொஞ்சம் நஞ்சமல்ல என்று அவர் உசாத்துணைகளுடன் விரிவான ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நூலில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறைத் தலைவி கலாநிதி ஸாதியா பௌஸர் எழுதிய "இஸ்லாமிய இலக்கியத்தின் முன்னோடி ம.மு.உவைஸ் அறிமுகமும் அவரது நூல்கள் பற்றிய குறிப்புக்களும்" ஆய்வுக்கட்டுரையின் முதல் பாகங்கள் அவரது வாழ்வியல் கூறுகளை நாம் படித்து அறிந்து பரிச்சயப்படுத்திக் கொள்ள உதவுகின்றன. அது மட்டுமல்ல அல்லமா உவைஸின் சமூகப் பண்பாட்டையும் அவரது குறிக்கோள்களையும் அவரது வாழ்வியல் அனுபவங்களையும் உணர்வு பூர்வமாக முழுமையாக அறிந்து கொள்வதற்கு கலாநிதி ஸாதியா பௌஸர் தமது அழகிய நயமான பாணியில் வெளிப்படுத்தியுள்ளார்.

இஸ்லாமிய தமிழ் இலக்கியம் எனும் போது அது பன்முகப்பட்ட பல்துறை சார்ந்த அம்சங்களைக் கொண்டதாகும். இலக்கியம் மாத்திரமல்லாமல், இஸ்லாமியர் என்போர் யார்? வரைவிலக்கணங்களின் பொருத்தப்பாடுகள், இவர்களது மொழி வழக்குகள், இவர்களது பண்பாட்டுக் கூறுகள், பழக்கவழக்கங்கள், இவர்களது சமூக அமைப்பு, இவர்களது தொழில்கள், இவர்களின் பொருளாதார அபிவிருத்திகள், சமூக மாற்றங்கள், இவர்களின் கண்ணோட்டங்கள் முதலிய பற்பல விடயங்கள் ஆய்வுக்கு உட்படுத்தி அல்லமா உவைஸ் முதன் முதலில் பிரதானமாக இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் பதத்தை உருவாக்கியவர் என சான்று பகரக்கூடிய அவர் எழுதிய நூல்களை அடையாளப்படுத்தியுள்ளார் கலாநிதி ஸாதியா பௌஸர். நூலின் மீதுள்ள பற்றார்களின் பார்வையில் படாத, வாசிக்கத் தவறவிட்ட, நமது செவிக்கு அவரது நூல்களை எல்லாம் தேடிப்பிடித்து அறிமுகப்படுத்தியுள்ளார். கலாநிதி ஸாதியா பௌஸர். அல்லமா உவைஸின் ஆழமான விடயங்களை ஆராய்ந்து எழுதியிருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது.

இந்நூலில் மற்றுமொரு அம்சமாக ம.மு.உவைஸ் நூற்றாண்டு ஞாபகார்த்தக் கருத்தரங்கு உரைகளின் சுருக்கம் எழுதப்பட்டிருந்தது. தகைசால் பேராசிரியர் எஸ். தில்லைநாதின் "அறிவாலும் பண்பாலும் உயர்ந்த ஆளுமை" என்ற தலைப்பில் அமைந்த தலைமையுரை கட்டுரைச் சுருக்கமும், பேராசிரியர் றமீஸ் அப்துல்லா எழுதிய "பேராசிரியர் உவைஸினைக் கொண்டாடுவது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பணி" என்ற தலைப்பிலான அறிமுக உரைச்சுருக்கமும், தகைசால் பேராசிரியர் அ. சண்முகதாஸ் "தமிழ் இலக்கிய வரலாற்றில் பேராசிரியர் அல்லமா ம.மு.உவைஸ்" என்ற தலைப்பிலான கட்டுரைச் சுருக்கமும், கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் செ.யோகராாசாவின் "இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாற்று எழுதுகைகளில் ம. மு. உவைஸ் ஒரு விமர்சனப் பார்வை" என்ற தலைப்பிலான கட்டுரைச் சுருக்கமும் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் "இலங்கை தமிழ் இலக்கியத்தில் உவைஸின் படைப்புக்கள்" என்ற தலைப்பிலான கட்டுரைச் சுருக்கமும் இடம்பெற்றுள்ளது.

■




சி.உதயகுமார்
BA.MA(Hons)PGDE,
DIP.in.Cinema

# ஆரம்ப வகுப்பு கணித எண்ணக்கருக்களின் இலகு தன்மைகள்:

பொதுவாக தரம் 3, 4, 5 வகுப்புகள் ஒவ்வொன்றிலும் கல்வி கற்கின்ற பிள்ளைகள் 25 கணித எண்ணக்கருக்களைக் கற்கிறார்கள். கணித எண்ணக்கரு என்பதற்கு அடிப்படையாக இருப்பது இலக்கங்களாகும். 0, 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 ஆகி யவை இலக்கங்களாகும். இந்த இலக்கங்களால் உரு வாகி வருபவை எண்களாகும்.

எண்களை இலக்கங்கள் என அழைக்க முடியாது. ஆனாலும், இலக்கங்களை எண்கள் என சொல்லலாம். இலக்கங்கள் யாவும் எண்களாகும், ஆனால் எண்கள் எவையும் இலக்கங்கள் அல்ல. இது, காகங்கள் எல்லாம் கறுப்பு நிறமானவை ஆகும். ஆனால் கறுப்பு நிறமானவை எல்லாம் காகங்கள் அல்ல என்று சொல்வதற்கு ஒப்பாகும்.

இலக்கங்கள் : 0, 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9

எண்கள்: 4, 37, 25, 346, 1, 75, 7, 9, 1000, 4003, ...

கணித எண்ணக்கருக்களுள் பெருக்கல் என்பதும் ஒன்றாகும். பெருக்கல் என்பது வாய்பாடு சார்ந்ததாகும். பெருக்கல் மற்றும் வகுத்தல் ஆகிய எண்ணக்கருக்கள் தரம் 3 வகுப்புகளிலிருந்துதான் ஆரம்பிக்கின்றன.

தரம் 3 வகுப்பிற்கு 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் வாய்பாடுகள் கட்டாயமாகின்றன. இந்த வாய்பாடுகளை அவர்கள் கட்டாயம் மனப்பாடம் செய்யவேண்டும். இந்த வாய்பாடுகளைக் கொண்டுதான் ஈரிலக்கங்களுக்கு மேற்படாத எண்களை எவ்வாறு பெருக்கலாம் என்ற முறையினையும் அறிந்துகொள்கிறோம்.

உதாரணம்: (i) 34 x 5 (ii) 28 x 10 (iii) 83 x 4 (v) 71 x 2

ஓர் எண்ணினை 2 ஆல் பெருக்கும்போது, கிடைக்கின்ற விடையின் கடைசி இலக்கமானது (ஒன்றாம் இடத்து இலக்கம்) 0, 2, 4, 6, 8 என்பவற்றுள் ஏதாவது ஓரிலக்கமாக மாத்திரமே இருக்க முடியும் என்பதை பிள்ளைகளிடம் சொல்ல வேண்டும்.

உதாரணம்: (i) 41x2 = 82 (ii) 35x2 = 70 (iii) 33x2 = 66 (iv) 50 x 2 = 100

ஓர் எண்ணினை 5 ஆல் இலகுவாக எவ்வாறு பெருக்குவது என்பதையும் மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கலாம். 5 ஆல் பெருக்கப்படுகின்ற எண்ணினை அரைவாசியாக்கிவிட்டு வரும் விடைக்குப் பூச்சியம் இடவேண்டும். இந்த உத்தியினையும் மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கலாம்.

உதாரணம் : 24 x 5 என்பதில், 24 இன் அரைவாசி 12 ஆகும். அந்த 12 இனை எழுதி விட்டு 0 இனை இட்டால் விடை 120 என்பதைச் சொல்லிக்கொடுக்கலாம்.

இவ்வாறே, (i) 50 x5 (ii) 42x5 (iii) 84 x 5 (iv) 14x5 (v) 74x5 போன்ற பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கலாம்.

தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கு ஓர் எண்ணினை 10, 9 ஆகிய எண்களினால் எவ்வாறு இலகுவாக பெருக்கலாம் எனும் முறையினையும் சொல்லிக்கொடுக்கலாம்.

இங்கு, 10 இனால் பெருக்கப்படுகின்ற எண்ணினை அப்படியே எழுதிவிட்டு, அதைத்தொடர்ந்து 0 இனை இடலாம். இதை பிள்ளைகளிடம் சொல்லிக் கொடுக்கலாம்.

(i) 35x10 = 350 (ii) 84x10=840 (iii) 65x10=650 (iv) 23x10=230

இங்கு 35 என்ற எண்ணினை எழுதிவிட்டு 0 இட்டிருக்கிறோம். அதேபோல். 84 இனை எழுதிவிட்டு 0 இனை இட்டிருக்கிறோம். அவ்வாறே, 65 இனை எழுதி விட்டு 0 இனை இட்டிருக்கிறோம்.

இவைபோன்ற இன்னும் பயிற்சிகளை வழங்கி பிள்ளைகளை ஊக்குவிக்கலாம்.

இனி 9 ஆம் வாய்பாட்டினை எவ்வாறு இலகுவாக மனப்பாடம் செய்யலாம் என நோக்குவோம்.

முதலில் 0 தொடக்கம் 9 வரையான ஏறு வரிசை இலக்கங்களை இடமிருந்து வலமாக எழுதச் சொல்லிவிட்டு, பிறகு 9 தொடக்கம் 0 வரையான இறங்கு வரிசை இலக்கங்களை வலமிருந்து இடம் நோக்கியதாக முன்பு எழுதிய இலக்கத்திற்கு வலது பக்கத்திலே எழுதுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தலாம். அந்த வகையில் அவ் வாய்பாடு,

09, 18, 27, 36, 45, 54, 63, 72, 81, 90 என அமைந்துள்ளதைக் காணலாம்.




மேலும், 9 ஆம் வாய்பாடு தொடர்பான இன்னுமொரு முறையினையும் சொல்லி.

இப்ப மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களை நோக்கியதாக தங்கள் உள்ளங்கைகளை வைத்திருக்குமாறு சொல்லவும். உயரம் குறைவாகவும், தடிப்பானதாகவும் உள்ள விரல் கட்டைவிரல் ஆகும். உயரம் குறைவாகவும், மெல்லியதாகவும் உள்ள விரல் சின்ன விரல் ஆகும்.

கட்டை விரலிருந்து தொடங்கி அடுத்துள்ள விரல் வழியாக வலதுகையின் கட்டைவிரல் வரையாக 1 தொடக்கம் 10 வரையான எண்களை முறையே எழுதுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

இப்ப 9x3 என்ற வினாவிற்கான விடை காண்பதற்கு, 3 என அடையாளமிடப்பட்ட விரலை மடிக்குமாறு மாணவரிடம் கூறவேண்டும். மடிக்கப்பட்ட விரலுக்கு இடதுபக்கமாக 2 விரல்களும் வலது பக்கமாக 7 விரல்களும் காணப்படுவதை மாணவர்களிடம் சொல்லிவிட்டு, ஆகவே விடை 27 என உறுதிப்படுத்தலாம்.

இன்னுமோர் உதாரணத்தை மாணவர்களிடம் வினவலாம். அதாவது, 9x7 என்ற வினாவிற்கான விடை காண்பதற்கு, 7 என அடையாளமிடப்பட்ட விரலை மடிக்குமாறு மாணவரிடம் கூறவேண்டும்.

இப்பொழுது மடிக்கப்பட்ட விரலுக்கு இடதுபக்கமாக 6 விரல்களும் வலதுபக்கமாக 3 விரல்களும் காணப்படுவதை மாணவர்களிடம் கூறி, ஆகவே விடை 63 என உறுதிப்படுத்தலாம்.

இனி, ஒன்றாமிடத்து இலக்கங்களின் கூட்டுத் தொகை 10 ஆகவும், பத்தாமிடத்து இலக்கங்கள் சமமாகவுமுள்ள எண்களை இலகுவாகப் பெருக்கும் முறையினையும் சொல்லிக்கொடுக்கலாம்.

உதாரணமாக, 47x43 எனும் பெருக்கலை நோக்குவோம்.

இங்கு ஒன்றாமிடத்து இலக்கங்களான 7 ஐயும் 3 ஐயும் கூட்டினால் விடை 10 ஆகும்.

மேலும், 47, 43 ஆகிய இரண்டு எண்களிலும் பத்தாமிடத்து இலக்கங்கள் சமமாகவுள்ளன. ஆதலால்,

இதனை இலகுவாகப் பெருக்கலாம்.

இங்கு பத்தாமிடத்து இலக்கங்களாக 4 உம், 4 உம் காணப்படுகின்றன.

இங்குள்ள ஏதாவதொரு 4 உடன் 1 இனைக் கூட்டினால் விடை 5 ஆகும்.

இந்த 5 இனை எஞ்சியுள்ள 4 இனால் பெருக்கச் சொல்லுங்கள். விடை 20 ஆகும்.

இனி, ஒன்றாமிடத்து இலக்கங்களான 7 இனையும் 3 இனையும் பெருக்குங்கள். விடை 21 ஆகும்.

முன்னர் பெருக்கி வந்த 20 இனையும் பிறகு பெருக்கி வந்த 21 இனையும் இணைத்து விடுங்கள். விடை 2021 அகும்.

ஆகவே, 47 x 43 எனும் பெருக்கலுக்கான விடை 2021 ஆகும்.

இவ்வாறு இதே நிபந்தனையுள்ள எந்த ஈரெண்களையும் இலகுவாகப் பெருக்கிப் பழகுங்கள்.

(i) 29 x 21 (ii) 73 x 77 (iii) 85 x 85 (iv) 68 x 62 (v) 56 x 54

**கணித இடர்பாடுகள்**

கணிதம் அறியாதவன் எதுவுமறியான். கணிதம் பற்றிய கற்றலில் இலக்கங்களும், இலக்கங்களால் உருவான எண்களும் காணப்படுகின்றன என்பதை ஏற்கெனவே பார்த்துள்ளோம்.

பெரிது, சிறிது;

உயரம், கட்டை;

பாரம், பாரமின்மை ஆகிய வேறுபாடுகளையும் மாணவர் புரிதல் வேண்டும்.

எண்களின் கூட்டல், கழித்தல், பெருக்கல் பிரித்தல் போன்ற விடயங்களை மாணவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளாவிட்டால் கணிதம் பற்றிய தனது அடுத்த கட்ட முயற்சிகளில் கற்றுச் செல்வதற்கு அவை தடையாகின்றன.

கூட்டல்: 23 + 42 = 65 என எழுதும் மாணவர் சிலர், அதனடிப்படையில் 26 + 48 = 614 என எழுதுகின்றனர்.

இரட்டை இலக்க எண்களை கூட்டும்போது அவற்றின் ஓராமிடத்து இலக்க எண்களின் கூட்டுத்தொகை இரட்டை இலக்கமுள்ள எண்ணாக வருகின்ற சந்தர்ப்பங்களில் ஓராம் இடத்து இலக்கத்தை எழுதிவிட்டு மற்றயை பெறுமானத்தை அடுத்த இடப்பெறுமான இலக்கங்களின் கூட்டுத்தொகையோடு கூட்டவேண்டும்

(14 ஆம் பக்கம் பார்க்க...)

# பட்டங்களும் மட்டம் தட்டுதலும்...

வேதநாயகம் தபேந்திரன்



“பட்டதாரிகள் வேலை செய்ய மாட்டார்கள். அவர்களுக்கு ஒன்றும் தெரியாது.” அவ்வப்போது கூறப்படும் குற்றச்சாட்டுக்களில் இதுவும் ஒன்று.

பட்டம் பெற்றவர்களில் உள்ள பிழையா ?

அல்லது பட்டத்தை வழங்கிய பல்கலைக் கழகங்களில் உள்ள பிழையா ?

பட்டதாரிகளை அரச பணியில் வழிநடத்தும் திணைக்களத் தலைவர்களின் பிழையா?

பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற யாவருக்கும் அரசாங்க வேலை கொடுக்கும் ஒரேயொரு நாடாக உலகில் எமது தாய்த் திருநாடான இலங்கை மட்டுமே உள்ளது. இதற்குப் பாரியதொரு வரலாற்றுப் பின்னணியும் வாக்கு வங்கி அரசியல் பின்னணியும் உள்ளது.

1971 ஏப்ரல் 05 இல் சேகுவேரா புரட்சி எனப்பட்ட ஜே.வி.பியின் (மக்கள் விடுதலை முன்னணியின்) அரசுக்கெதிரான போராட்டத்தில் இருந்துதான் இதன் ஆரம்பம் தொடங்குகிறது. படித்த, வேலையற்ற சிங்கள இளைஞர்கள் றோகண விஜேவீர தலைமையில் அரசைக் கைப்பற்ற நாடெங்கும் போராட்டத்தைத் தொடங்கினார்கள். ஸ்ரீமாவோ அம்மையாரின் அரசு, அரச படைகளின் வலுவைப் பிரயோகித்தும் இந்தியப் படைகளை வரவழைத்தும் இப் புரட்சியை நசுக்கியது.

ஜே.வி.பி இயக்கத்தின் பாசறைகளில் கியூபா விடுதலையடைய விடல் காஸ்ட்ரோவுடன் உழைத்த சேகுவேராவின் கொள்கைப் பிரகடனப் புத்தகங்கள் சிங்கள மொழியில் இருந்தன. அதனை வைத்தே சேகுவேராப் புரட்சி என இதனை அழைத்தனர்.

இதனைத் தொடர்ந்தே படித்துப் பட்டம் பெற்ற யாவருக்கும் அரசாங்க உத்தியோகம் கொடுக்கும் வழக்கம் உருவானது. பல்கலைக்கழகங்களிலும் அனைத்துப் பிராந்தியங்களிலும் உருவானது. இன்று வரையில் 17 பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகங்களில் வெளிவாரியாகப் படித்துப் பட்டம் பெற்றோர் தொகை வருடா வருடம் பல்லாயிரமாகப் பெருகியதால் அதற்கான மட்டுப்படுத்தல்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் உருவாக்கப்பட்டது.

எவ்வாறாயினும் பட்டம் பெற்ற ஒருவர், கூடியது நான்கு வருடங்களுக்குள் அரச வேலை வாய்ப்பு ஒன்றைப் பெறக் கூடிய நிலைமை 1971 ஆம் ஆண்டிற்குப் பின்னர் உள்ளது.

2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட உயர்கல்வி ஆய்வின்படி எமது நாட்டில் பட்டம் பெற்றவர்களில் 14.8 வீதமானோரே கணிதம், விஞ்ஞானம்,பொறியியல், மருத்துவம்,தொழில்நுட்பவியல் போன்ற துறைகளில் உள்ளனர். அறுதிப் பெரும்பான்மையான ஏனைய 85 சத வீதத்தவரும் கலை, மானிடவியல் பாடங்களில்தான் பட்டம் பெற்றுள்ளனர். இதனால் இலங்கையின் பொருளாதாரம் தேர்ச்சிக் கல்வி உடையதாக இல்லை. வெளிநாடுகளுக்கு இலங்கையர் சென்று உயர்வருவாய் ஈட்டி இலங்கைக்கு அனுப்பக் கூடிய நிலை இல்லை எனப் பொருளியல் அறிஞர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதே வேளையில் உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வெளி நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் பட்டம் பெற்றவர்களுக்கு அரசாங்க வேலை வாய்ப்புகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன.

எமது நாட்டின் தற்போதைய சனத்தொகை 2 கோடி 19 இலட்சம் பேர். இதில் 15 இலட்சத்து 28 ஆயிரம் பேர் தான் அரசபணியில் உள்ளனர். மொத்த சனத் தொகையில்10 வீதம்கூட இல்லை. என 2021 ஏப்ரல் மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.ஆனால் உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் சனத் தொகை வீதாசாரத்தை விட அரசதுறை அளவுக்கு மீறிப் பெருத்துள்ளதாக விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றது. அரசியல் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் தாம் ஆட்சி அமைத்தால் வேலையற்ற சகல பட்டதாரிகளுக்கும் வேலை வழங்குவோம் என உள்ளது. இதனைத் தேர்தல் பரப்புரைகளிலும் கூறுகின்றனர்.

ஆட்சிக்கு வந்தவுடன் சொன்னபடியே நடைமுறைப்படுத்துகின்றனர். இங்குதான் பட்டதாரிகளைக் கையாளுதல் தொடர்பான பிரச்சினைகள் எழுகின்றது.

பட்டதாரிகள் அரச பணிக்கு முதலில் பயிலுநர்களாக அரசாங்க அலுவலகங்களுக்கு இணைக்கப்படுகின்றனர். அவர்கள் ஐம்பது, நூறு எனப் பிரதேச செயலகங்களில் அல்லது மாவட்டச் செயலகம் எனப்படும் கச்சேரிகளுக்கு இணைக்கப்படுகின்றனர்.

அவர்களுக்கு இருக்கக் கதிரைகள் கூடக் கொடுக்க முடியாத



அளவுக்குத்தான் பல அலுவலகங்கள் முன்பு இருந்தன. தற்போது பரவாயில்லை பிளாஸ்ரிக் கதிரைகள் கொடுத்து இருக்கச் செய்கின்றனர்.

இணைக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களை என்ன செய்வது? எவ்வாறு வேலை வாங்குவது? தொடர்பான உரிய வழிகாட்டுதல்கள் பெரும்பாலும் வழங்கப்படுவதில்லை.

> “சும்மா இருத்தலில் சுகம் கண்ட, சோம்பேறித்தனம் கண்ட, கதைத்துப் பம்பல் அடித்த குணம் இவர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைத்த போதும் விடாது. என்ன வென்று வேலைகளைக் கடத்தலாம். ஐஸ் அடிக்கலாமெனத்தான் நினைப்பார்கள். பயிலுநர் நிலையில் வைத்தே சுறுசுறுப்பாக வேலை வாங்கினால் அவர்கள் எப்போதும் ஒரு இயங்கு நிலையில் இருப்பார்கள்.”

வழங்கப்பட்டாலும் அவர்களின் திறன்களைத் திறமையாக வேலை வாங்கும் நுட்பம் சில உயரதிகாரிகளுக்குத் தெரிவதில்லை. இதனால் அவர்களைச் சோம்பேறிகளாகக் கறள் பிடிக்க விடுகின்றனர்.

சில இடங்களில் அலுவலகங்களின் கேட்போர் கூடத்தில் உள்ள கதிரைகளில் இருங்கள். நிரந்தர நியமனக் கடிதம் வந்ததும் உரிய பணிகளைத் தருகின்றோமென விட்டு விடுவார்கள்.

சும்மா இருத்தலில் சுகம் கண்ட, சோம்பேறித்தனம் கண்ட, கதைத்துப் பம்பல் அடித்த குணம் இவர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைத்த போதும் விடாது. என்னவென்று வேலைகளைக் கடத்தலாம். ஐஸ் அடிக்கலாமெனத்தான் நினைப்பார்கள். பயிலுநர் நிலையில் வைத்தே சுறுசுறுப்பாக வேலை வாங்கினால் அவர்கள் எப்போதும் ஒரு இயங்கு நிலையில் இருப்பார்கள்.

உயர்தரப் படிப்புடன் கிளார்க் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்) வேலைக்கு வந்தவர்கள் கெட்டித்தனமாக வேலை செய்கின்றனர். ஆனால் பட்டம் பெற்ற இவர்களிடம் வேலைத் திறமை இல்லையென்ற குற்றச்சாட்டுக் கூறப்படுகின்றது.

கிளார்க் வேலைக்குப் பெரும்பாலும் போட்டிப் பரீட்சைகள் மூலமாகவே ஆட் சேர்க்கின்றனர். இப் பரீட்சையில் பொதுஉளச்சார்பு, மொழித்திறன் போன்ற பாடங்களில் உச்சப் புள்ளிகள் எடுத்தவர்களே நியமனம் பெறுகின்றனர். பரீட்சை முறைமையில் கிளார்க் வேலைக்குரிய திறன்கள் ஊட்டப்படுகிறது. அதனால் அவர்கள் அரச பணியில் சிறப்பான திறன்களை வெளிப்படுத்த முடிகிறது.

ஆனால் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு இது போல மொழித்திறன், கிரகித்தல், நுண்ணறிவு, பொது அறிவு, அறிக்கையிடல், இலத்திரனியல் நிர்வாக முறைமை போன்ற விடயங்களைக் கற்பித்து அவர்களது ஆற்றல்களைக் கூட்டப் பெரும்பாலும் முயற்சி எடுக்கப்படுவதில்லை.

இசை, நடனம், நாடகம் போன்ற துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கு அவர்களது திறன்களுக்கேற்ப வேலைகள் வழங்கப்படுவதில்லை. அவர்களையும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகவே பணியில் இணைக்கின்றனர்.

தமது வேலைத் திறன்களை வளர்த்துக் கொள்வதில் விருப்பம் குறைந்த பட்டதாரிகளும் கணிசமாக உள்ளனர். இதுவும் அரச பணிகள் மூலமாகவே பொதுமக்கள் மிகச் சிறந்த சேவைகளைப் பெறுவதைப் பாதிக்கின்றது. அரச பணியில் இணைவது சுலபமாக இருக்கலாம். கடினமாக இருக்கலாம்.

ஆனால் அவர்கள் செயற்திறன் குறைந்தவர்கள் என்ற காரணத்தை முன் வைத்து பணிநீக்கம் செய்வதற்குரிய நடைமுறைகள் மிக மிகக் கடினமானவை.


அதனால் செயற்திறனற்றவர்களும் அமைதியாகக் குப்பை கொட்டிக் கொண்டு 65 வயது வரையில் பொது மக்களது வரிப் பணத்தைச் சம்பளம், சலுகைகள் என்ற பெயரில் தின்ன முடிகின்றது.

தனியார்துறை ஊழியர்களுக்கான தொழில் பாதுகாப்பை வழங்கும் வகையில் மிகச் சிறந்த முறையில் வளரவில்லை. இதனால் பட்டதாரிகள் மிகச் சிறந்த தொழில் பாதுகாப்பும் சலுகைகளும் உள்ள அரசதுறையைத்தான் விரும்புகின்றனர். அவர்களைத் திறன் மிக்கவர்களாக மாற்றுவதே காலத்தின் தேவை.

■

# இலங்கை எழுத்தாளர்களுக்கான இலக்கியப்போட்டி முடிவுகள்

முருகபூபதி






அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கம் இலங்கை எழுத்தாளர்களுக்காக நடத்திய இலக்கியப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக அவுஸ்திரேலியாவில் இயங்கிவரும் தமிழ் இலக்கிய கலைச் சங்கம், இலங்கை தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில், கடந்த 2019 - 2020 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் வெளியான நூல்களில் சிறந்தவற்றைத் தேர்வுசெய்து, அவற்றை எழுதியவர்களுக்கு பரிசு வழங்கத் தீர்மானித்திருந்தது.

இந்தத் தீர்மானத்திற்கு அமைவாக குறிப்பிட்ட இரண்டு ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் வெளியான சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு முதலான ஐந்து துறைகளில் வெளியான நூல்கள், அவற்றை எழுதிய எழுத்தாளர்களிடமிருந்து கோரப்பட்டிருந்தன.

அதன்பிரகாரம் கிடைக்கப்பெற்ற நூல்களை தேர்ந்த இலக்கிய வாசகர்கள் படித்து, பரிந்துரை செய்தவற்றிலிருந்து இறுதிக்கட்டத் தேர்வில் சிறந்த நூலாகத் தெரிவானவற்றுக்கு பரிசில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மொழிபெயர்ப்புத் துறையில் ஒரே ஒரு நூலே போட்டிக்கு வந்தமையால், இனிவரும் ஆண்டுகளில் நடத்தவிருக்கும் போட்டியில் அதனைப் பரிசீலிப்பது என முடிவாகியிருக்கிறது.

**போட்டி முடிவுகளும் பரிசுத் தொகையும்**

கே. ஆர். டேவிட் சிறுகதைகள் (சிறுகதை)

கே. ஆர் . டேவிட் - ரூபா ஐம்பதினாயிரம்

குஞ்சரம் ஊர்ந்தோர் (நாவல்) - ரூபா ஐம்பதினாயிரம்

சீமான் பத்திநாதன் பர்ணாந்து

மைவண்ணன் இராம காவியம் - (கவிதை) ரூபா ஐம்பதினாயிரம்.

காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீன்

குன்றிலிருந்து கோட்டைக்கு - (கட்டுரை) ரூபா ஐம்பதினாயிரம்.

எம். வாமதேவன்

பரிசு பெற்றவர்களுக்கான பரிசுத் தொகையும் சான்றிதழ்களும், 2022 ஏப்ரல் மாதத்திற்கு முன்பாக அனுப்பி வைக்கப்படும் .

பரிசுத்தொகை - இலங்கை நாணயத்தில் தலா 50 ஆயிரம் ரூபா. (50,000 ரூபா)

குறிப்பிட்ட பரிசுத்தொகைகளை வழங்க முன்வந்துள்ளவர்கள்:

நா . அருணகிரி (மெல்பன்)

எழுத்தாளர் (அமரர்) அருண் விஜயராணி நினைவுப்பரிசு.

முகம்மது ஆரீஃப் (சிட்னி)

எழுத்தாளர் அமரர் மருதூர்க்கொத்தன் நினைவுப்பரிசு.

மருத்துவர் (திருமதி) வஜ்னா ரஃபீக் (மெல்பன்)

எழுத்தாளர் (அமரர்) மருதூர்க்கனி நினைவுப்பரிசு.

மருத்துவர் நொயல் நடேசன் (மெல்பன்)

எழுத்தாளர் (அமரர்) மல்லிகை ஜீவா நினைவுப்பரிசு.

■

# ஆரம்ப வகுப்பு...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற சிந்தனை அவனிடம் இல்லாமல் போகிறது. இது, கணிதக்கூட்டல் பற்றிய முக்கிய இடராகும்.

கழித்தல்: 94 - 51 = 43 என எழுதும் மாணவர் சிலர், அதனடிப்படையில் 74 - 35 = 41 என எழுதுகின்றனர்.

கழிக்கும் போது மேலுள்ள இலக்கத்திலிருந்து கீழுள்ள இலக்கத்தினை கழிக்கத் தெரிந்த மாணவர், மேலுள்ள இலக்கம் கீழுள்ள இலக்கத்தைவிட சிறிதாக உள்ளபோது அதற்கு முன்னுள்ள இடப்பெறுமானத்தில் கடனாக எடுக்க வேண்டுமென்ற தெளிவு மாணவரிடம் இல்லாமல் போகின்றது. இந்த இடரினால், அவன் கீழுள்ள இலக்கம் பெரிதென்பதால் கீழுள்ள இலக்கத்திலிருந்து மேலுள்ள இலக்கத்தைக் கழிக்கப் பழகிவிடுகிறான்.

**மாணவர்களின் கணித இடர்பாடுகளைத் தீர்க்கும் வழிகள்:**

(i) பொருத்தமான வடிவங்களை வேறுபடுத்திப் பிரித்துக்காட்டுவதன் மூலம் கற்றுக் கொடுக்கலாம்.

(ii) பெரியது, சிறியது என்ற வேறுபாட்டினை உணர்த்திக் காட்டலாம்.

(iii) உயரம், கட்டை என்ற வேறுபாட்டினைத் தெளிவுபடுத்தலாம்.

(iv) நிறங்கள் பற்றிய வேறுபாட்டினை வெளிக்காட்டலாம்.

(v) நிறம் சொல்கின்ற விளையாட்டுகளை விளையாடிக் காட்டலாம்.

(vi) ஓட்ட எண்ணிக்கைளின் தொகைகளை அல்லது பழங்களின் தொகைகளை கூட்டிச்சொல்கின்ற விளையாட்டுக்களை விளையாடிக் காட்டலாம்.

உதாரணம் : (1) கிளித்தட்டு, கபடி, கிட்டிப்புள்ளு போன்ற விளையாட்டுக்கள்.

(2) ஒற்றைக்கையால் சிறிய பந்தொன்றைத் தட்டி விளையாடும் கரப்பந்து விளையாட்டினையும், மற்றும் காற்பந்து, கிரிக்கெட் விளையாட்டுக்களையும் விளையாடி விடலாம்.

ஒரு பெட்டிக்குள் வேறு வடிவங்களிலும் வேறுவேறு தொகையிலுமுள்ள பொருட்களை வைத்து விட்டு அவற்றினை வடிவங்களிற்கு ஏற்ப வகைப்படுத்துமாறு சொல்லலாம்.

பெரிய பந்துகள், சிறிய பந்துகளை ஓரிடத்தில் குவித்துவிட்டு அவற்றினைப் பெரிது, சிறிது என வகைப்படுத்தி வைக்குமாறு மாணவர்களிடம் கூறலாம்.

பலவித கொடிகளைக் கொடுத்துவிட்டு இவற்றில் எவை உயரமானவை, எவை உயரம் குறைந்தவை என வகைப்படுத்துமாறு கூறலாம்.

பென்சில்கள் பலவற்றைக் கொடுத்துவிட்டுக் கேட்கலாம். இல்லையேல், அருகிலே உள்ள மரங்களைக் காட்டி இதிலே எது உயரம், எது கட்டை என்று கேட்கலாம். மற்றும் கோபுரங்கள், சிலைகள், மொம்மைகளின் படங்களைக் காட்டி இதில் எது உயரம்? எது கட்டை? என்று கேட்கலாம்.

**கணிதபாட அடிப்படை எண்ணக்கருக்கள் மாணவர்களின் எதிர்கால வாழ்வுடன் தொடர்புபட்டவை அல்ல:**

இக்கூற்றினை ஏற்றுக்கொள்ள முடியாது.

கணிதம் எமது வாழ்வியலின் ஓர் அம்சமாகும். எமது அன்றாட வாழ்வியலின் எந்தவொரு செயற்பாட்டிலும் கணிதம் என்பது இடம்பெறாமல் இல்லை. தனக்குக் கணிதம் எதுவும் தெரியாது என்று சொல்பவர்கள் கூட, கணிதச்செயற்பாடுகளில் மறைமுகமாக நீந்துகின்றனர். இது அவர்களுக்குத் தெரியாத விடயமாகும்.

**சமையலறையில் கணிதப்பயன்பாடு இருக்கிறது:**

உணவு சமைக்கும்போது, எத்தனை பேருக்கு? எவ்வளவு அரிசி? அந்த அரிசியைச் சோறாக்கக் கூடிய பானை எந்தளவாக இருக்க வேண்டும்? எத்தனை கறி ஆக்க வேண்டும்?

அத்தனை பேருக்குமான கறியினை ஆக்கும்போது சட்டிகள் ஒவ்வொன்றும் எந்தளவாக இருக்கவேண்டும்? உப்பு எவ்வளவு போட வேண்டும் என்று சிந்திப்பதெல்லாம் கணிதமாகும்.

**துவிச்சக்கர வண்டியில் செல்லுதல்:**

ஒருவர் துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்தால் ரயர் சில்லில் எவ்வளவு காற்று இருக்க வேண்டும் என்பதை அறிகிறான். காற்றுக்குறைவாக இருந்தாலோ அல்லது கூடவாக இருந்தாலோ துவிச்சக்கரவண்டி ஓடும் போது அது உடலுக்கும் மனதுக்கும் அசௌகரியம் ஏற்படும் என அவன் உணர்கிறான்.

இங்கெல்லாம் கூட, குறைய என்ற அளவுப் பரிமாணம் இடம்பெற்றிருக்கிறது. இதுவொரு கணிதச்செயற்பாடு ஆகும்.

**ஆடைகளைத் தெரிவு செய்து உடுத்தல்:**

ஆடைகளைத் தெரிவு செய்து உடுக்கிற போது கூட கணிதம் என்ற செயல் இடம் பெறுகிறது. ஆடையின் நிறமாக இருக்கட்டும், உடுப்பவரின் உடலுக்குப் பொருத்தமான அளவாக இருக்கட்டும் எதுவென்றாலும் அவை எல்லாம் கணிதம்தான்.

**வாகனம் ஓட்டிச்செல்லுதல்:**

எந்த இடத்தில் வேகமாக ஓடலாம், எங்கு வேகம் குறைத்து ஓடலாம் என்ற சிந்தனையும் கணிதமாகும். நேரிய வீதிகளில் வேகமாக ஓடுகிறான். சனங்கள் கூடிய இடங்களிலும், முடக்குகளிலும் வேகத்தைக் குறைத்து ஓடுகிறான்.

**திருமணம் செய்தல்:**

திருமணம் செய்ய எண்ணும்போது ஆணும் பெண்ணும் தங்களது உயரம், வயது வித்தியாசம் மற்றும் பட்டம், பதவிநிலை என்பவற்றினைக் கருத்தில் எடுக்கின்றனர். அதன்படி திருமணம் செய்கின்றனர். இங்கும் கூட குறைய, உயர்வு கட்டை என்ற எண்ணப்பாங்கு இடம் பெறுகிறது.

**விளையாடும் போது:**

கிட்டிப்புள்ளு, கிளித்தட்டு, கபடி, கிரிக்கெட் ஆகிய விளையாட்டுக்களை விளையாடும்போது எண்களைக் கூட்டுகிறான். அதாவது, கிட்டியால் புள்ளினை மூன்று சந்தர்ப்பங்களில் அடிக்கும் போது, அது விழுகின்ற இடம் கிட்டிப்புள் குழியிலிருந்து எவ்வளவு தூரம் என்பதை கிட்டியால் அளந்து சொல்கிறான். அத்தொகையினை, தான் அல்லது தனது குழுவினால் அளந்து வருகிற தொகையோடு கூட்டிச் சொல்கிறான். இறுதியில் எந்த அணி கூடுதலான தொகையினை சொல்கிறதோ அந்த அணி வெற்றி பெற்ற அணியாகக் கருதப்படும்.


கால்பந்து விளையாடும் போது அடிக்கும் கோல்களை எண்ணுகிறான். மொத்தக் கோல்களின் எண்ணிக்கை சொல்லும் போது 'ஒரு கழகத்திற்கு எதிராகப் போட்ட கோல்களின் எண்ணிக்கை' என்கிறான். இவைபோல், கிரிக்கெட் விளையாடும்போது பெற்ற ஓட்டங்களின் எண்ணிக்கையும், விழுதப்பட்ட விக்கெட்டுகளின் எண்ணிக்கையும்கூட்டல்முறையினை பயன்படுத்தி சொல்கிறான்.

இவ்வாறாக தெரிந்தோ தெரியாமலோ கணித எண்ணக்கருக்களின் தன்மைகளை மாணவர்கள் தங்கள் அன்றாட வாழ்வியல் செயற்பாடுகளோடு பெற்றுவிடுகின்றனர் என்பது பேருண்மையாகும். ■

# கல்யாணக்கனவு

கனவு 09

– யாழ் சத்யா



ஒலித்துக் கொண்டிருந்த தொலைபேசியையே பார்த்துக் கொண்டிருந்தாள் வைஷாலி. ஒரு தடவை முழுதாக ஒலித்து ஓய்ந்ததன் பின்னர் குறுஞ்செய்தி வந்ததற்கான சத்தம் கேட்கவும் எடுத்துப் பார்த்தாள். சஞ்சயன்தான்.

"முரளியின் நம்பரை அனுப்பு" என்று வந்திருந்தது. சிறிது நேரம் சிந்தித்தவள், ஒரு முடிவுக்கு வந்தவளாய் அவனுக்குப் பதில் அனுப்பினாள்.

"நாளைக்கு லஞ்சுக்கு வா... வீட்டு அட்ரஸ்...." அவனும் பார்த்து விட்டு, சரி என்று அனுப்பி இருந்தான்.

அன்றிரவு தூக்கம் தொலைத்துக் காலையில் எழுந்து அருகிலிருந்த காய்கறிகள் விற்கும் கடைக்குச் சென்றவள் புதிதாய் வந்திருந்த மரக்கறிகளை வாங்கி வந்து சமையலை ஆரம்பித்து விட்டாள். மலையகப் பகுதியில் புத்தம் புதிதாய் பச்சையாய் விளைந்த காய்கறிகளுக்குக் குறைவேது?

வேலை முடித்து வந்து அதுல்யா இவளுக்கு உதவி செய்ய முனைய, வைஷாலி தடுத்து விட்டு அவளைச் சென்று சிறிது நேரம் தூங்கி எழச் சொல்லி விட்டுத் தானே முழுச் சமையலையும் முடித்தாள்.

மணி பன்னிரண்டு அடிக்கவும் கையிலே பெரிய பூங்கொத்தோடு வந்தவனை மகிழ்ச்சியாகவே வரவேற்றாள் வைஷாலி.

மலர்ந்த முகத்தோடு அவளிடம் பூங்கொத்தைக் கொடுத்தவன் விழிகள் முரளிதரனைத் தேடியது. அது புரிந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாது அவனை உள்ளே வருமாறு அழைத்து வரவேற்பறையில் அமருமாறு பணித்தாள்.

அங்கிருந்த அதுல்யாவும் அவனை வரவேற்றுத் தன்னை அறிமுகம் செய்து கொண்டாள். அதற்கு மேல் பொறுக்க மாட்டாதவனாய் வாய் விட்டே கேட்டு விட்டான் சஞ்சயன்.

"வைஷூ...! முரளி எங்கே? நேற்று நீ நம்பரும் அனுப்பேல்ல..."

"முரளி கனடாவில... போய் ஐந்து வருசத்துக்கும் மேல... உனக்கு அது கூடத் தெரியாதாடா?"

"உண்மையாவோ... சத்தியமாத் தெரியாது வைஷூ... நான் யாரோடயும் கதைக்கிறேல்ல தானே... நீ ஏன் நேற்றே அதைச் சொல்லேல்ல. முரளி இங்க இல்லை என்று தெரிஞ்சிருந்தால் நான் வந்திருக்க மாட்டன் வைஷூ... ஸொரிடி... நான் போய்ட்டு வாறன்... நாங்க வெளில எங்கேயாவது மீட் பண்ணுவோம்..." கூறிக் கொண்டே இருக்கையை விட்டு எழுந்தவனை முறைத்தாள்வைஷாலி.

"அவ்வளவு நல்லவனாடா நீ... ஓவரா ஸீன் போடாமல் முதல்ல உட்காரு... உனக்கெல்லாம் அவ்வளவு ஸீன் இல்லை நண்பா..."

அவள் கூறவும் தயக்கத்துடன் அமர்ந்தான் சஞ்சயன். வரும்போது இருந்த இயல்பு நிலையை இழந்து அவன் கொஞ்சம் அவஸ்தையோடே அமர்ந்திருந்தான். மனதிலோ ஏகப்பட்ட குழப்பங்களும் கேள்விகளும். இவள் ஏன் கனடா போகாமல் இங்கே தனியாக இருக்கிறாள் என்று.

தானே தயாரித்த அப்பிள் பழச்சாற்றை அவனிடமும் அதுல்யாவிடமும் கொடுத்து விட்டுத் தானும் ஒன்றை எடுத்துக் கொண்டு ஸோபாவில் அமர்ந்தாள் வைஷாலி.

சஞ்சயனின் குழப்பம் நிறைந்த முகத்தை ஏறிட்டவள், அவனின் கேள்விகள் புரிந்தும் முடிந்தவரை அவற்றை ஒதுக்கவே முனைந்தாள். மூவரும் பொதுவாக சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுச் சாப்பிட ஆயத்தமானார்கள்.

உருளைக் கிழங்கும் தக்காளிப் பழமும் போட்டுக் குழம்பு, கத்தரிக்காயும் கடலையும் போட்டுப் பிரட்டல் கறி, பூசணிக்காயும் மரவள்ளிக் கிழங்கும் போட்டு ஒரு வெள்ளைக் கறி, கீரை, வாழைக்காய் சம்பல், பயிற்றங்காய்ப் பிரட்டல், பப்படம், மோர் மிளகாய் பொரியல், வடை, பாயாசம் என்று ஒரு விருந்தே தயாரித்திருந்தாள் வைஷாலி.

அதுல்யாவே வியப்போடு சாப்பாட்டு மேசையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மேசையில் வந்தமர்ந்தவனுக்கு முன்னால் ஒரு வாழை இலையைக் கொண்டு வந்து வைத்தாள் வைஷாலி. அதைக் கண்ட சஞ்சயன்,

"சூப்பர் வைஷூ... வாழையிலை இருக்கு என்றால் கீழேயே இருந்து சாப்பிடுவம். எவ்வளவு நாளாச்சு... இப்பிடி எங்கட ஊர்ச் சமையலைப் பார்த்து. வடை பாயாசம் வேற செய்திருக்கிறாய்... நிலத்தில இருந்து சாப்பிட்டால்தான் வாழையிலைக்கு மரியாதை..."

கூறியவன் அத்தோடு நில்லாமல் வரவேற்பறையில் ஸோபாவுக்கு முன்னால் இருந்த சிறிய ரீப்போவை எடுத்து ஒதுக்கமாக வைத்து இடம் ஏற்படுத்தி விட்டு உணவிருந்த பாத்திரங்களைக் கீழே நிலத்தில் கொண்டு சென்று வைத்தான். அதுல்யாவும் வைஷாலியும் அவனைப் பின் தொடர்ந்தனர்.

எல்லா உணவுப் பொருட்களையும் கீழே வைத்ததும் மூவரும் உணவுப் பாத்திரங்களைச் சுற்றியமர்ந்து வாழையிலையைத் தங்களுக்கு முன்னால் வைத்து ஆளாளுக்கு உதவி செய்து பரிமாறியபடி உண்ண ஆரம்பித்தனர். இரண்டு வாய் வைத்து விட்டு கலங்கிய கண்களை மெது வாய் துடைத்தான் சஞ்சயன்.

வைஷாலி குனிந்து சாப்பிட்டுக் கொண்டிருக்க, சஞ்சயன் எதிரே அமர்ந்திருந்த அதுல்யா இதைக் கவனித்து விட்டாள்.

"என்னாச்சு சஞ்சயன்? உறைப்பாக இருக்கா?"

அவள் அவ்வாறு கேட்டதைப் பார்த்து வைஷாலியும் நிமிர்ந்து அவனை நோக்கினாள்.

"உறைப்பெல்லாம் அளவாகத்தான் இருக்கு. நான் இப்பிடிச் சாப்பிட்டு வருசக் கணக்காச்சுத் தெரியுமா? அதுவும் வைஷூ கையால சாப்பிடுவன் என்று கனவிலும் நினைச்சுப் பாக்கேல."

கொஞ்சம் குரல் கமற அவன் கூறவும் வைஷாலிக்கும் கேலி பேசத் தோன்றாமல் அவனை அமைதியாகவே பார்த்திருந்தாள்.

அதுல்யா தான் சூழ்நிலையின் கனத்தைக் குறைக்க பொதுவாகப் பேச ஆரம்பிக்க மூவரும் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டே உண்டனர். சோறு, கறி சாப்பிட்டு முடித்ததும் அதே இலையில் சஞ்சயன் பாயாசத்தை விட்டுக் கைகளால் அள்ளிக் குடிக்கவும் அவனையே அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் அதுல்யா.

"ஏன் சஞ்சயன் இப்படிக் குடிக்கிறியள்? டிஸ்ல ஸ்பூன் போட்டுக் குடிக்கலாமே."

"இப்பிடிக் குடிக்கிற ருசியே தனி அதுல்யா..."

என்றவன் தனது கருமமே கண்ணாய்ப் பாயாசத்தை ஒரு வழி பார்க்க, அதுல்யாவும் அவனைப் போல சிறிது பாயாசத்தை இலையில் விட்டு ருசித்துப் பார்த்தாள். அந்த சுவை பிடித்து விடவே அப்படியே சுவைக்கலானாள்.

மூவரும் சேர்ந்து உண்ட இடத்தை ஒதுக்கிச் சுத்தம் செய்து விட்டு வரவேற்பறையில் அமர்ந்தார்கள்.

**அவள் கனவு நனவாகுமா?**

**சஞ்சயனின் குழப்பம் நிறைந்த முகத்தை ஏறிட்டவள், அவனின் கேள்விகள் புரிந்தும் முடிந்தவரை அவற்றை ஒதுக்கவே முனைந்தாள். மூவரும் பொதுவாக சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுச் சாப்பிட ஆயத்தமானார்கள். உருளைக் கிழங்கும் தக்காளிப் பழமும் போட்டுக் குழம்பு, கத்தரிக்காயும் கடலையும் போட்டுப் பிரட்டல் கறி, பூசணிக்காயும் மரவள்ளிக் கிழங்கும் போட்டு ஒரு வெள்ளைக் கறி, கீரை, வாழைக்காய் சம்பல், பயிற்றங்காய்ப் பிரட்டல், பப்படம், மோர் மிளகாய் பொரியல், வடை, பாயாசம் என்று ஒரு விருந்தே தயாரித்திருந்தாள் வைஷாலி.**

# இருந்தால் நல்லது

ஆதவன்

**கடவுளுக்குக் கண்ணில்லை என்று சொல்வதா? அல்லது யார் கண் பட்டதோ என மற்றவர் மேல் பழிபோடுவதா? என்று திணறும் வகையில் அவள் வாழ்க்கையில் சம்பவங்கள் அரங்கேறின. வீட்டில் வரன் பார்த்து நல்லவன் என்றே கட்டிவைத்தார்கள். நாளடைவில் அவன் போக்கு மாறியதா? இல்லை ஏற்கெனவே அப்படிப் பட்டவனா? என்று உணரமுடியவில்லை. ஊதாரிக் குடிகாரனாக மாறிவிட்டான்.**

(1)

“ஆ கடவுளே” என்று தன்னையறியாமல் அலறியபடி ஒரு காலைத் தூக்கினாள் மங்களம் ஆச்சி. கால் பெருவிரலில் முன்தோல் பிரிந்து இரத்தம் அதில் ஒட்டியிருந்த புழுதியை கரைத்து வெளியே வடியத்தொடங்கியிருந்தது. காலடியில் கிடந்த கல்லிலும் சில இரத்தத்துளிகள் சிதறின.

“அறுவார் போற பாதையில் இந்தக் கோதாரிய போட்டிருக்கிறாங்கள்” என்று இன்னும் கொஞ்சம் கெட்ட வார்த்தைகளை உதிர்த்தவள் தலையில் இருந்த பெரிய கடகத்தை மெதுவாக அந்தப் பாதையோரம் இறக்கி வைத்தாள்.

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பதைப் போல மீண்டும் மீண்டும் பல சறுக்கல்களையும் வேதனைகளையும் சுமந்து திரியும் ஜீவன். அறுபத்தி ஏழு வயசு. முகத்தில் சுருக்கங்கள் வேர் விட்டிருந்தாலும் கண்கள் தீர்க்கமாயும் இதயம் எதையும் தாங்க ஆயத்தமாகவே இருந்தது. இந்த வலியெல்லாம் சாதாரணம். உடல்வலியை விட மன வலியே கடந்த காலத்தில் அவளைப் புடம் போட்டு வைத்திருந்தது. அந்த வலிகளுக்கு அகராதியிலே பொருள் காணுவது சாத்தியம் இல்லை.

புழுதிமண்டிய மண் பாதை. பலவருடங்களுக்கு முன் தார் ஊற்றியதாம். அதற்கான எந்த மிச்சமும் அங்கே காணக்கூடியதாக இல்லை. குண்டும் குழியுமாக இருந்தது. காற்றுக்கு எழும்பி அடிக்கும் புழுதிப்படை அவ்வழியே போய் வருகிறவர்களுக்கும் பக்கத்து வீடுகளுக்கும் பெரும் சிரமம் கொடுக்கிறது.

மங்களம் ஆச்சி அந்த வலியிலும் ஒலிபெருக்கியில் கேட்கும் மருதடி பிள்ளையார் கோவில் மேளச்சத்தத்தை வைத்து, “இப்ப கும்பபூஜை முடிஞ்சு மூலஸ்தான அபிஷேகம் நடக்குது. சனம் வரத் தொடங்கியிருக்கும்” என்று எண்ணிக்கொண்டாள்.

முன்னெல்லாம் சிறிய மணிச்சத்தத்துக்கே ஒவ்வொரு தடவையும் மூன்று குட்டுக் குட்டி கும்பிடும் அவள் இப்போது இடைக்கிடை கேட்கும் காண்டாமணி ஒலிக்கே சட்டைசெய்யாமல் இருந்தாள். வேதனையால் வந்த வெறுப்பு மனதை கல்லாக்கி விட்டது.

“என்னண ஆச்சி? உந்த சருகுக்க என்ன தேடுற?” என்று பரிகாசம் செய்து கொண்டு சைக்கிளில் போனான் பக்கத்து வீட்டுச்சுட்டிப்பயல். பெரிய வாலு. அடிக்கடி இவளுடன் சண்டை இழுப்பான். சைக்கிளின் அரைவாசி உயரம் தான் இருப்பான். மேல் சட்டை போடவில்லை. புழுதியில் மூக்கை உறிஞ்சிக்கொண்டு சைக்கிள் பாருக்கு கீழால கால் விட்டு உளக்கிக்கொண்டு கடந்தான். கடுப்பான ஆச்சி அவனை நோக்கியும் நாலு வார்த்தை திட்டித்தீர்த்தாள்.

வேளைக்கே போக வேண்டும் என்ற அவா அவளை உந்தியது. இறக்கிவைத்த கடகத்தில் இரண்டு பெரிய பொதிகளும் ஒரு சின்னப் பொதியும் அதை மூடிக் கொஞ்சம் பெரிய வட்ட வடிவப் பனையோலையில் பொத்திய தட்டையான தட்டுப்பெட்டிகள் இருந்தன. தோல் சுருங்கி கண்கள் தாண்ட இந்தத் தளராத வயதிலும் வயிற்றுப்பிழைப்புக்குக் கச்சான் விற்கிறாள். ஏதோவொரு வகையில் அது கட்டாயமாகவும் இருக்கிறது.

ஒரு பெரிய பொதி வறுத்த கச்சான் மற்றது சோளம் பொரி அத்துடன் சிறிய பொதியில் பட்டாணிக்கடலை. சற்று முன் தான் வறுத்திருந்ததால் இன்னும் சூடாகவே இருந்தது. அதுதான் அவளின் அன்றைய முதல் முதலீடு எல்லாமே. தோளில் கொழுவியிருந்த சீலைப் பையில் கடதாசிக்கட்டும் அளக்கும் பாத்திரங்களும் இருந்தன. மீன்டின்னில் வெட்டி எடுத்த அளக்கும் சுண்டுகள் வெவ்வேறு அளவுகளில் ஐந்து பத்து ரூபாய்களுக்கு அளந்து கொடுக்கச் செய்யப்பட்டிருந்தது.

மருதடிப் பிள்ளையார் கோவில் அருகில் இருக்கும் தேத்தண்ணிக்கடை முன் தாவாரமே மங்களம் ஆச்சியின் வியாபாரத்தளம். கோவிலுக்கு வருகிறவர்களின் காலணிகளை தனக்குப் பக்கம் கழட்டி விடச்சொல்லுவாள். இது ஆச்சியின் வியாபாரத் தந்திரம். அவர்கள் வீடு திரும்பும் போது எப்படியும் தன்னிடம் கச்சான் வாங்குவார்கள் என்ற நம்பிக்கையில்.

சுற்று வட்டார கோவில்கள் தேவாலயங்களில் திருவிழாக்கள் மற்றும் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள்தான் அவளின் வியாபாரத்துக்கான சந்தைகள்.

காலில் செருப்பு இல்லாமல் கடகத்தைக் காவி நடந்து திரியும் அவளின் பாதங்கள் மரத்திருந்தது. விரைவாக சீலைத்தலைப்பில் ஓரத்தில் கிழித்து கால் பெருவிரல் இரத்தத்தைத் துடைத்து விட்டு இறுக்கமாகக் கட்டினாள். இரத்தம் வருவது நின்றாலும் கட்டிய சீலைத்துண்டுக்கு மேலால் கொஞ்சம் கசிந்திருந்தது.

(2)

ஒரு காலத்தில் மங்களம் ஆச்சியின் கடவுள் பக்திக்கு யாரும் போட்டி போட முடியாது. அப்படியொரு பக்தி அவளின் நெஞ்சில் குடிகொண்டிருந்தது. திருமணத்துக்கு முன்னமே பல விரதங்கள் நேத்திகள் என்று தன்னை வருத்தி கடவுளைத் துதிப்பாள்.

ஆவணி தொடங்கினால் குசினியில் இருந்த மச்சச் சட்டிகள் பின் பத்திக்கு இடம்பெயர்ந்திடும். யாழ்ப்பாணம் புற நகரில் மானிப்பாய் என்னும் பட்டினத்தில் இருந்தாலும், யாழ் நல்லூர் திருவிழா தொடக்கி நவராத்திரி, கௌரிக்காப்பு, கந்தசட்டி என்று தொடர்ந்து திருவம்பா வரை நீளும் விரதங்கள் மங்களத்துக்கு அத்துப்படி. பெரிய பிள்ளை ஆனதில் இருந்து கந்த சஷ்டி ஆறு நாளும் மூன்று மிளகும் மூன்று மிடறு தண்ணியும் குடிக்கும் உக்கிரமான விரதத்துடன் வெறும் கண்டாந்தரையில் தினமும் சாணம் மெழுகி படுக்கும் ஆச்சாரமும் கடைப் பிடித்தாள்.



கடவுளுக்குக் கண்ணில்லை என்று சொல்வதா? அல்லது யார் கண் பட்டதோ என மற்றவர் மேல் பழிபோடுவதா? என்று திணறும் வகையில் அவள் வாழ்க்கையில் சம்பவங்கள் அரங்கேறின. வீட்டில் வரன் பார்த்து நல்லவன் என்றே கட்டிவைத்தார்கள். நாளடைவில் அவன் போக்கு மாறியதா? இல்லை ஏற்கெனவே அப்படிப்பட்டவனா? என்று உணரமுடியவில்லை. ஊதாரிக் குடிகாரனாக மாறிவிட்டான்.

மகனும் மகளும் என இரண்டு பிள்ளைகள். கணவனுக்கு நிலையான தொழில் இல்லை. சில வேளைகளில் வருமானம் இல்லாமல், இருந்த நகைகள் பொருட்களை விற்கவும் தொடங்கிவிட்டான். மங்களம் எவ்வளவோ சொல்லியும் அவனை வழிப்படுத்த முடியவில்லை. குடிகாரனை திருத்துவது அவ்வளவு இலகுவான காரியம் இல்லைதானே.

வெகு விரைவில் குடும்பம் ஒட்டாண்டி ஆகியது. சொந்தங்கள் சிலர் எப்போவாவது வந்து பார்த்தாலும் அவளின் சமூகம் மிகவும் பின்தங்கி இருந்ததால் உதவியை அவர்களிடம் எதிர்பார்க்க விரும்பவில்லை.

மகள் கைக்குழந்தையாகவும் மகன் ஆறு வயதிலும் இருக்கும் போது ஒரு நாள் கணவனும் குடியால் அற்பாயுளில் இறந்துவிட்டான். வைராக்கியத்துடன் வறுமையிலும் தளராமல் வீட்டு வேலைகள் செய்தும் நேரம் கிடைக்கும் போது கச்சான் விற்றும் குடும்பத்தைக் காப்பாற்றினாள்.

அப்போதும் கடவுளை நம்பினாள். காலம் போகப் போக பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையானது மங்களம் ஆச்சியின் வாழ்க்கை.

மகன் படிப்பு ஓடாததால் ஒரு பேக்கரியில் வேலை பார்த்தான். அங்கேயே தங்கி இருந்து வேலை செய்து சனி, ஞாயிறு வீட்டுக்கு வருபவன் ஒருமாதமாக வரவில்லை.

ஒருநாள் சிலர் வந்து அவளையும் குடும்பத்தையும் திட்டித்தீர்த்தார்கள். அப்போதுதான் தெரிந்தது மகன் யாரோ ஒரு பெண்ணைக் கூட்டிக்கொண்டு ஓடிவிட்டானாம். அந்தப் பெண்ணின் உறவுக்காரருக்குப் பயந்து எங்கோ கண்காணாத இடத்துக்கு மகன் சென்றுவிட்டான்.

மகள் இருபது வயதில் காதலித்தவனையே கலியாணம் செய்தாள். சற்று சந்தோசம் அடைந்த மங்களம் தன்னை ஆசுவாசப்படுத்தி மெல்லியதாய் மேல உள்ளவன் செயல் என்று மீண்டும் நம்ப தலைப்பட்டாள். அது நிலைக்கவில்லை. அந்த நம்பிக்கை சில நாட்களில் தகர்ந்தது.

திருமணம் முடிக்கும் போது எதுவும் வேண்டாம் என்று சம்மதித்த மாப்பிளைவீடு இப்போ வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்த மகளும் பிரிந்து வந்து தாயுடன் இருக்கிறாள். வரும்போது மூன்று மாதம் முழுகாமல் இருந்தாள். பெற்ற குறை தொட்ட குறையாக மங்களமும் சக்திக்கு ஏற்ப சம்பாதித்து குடும்பத்தைக் காப்பாற்றினாள். அவளால் தவிர்க்க முடியவில்லை. தனக்கு பிறகு மகளின் நிலையை எண்ணி நாள்தோறும் உடைகிறாள்.

அதன் பின் கோவிலுக்கு வருவோரை பார்க்கும் போது உள்ளே சிரித்தாள்.

(3)

கட்டுப்போட்ட பெருவிரலை சற்று தடவிவிட்டு கச்சான் கடகத்தைத் தலைக்குத் தூக்கி நடந்தாள். வீட்டில் நிறைமாதக் கர்ப்பிணியான மகளுக்குச் சமைத்து வைத்து விட்டு வந்தவளுக்குப் பின்னேரம் வாங்க வேண்டிய சாமான்களும் செலவுகளும் மனக்கண்ணில் ஓடிக்கொண்டிருந்தது. ஐந்தாம் திருவிழாக்காரர் விசேட மேளம் பிடித்திருக்க வேண்டும். மேளச்சத்தத்தின் ஆலாபனை வசந்த மண்டபப் பூஜை தொடங்கியதைக் கட்டியம் கூறிக் கொண்டிருந்தது. பிரதான வீதியில் ஏறி வலது பக்கம் திரும்பி கோவிலை நோக்கி நடந்தாள். தார் வீதியின் வெயில் சூடு காலை அள்ளியது. காயப்பட்ட காலும் சுள்ளென்று வலிக்க அவள் வேகமாக நடந்தாள். ”இண்டைக்கு கொஞ்சம் பிந்திட்டுது” என்ற கவலையே கால் வலியை விட அதிகமாக இருந்தது.

வெயில் கண்ணைக்கூச தூரத்தில் வழமைக்கு மாறாக பலரின் நடமாட்டம் அந்தத் தேத்தண்ணிக் கடைக்கு முன்னாள் தெரிந்தது.

இன்னும் கொஞ்சம் கிட்ட வரவும் கடையின் முன் தாழ்வாரத்தில் ஒரு லொறி புகுந்து நின்றது. அரைவாசிக்கூரை பிரிந்து தொங்க அங்கே கச்சான் பெட்டி வைத்துவிக்கும் பலகைத்தட்டு ஓரமாக தூக்கி வீசப் பட்டு கிடந்தது. “நீ கும்பிட்ட பிள்ளையார் உன்னை கைவிடேல பாத்தியோ? இன்னும் கொஞ்சம் எட்டி வந்திருந்தால் லொறிய உனக்கு மேலதான் ஏத்தியிருப்பான் படு பாவிப் பயல்” என்றார் பக்கத்துக் கடைக்காரர் பரிவுடன். பக்கத்துக் கடையின் முன்னால் கடகத்தை இறக்கி வைத்தவள் அங்கேயிருந்த குந்தில் உட்கார்ந்தாள். நெற் றியில் வழிந்த வியர்வையை சேலை தலைப்பால் துடைத்தபடி குனிந்து பார்த்தாள். ஈரம் சற்றும் இல்லாமல் பெரு விரலில் வழிந்த இரத்தமும் காய்ந்திருந்தது. ஒலிபெருக்கியில் மல்லாரி இசை பரவ பிள்ளையார் வசந்த மண்டபத்தில் இருந்து எழுந்தருளியாகப் புறப்பட்டார்.

**(முற்றும்)**

# “சோ.ப சிறப்பிதழ்” சில குறிப்புகள்

த.அபிநாத்

ஈழத்துச் சஞ்சிகைகளிற்கெல்லாம் கிரீடம் வைத்தாற் போல திகழ்கின்ற ஜீவநதி சஞ்சிகையானது 164 ஆவது இதழை சோ. ப. சிறப்பிதழாக வெளிக்கொணர்ந்துள்ளது. ஈழத்தின் பன்முக ஆற்றல்மிக்க ஆளுமையான சோ. பத்மநாதன் அவர்களை கௌரவப்படுத்திய ஜீவநதி சஞ்சிகையின் ஆசிரியர் க.பரணீதரன் பாராட்டுக்குரியவர். ஈழத்தின் மூத்த இலக்கிய ஆளுமைகளைக் கொண்டாடும் முகமாக வெளிவரும் 10 ஆவது சிறப்பிதழாக இச் சிறப்பிதழ் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சோ.ப. என்ற இரண்டெழுத்தால் அறியப்படும் சோ.பத்மநாதனுக்கு இலக்கிய உலகிலே அறிமுகம் தேவையில்லை. அவரை அறியாதோர் பெரும்பாலும் இலக்கியம் சார்ந்த புரிதல் இல்லாதவராகவே அமைவார்கள். தமிழ் மட்டுமன்றி சிங்களம், ஆங்கிலம், மலையாளம் போன்ற மொழிகளிலும் பரவலாக அறியப்பட்ட ஆளுமையாளராய் சோ.ப. அவர்கள் காணப்படுகின்றார். அவர் ஈழத்திலே பிறந்ததால் ஈழத்து இலக்கிய உலகமே பெருமை அடைந்துள்ளது.

இச் சிறப்பிதழின் முதற்கட்டுரையான “சோ.ப. எனும் மானுடம்” என்ற தி.செல்வமனோகரன் அவர்களின் கட்டுரை கவிஞரின் வாழ்க்கை வரலாற்றோடு ஆரம்பித்து அவரின் வளர்ச்சிக் கட்டங்களையும் மொழிபெயர்ப்பு, கவிதை ஆக்கம், ஆய்வுக்கட்டுரைகள், மேடைப் பேச்சுக்கள் என தலைமைகளால் கடாட்சிக்கப்பட்ட வித்தகனாக சோ.ப. திகழ்வதையும் அவருக்கு வழங்கப்பட்டு அவரால் அழகுறும் விருதுகள் பற்றியும் கவிஞரோடு கட்டுரையாசிரியர் கொண்ட ஆழ்ந்த உறவினையும் நுட்பமுடனும் இயம்பி நிற்கிறது.

“திருவரங்க நாயகனான பத்மநாதன் போல் கவியரங்க நாயகனான சோ.பத்மநாதன் அவர்களும் வாழ்த்துக்கும், வணக்கத்துக்கும் உரியவரே” என நிறுவும் இ.சு முரளிதரனுடைய அரங்க நாயகன் கட்டுரையானது சோ.ப. வின் கவியரங்கக் கவிதைகள் பற்றி விளக்கி நிற்கிறது. இதற்கு ஒரு சோற்றுப் பதமாய் கட்டுரையாசிரியரை கவிஞர் சோ.ப. அறிமுகம் செய்யும் முறைமை பின்வருமாறு;

“இளங்கவி முரளி இனியவன் என்னோடு
எத்தனை அரங்குகளில் ஏறி
முழங்கிய பெருமைக்குரியவன் தமிழை
முறைமுறையாகக் கற்ற மாணவன்
நளன் கதை தன்னை நவகவியாகத்
தந்து பாராட்டுகள் பெற்று
விளங்குவோன் நுங்குவிழிகள் என்றொரு நூலும்
வேட்டவன் சிறுகதை சினிமா
என்று பல்துறையும் சென்றவன் கடவுள்
கையிலோர் செல்போன் நம்பர்
ஒன்று தந்தென்னை வியக்க வைத்தோன்
நெருநல் தொகுதியும் தந்தான்
இங்கிவனை மாணவனாய்ப் பெற
என்ன தவம் செய்து விட்டேன்”

பேராசிரியர் சி.சிவலிங்கராசா எழுதிய “நான் கண்ட சோ.ப” கட்டுரை கவிஞரதும் கட்டுரையாசிரியரதும் இனிமையான நினைவுகளை சுருதி சுத்தமாக மீட்கும் வண்ணம் அமைகிறது. சோ.ப. வின் சமூகப் பணிக்கு கட்டியம் கூறும் வண்ணம் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற்காக கவிஞர் அயராது தொண்டாற்றிய திறத்தையும் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தை மீட்டு மீண்டும் நிறுத்துவதற்கு உதவிய தன்மையும் குறிப்பிட்டு அவர் தம் மானுட மேன்மையை அறிந்தவராய் தன்னையும் குறிப்பிடுகிறார்.

சோ.ப.வின் கவிப்பணியை ஆவணப்படுத்தும் தன்மையோடு கவிஞரும் மாநகரசபை ஆணையாளருமான த.ஜெயசீலன் “சோ.ப: பல் பரிமாண ஆளுமை” எனும் கட்டுரை சந்தக் கவிதைகள் மொழிபெயர்ப்புக்கவிதைகள், இசைப்பாடல்கள், சீரான தெளிந்த தீர்க்கமான பேச்சுப்பாணி, மரபிலக்கியம் மேல் அவர் கொண்ட பரிச்சயம், நாசூக்காய் விமர்சிக்கும் தன்மை, நடிப்பாற்றல், ஆழம் நிறைந்த ஆங்கில அறிவு, கல்விப்பணி, கலைப்பணி, சமூகப்பணி எனக் கவிஞர் சோ.ப.சார்ந்த பல விடயங்களை அலசி ஆராய்கின்றது. மேலும் சோ.ப.வை போற்றும் “வாழும் வியப்பு சோ.ப.” எனும் இவரின் கவிதையும் சிறப்பிதழில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. வடக்கிருத்தல் எனும் சோ.ப.வின் கவிதைத்தொகுப்பில் தீட்டப்பட்ட பெண்கள் பற்றிப் பேசுவதாக கோகிலா மகேந்திரனின் வடக்கிருத்தல் வாழும் பெண்கள் கட்டுரை அமைகிறது.

பன்மொழி ஆற்றல் மிகுந்த சோ.ப. அவர்களின் மொழிபெயர்ப்பு நுட்பத்தினை எடுத்துரைக்கும் கட்டுரையாக கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன் எழுதிய “உலகம் தழுவும் முயற்சி: சோ.ப.வின் மொழிபெயர்ப்பில் உலகக் கவிதை” என்னும் கட்டுரை அமைந்துள்ளது. சோ.ப. அவர்களின் ஆபிரிக்கக்கவிதை மொழிபெயர்ப்பு, சிங்களக் கவிதை மொழிபெயர்ப்பு, தென்னாசியக் கவிதை மொழிபெயர்ப்பு என்பவற்றின் உள்ளடக்கத்தினையும் மொழிபெயர்ப்பின் சிறப்பினையும் பேசுகின்றது. சிங்கள மக்களின் மன அதிர்வுகளை தமிழர்களிடம் கடத்தியதில் சோ.ப. அவர்களின் பங்கும் கணிசமானது என கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களின் விமர்சனம் தெளிவுபடுத்துகின்றது.




“எளிமையின் அழகியலாய் விரியும் சோ.ப.வின் நினைவுச் சுவடுகள்” எனும் தருமராசா அஜந்தகுமாரின் கட்டுரை சோ.ப.வின் கவிதை உறவுகள் பற்றிய பண்பாட்டுச்சித்திரமாக, நகைச்சுவைச் சித்திரமாக, பண்பாட்டுப்பதிவாக, கவிஞரின் தம்பலகாம வாழ்வை வெளிப்படுத்துவதாக, மண்பற்றைப் பேசுவதாக, சமூகப்பிரச்சினைகளை அலசுவதாக, போர் வாழ்வியலை வெளிப்படுத்துவதாக, பல கவிதைகள் ஊடாக காட்டி ஆதாரப்படுத்தி சுவையுற அமைகிறது.




அ.யோகராசா அவர்களின் கட்டுரையான சோ.பவுடன் எனது தொடர்பு என்ற கட்டுரையானது இருவர் வாழ்விலும் கலைத்துறையில் நிறைந்த நினைவுகளின் தொகுப்பாக மலர்ந்திருக்கிறது. “சோ.ப.வின் பர்மிய பிக்குகள் சொன்னகதை” எனும் பேராசிரியர் எம்.ஏ.நுஃமானின் கட்டுரையானது சோ.ப.வின் மொழிபெயர்ப்பாற்றலை வெளிப்படுத்துகிறது. தினசரி கோவா சூப் குடித்து அலுத்துப்போன குருமடத்தை விட்டுச் செல்லாமல் போவதை அறிந்த குருமடச் சொந்தக்காரி கவிதையை எழுதி அவருக்கு அனுப்புவதாகவும் அதற்கு குரு பின்வரும் பதிற் கவிதை எழுதி அனுப்புவதையும் சோ.ப.சிறப்பாக பதிவு செய்துள்ளார்.

“வழிபார்த்திருக்கின்றேன்
வாள்விழிகள் நீர்சோர
தங்கத் துறவி வரத்
தாமதமேன் நானறியேன்
வழி பார்த்திருக்காதே
வாள் விழி நீர் சொரியாதே
கோவாப் பயிர் அழிந்தால்
குடியிருக்க நான் வருவேன்”


கெக்கிராவ ஸுலைஹாவின் “சோ.பத்மநாதனின் ஆபிரிக்க கவிதைகளில் கண்டு நயந்தவை கண்ணீரும்” எனும் கட்டுரை சோ.ப.வின் ஆபிரிக்க கவிதை நூல் ஆபிரிக்க மக்களின் கொடுந்துயரை கூறுமாற்றை விளக்கி நிற்கிறது.

“சோ.ப.வின் முதலாவது கவிதைத் தொகுதி வடக்கிருத்தல் குறித்த ஒரு கவிநய நோக்கு” எனும் தலைப்பில் புலோலியூர் வேல்நந்த குமார் எழுதிய கட்டுரையானது சோ.ப.வின் கவிதைகளை ரசனை சொட்ட சொட்ட குறிப்பிட்டு வடக்கிருத்தல் கவிதைத் தொகுதியில் இடம் பெறும் கவிதைகளின் நயத்தைப் பேசுகிறது.

பாட்டி, ஒட்டுக்கேட் டவர், ஈழத்துக்கோணங்கி, பெரும்பேறு, சோ.ப.வின் இசைப்பாக்கள், மயிலர், சின்னமகள், பாரதியார், ஊழி, வடக்கிருத்தல் என சோ.ப வின் படைப்புக்களும் இடம்பெற்றிருப்பது இச் சிறப்பிதழை மேலும் மெருகூட்டி உள்ளது. ■

## சூப்பர் ஹீரோவாக அவதாரம் எடுத்த எம்.எஸ்.டோனி

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்ரனும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கப்ரனுமான எம்.எஸ். டோனி அடுத்ததாக கிராஃபிக் நாவலில் நாயகனாக அறிமுகமாகவுள்ளார். ரமேஷ் தமிழ்மணி என்பவர் எழுதிய ‘அதர்வா: தி ஆர்ஜின்’ என்ற கிராஃபிக் நாவலில் சூப்பர் ஹீரோவாக தோன்றியுள்ளார். விர்ஸு ஸ்டுடியோஸ் மற்றும் மிடாஸ் டீல்ஸ் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ள இந்த



கிராஃபிக் நாவலுக்கான மோஷன் போஸ்டரை, டோனி தனது சமூகவலைத்தள பக்கத்தில் புதன் கிழமை (2.2.2022) வெளியிட்டிருந்தார். ‘பாகுபலி’ போன்ற சரித்திர பட நாயகர்கள் கெட்டப்பில் டோனி தோன்றியுள்ளது ரசிகர் களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இந்த நாவலுக்காக 150 ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

இது குறித்து எம்.எஸ். டோனி கூறுகையில், “இந்த நாவலில் இணைந்ததில் மகிழ்ச்சியடைகிறேன். ‘அதர்வா: தி ஆர்ஜின்’ ஆர்வத்தைத் தூண்டக்கூடிய விறுவிறுப்பான கதைக்களத்தையும், அட்டகாசமான ஓவியங்களைக் கொண்ட ஒரு கிராஃபிக் நாவல். இந்தியாவின் முதல் புராண சூப்பர் ஹீரோவை அறிமுகப்படுத்தும், எழுத்தாளர் ரமேஷ் தமிழ்மணியின் முயற்சி, ஒவ்வொரு வாசகரையும் மென்மேலும் படிக்கத் தூண்டும்” எனக் கூறியுள்ளார். இந்த நாவல் பெரும் வெற்றியை தொடர்ந்து திரைப்படமாக உருவாக்க படக்குழு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ■

# முருகபூபதியின்
# "நடந்தாய் வாழி களனி கங்கை"

அவுஸ்திரேலியாவில் முப்பது வருடங்களுக்கும் மேலாக வதியும் எழுத்தாளர் முருகபூபதி எழுதியிருக்கும் நடந்தாய் வாழி களனி கங்கை நூலை கொழும்பில் குமரன் புத்தக இல்லம் வெளியிட்டுள்ளது.

கிழக்கிலங்கை அரங்கம் வார இதழில் வெளியான நடந்தாய் வாழி களனி கங்கை தொடர் தற்போது நூலுருப்பெற்றுள்ளது.

இந்நூலானது கடந்து போன காலங்களையும், பழைய சம்பவங்களையும் எமது கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றது.

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இலங்கைத் தலைநகரில் நடந்த பல சம்பவங்களையும் இந்நூல் நினைவுபடுத்துகின்றது. களனி கங்கையின் ஆரம்பப் பெயர் கல்யாணி என்பதையும் நாளடைவில் அது களனி என மாற்றம் அடைந்ததையும் நூலாசிரியர் கூறியுள்ளார்.

ஒவ்வொரு சம்பவங்கள் பற்றி எழுதத் தொடங்கும் போதும் அக்காலத்தில் பிரசித்தி பெற்ற மிகச் சிறந்த சினிமாப் பாடல் வரிகளுடன் முருகபூபதி ஆரம்பித்திருக்கிறார். கௌதம புத்தர் வந்த இடம், மகாத்மா காந்தியின் அஸ்தி கரைத்த இடம் முதலானவற்றையும் காண்பித்து, இலங்கையின் இன்றைய நேற்றைய அரசியல்வாதிகளின் அரசியல் செயற்பாடுகளையும் கூறுகிறார்.

பண்டாரநாயக்க, பிரதமராகவிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி கேட்டு நாம் பயந்த காலங்களும் இந்நூலைப் படித்தபோது நினைவுக்கு வந்தது. பண்டாரநாயக்கவின் மறைவின் பின்னர் அவர் மனைவி பதவியேற்றார்.




அதன்பின் அவர்கள் மகள் சந்திரிகா பண்டாரநாயக்க பதவிக்கு வந்தார். இவ்விதமாக இவர்கள் பிறந்து வளர்ந்த வரலாறுகள் பற்றி எமது எழுத்தாளர் முருகபூபதி அழகாகச் சித்தரித்துள்ளார்.

பனை ஓலைச்சுவடியில் எழுத்தாணியால் எமது முன்னோர்கள் எழுதியதிலிருந்து அதன் பின்னர் அறிமுகமான பல ரகப் பேனாக்கள் முதல், இப்போது நாம் பாவிக்கும் போல்ட் பொயின்ற் பேனை வரை எழுதுகோல்களின் காலத்தையும் விளக்கமாகக் கூறியிருக்கின்றார். இது எமது இளம் சந்ததியினருக்குச் சுவாரஸ்யமாயிருக்கும். இராவணன் காலம் முதல் ராஜபக்ஷ காலம் வரையில் இனப் பிரச்சினைக் கான தீர்வை ஏற்படுத்த பலரும் இந்தியாவிலிருந்து சமாதானத்



தூதுவர்களாக வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாசூக்காகச் சொல்லிச் செல்கிறார்.

மற்றுமோர் பிரசித்தமானவர்தான் ஜூனியர்ட் ரிச்சர்ட் ஜெயவர்த்தன. இவர் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் பிறந்தவர். இவரும் பிறப்பால் ஒரு கத்தோலிக்கர். சொலமன் டயஸ் (S.W.R.D) பண்டாரநாயக்கவும் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவும் கத்தோலிக்க மதப்பின்னணி உடையவர்கள். இவர்கள் பற்றிய தகவல்கள் இதில் நிறைய எழுதப்பட்டுள்ளன.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன மற்ற அரசியல்வாதிகள் போன்று பிரதமர் பதவியில் இருந்து ஜனாதிபதியானாலும் வாரிசு அரசியலுக்குத் துணை போகவில்லை என்ற செய்தியையும் நூலாசிரியர் தெரிவித்துள்ளார்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதற்கு ஏற்ப இலங்கை அரசியல் சமூகப் பொருளாதார மாற்றங்கள், உற்பத்தி ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் என இலங்கை வரலாறு, குறிப்பாக தலைநகரத்தின் வரலாறு இந்நூலில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

> **"ஜே. ஆர். ஜெயவர்த்தன மற்ற அரசியல்வாதிகள் போன்று பிரதமர் பதவியில் இருந்து ஜனாதிபதியானாலும் வாரிசு அரசியலுக்குத் துணை போகவில்லை என்ற செய்தியையும் நூலாசிரியர் தெரிவித்துள்ளார். பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதற்கு ஏற்ப இலங்கை அரசியல் சமூகப் பொருளாதார மாற்றங்கள், உற்பத்தி ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் என இலங்கை வரலாறு, குறிப்பாக தலைநகரத்தின் வரலாறு இந்நூலில் சித்திரிக்கப்பட்டுள்ளது."**

கொழும்பு வாழ்க்கையில் நாம் சந்தித்தவைகளையும் இழந்தவற்றையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

பல்கலை வேந்தன் சில்லையூர் செல்வராசன் போன்றவர்களைப் பற்றியும் சிங்களப்பட உருவாக்கமும் அதன் பின்னர் காலப் போக்கில் தமிழ்ப்பட உருவாக்கம் பற்றியும் இந்நூலில் திறம்பட விபரிக்கப்பட்டுள்ளது.

கேரளாவிலிருந்து இலங்கை வந்த ஒளிப்படக் கலைஞரும் ராஜா ஸ்ருடியோவை கொழும்பில் உரு வாக்கியவருமான ராஜப்பனைப் பற்றியும் அவர் மனைவி இசை ஆசிரியை கௌரீஸ்வரி ராஜப்பனைப் பற்றியும் இந்நூல் கூறத் தவறவில்லை. அது மட்டுமல்ல, திருமதி. ரோஸி. சேன நாயக்க அழகு ராணியான செய்தியும் பின்னர் அவர் அரசியல்வாதியாக வலம் வருவதும் போன்ற விறுவிறுப்பான செய்திகளுக்கும் இந்நூலில் பஞ்சமில்லை. இலங்கைத் தலைநகரின் அரசியல் பொருளாதார சமூக மாற்றங்கள் பற்றிய பல அரிய தகவல்களுடன் சுருங்கக் கூறி எளிதாக விளங்க வைக்கும் இந்த நூல் வாசகர்களுக்கு மாத்திரமன்றி மாண வர்களுக்கும் பயனுள்ளது. ■



ஜோதிமணி சிவலிங்கம்

---







# கலாமித்ரா சிறப்புப் பட்டமளிப்பும்
# அவோட்ஸ்-2021 விருது விழாவும்

41ஆவது ஆண்டில் காலடி பதித்த புதிய அலை கலை வட்டம் அதன் கலை, கலாசாரப் போட்டிகளுக்கான அவோட்ஸ்-2021 விருதுவிழாவை கடந்த 30 ஆம் திகதி திங்கட் கிழமை கொழும்பு-11 கதிரேசன்வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தில் நடத்தியது. அதன்போது போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இவ்வாண்டினில் வட்டம் அறிமுகம் செய்துள்ள 'கலாமித்ரா' விருதுகள் கடந்த காலங்களில் வட்டத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்த வட்ட நிர்வாகிகள் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டன. அத்துடன் வளர்ந்து வரும் இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக சிறப்பு விருதுகளும் வழங்கப்பட்டன. கலைஞர், சிரேஷ்ட ஊடகவியலாளர் ராதாமேத்தா தலைமையில் நடைபெற்ற அந்த நிகழ்வினில் முத்தமிழ் காவலர் புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# திரைப்படப் பாடல்களில் வித்தியாசமான முயற்சிகள்

ஆலவாய் அமுதன்



நாடகம் எனும் ஊற்றிலிருந்து உருவானதே சினிமா. காட்சிப் படங்களில் கச்சிதமாய் கதைபேசும் இச் சினிமாவில் தமிழ்த் திரைப் படங்கள் முக்கிய அந்தஸ்தினைக் கொண்டு விளங்குகின்றன. நடிகர், இசையமைப்பாளர், இயக்குநர், பாடகர் என ஒரு திரைப்படத்தோடு தமிழரல்லாத பல நபர்கள் தொடர்புபடினும் பாடலாசிரியர் தமிழராக அமைவது தனிச் சிறப்புடைய விடயமாகும். திரைப்படமொன்றின் வர்த்தக ரீதியான வெற்றிக்கு பாடல்களும் காரணமாகவே அமைகின்றன. இவ் விதப் பாடல்களில் சில, மக்கள் மத்தியில் அழியாப் புகழுடைய பாடல்களாய் நிலைபெறக் காரணம் திரையிசைப் பாடல்களில் கையாளப்பட்டுள்ள ரசிகர்களை ஈர்க்கும் பல நுட்பங்கள் வித்தியாசமான முறையில் அமைகின்றமையாகும். அன்று தொட்டு இன்று வரை சினிமாவிற்கு தமிழ் சமூகத்தில் இருந்த அந்தஸ்திற்கு இவ் விதம் வித்தியாசமான முயற்சிகளினைக் கையாண்டு பாடப்பட்ட பாடல்களும் ஒரு காரணமாகும். குறிப்பாக ஒரு காலத்தில் இசைப் பேழைகள், இசைத் தட்டுகள், பாட்டுப் புத்தகங்கள் ரசிகர்கள் மத்தியில் அதிகளவில் விற்பனையான தன்மையும் திரையிசைப் பாடல்களின் முக்கிய வகிபங்கினைக் காட்டுகிறது.

ஆதித் தமிழ் சினிமாவின் பாடல்களிலே இலக்கியத்தின் பாதிப்பையும் தரிசிக்க இயலுமாக உள்ளது. பின்வருநிலையணியைக் கையாண்டு பல பாடல்கள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. அதற்கு ஒரு சோற்றுப் பதமாக வீர அபிமன்யு திரைப்படத்தில் வரும் கவியரசு கண்ணதாசனின்

“பால் வண்ணம் பருவம் கண்டு
வேல் வண்ணம் விழிகள் கண்டு
மான் வண்ணம் நான் கண்டு வாடுகின்றேன்
கண் வண்ணம் அங்கே கண்டேன்
கை வண்ணம் இங்கே கண்டேன்
பெண் வண்ணம் நோய் கொண்டு வாடுகிறேன்”

பாடல் அமைகிறது. மேற்கூறிய பாடலானது. இராமனைப் புகழும் வண்ணம் கம்ப இராமாயனத்தில் அமைகின்ற

“கை வண்ணம் அங்கு கண்டேன்
கால் வண்ணம் இங்கு கண்டேன்”

என்ற செய்யுளின் எளிமைப்படுத்தப்பட்ட வடிவமாக அமைகிறது.

திரையிசைப்பாடல்கள் மெட்டிற்கு இட்டு நிரப்பிய வார்த்தைகளாயே திகழ்கின்றன. தந்தன தந்தன என இசையமைப்பாளர் மெட்டமைக்க அவ்வோசைக் கேற்ப சொற்களை பாடலாசிரியர் கையாளும் திறன்தான் என்னே. அத் திறத்தையே கண்ணூடாய் காட்டுவதாக வறுமையின் நிறம் சிவப்பு திரைப்படத்தில் இடம் பெறுகின்ற

“சிப்பியிருக்கு முத்துமிருக்குது” எனும் பாடல் அமைகின்றது. சில திரையிசைப் பாடல்களோ கடித வகையில் அமைந்து பலரது கவனக் குவிப்பினை வென்றுள்ளன அவ்வகையிலே

“அன்புள்ள மான் விழியே”
“நலம், நலம் அறிய ஆவல்”
“கண்மணி அன்போடு காதலன்”
“காதல் பிசாசே”

முதலிய பாடல்கள் அமைகின்றன.

திரையிசைப்பாடல்களில் கையாளப்பட்டுள்ள வித்தியாசமான முயற்சிகளில் சிறுவர் கதையொன்றை மையமாய் கொண்டு முழுமையான கதை கூறலாக மூன்றாம் பிறை திரைப்படத்தில் இடம் பெறும் “முன்பு ஒரு காலத்திலே” எனும் பாடல் அமைகிறது.

அபிராமி அந்தாதி, சரஸ்வதி அந்தாதி முதலியவற்றைத் தாண்டி திரையிசைப்பாடல்களும் அத் தாதிப்பாங்கிலேயே அமைகின்றன.

“வசந்த கால நதிகளிலே வைரமணி நீரலைகள்
நீரலைகள் மீதினிலே நெஞ்சிரண்டின் நினைவலைகள்
நினைவலைகள் தொடர்ந்து வந்தால் நேரமெல்லாம் கனவலைகள்
கனவலைகள் வளர்வதற்கு காமனவன் மலர்கனைகள்”

“ஆடி வெள்ளி தேடி உன்னை நானடைந்த நேரம்
கோடியின்பம் நாடி வந்தேன் காவிரியின் ஓரம்
ஓரக்கண்ணில் உளற வைத்த தேன் கவிதைச் சாரம்
ஓசையின்றிக் கேட்கும் அது ஆசை என்னும் வேதம்
வேதம் சொல்லி மேளமிட்டு மேடைகண்டு ஆடும்
மெத்தை கொண்டு தத்தையொன்று வித்தை பல நாடும்”

தமிழிலே சில வார்த்தைகள் விகடகவி, திகதி, மகரகம என மாலை மாற்று அணியில் அமைந்துள்ளன. ஞானசம்பந்தர் கூட மாலை மாற்று அணியை கையாண்டு பதிகம் பாடியுள்ளார். இத்தகு மாலை மாற்று அணியிலே வினோதன் திரைப்படப்பாடல்

“மேகராகமே மேளதாளமே தாரா ராதா
காலபாலகா வாதமாதவா ராமா மாரா
மாறுமா கைரேகை மாறுமா”

என மனங்கவரும் வண்ணம் அமைகிறது

சில திரைப்படப் பாடல் குறிப்பிட்ட ஒரே விடயத்தை பற்றியதாக அமைகின்ற தன்மையும் தரிசிக்க இயலும் தமிழகத்தில் வெளிவருகின்ற சஞ்சிகைகளை பட்டியற்படுத்துவதாக

“குமுதம் போல் வந்த குமரியே
முகம் குங்குமமாய் சிவந்த தென்னவோ
மனம் வண்ணத்திரை கனவு கண்டதோ”

எனும் பாடல் அமைகிறது. “உதயம் தியட்டரிலே இதயத்தைதொலைத்தேன்” எனும் பாடல் தமிழக திரையரங்குகளையும் “வாழை மீனுக்கும் விலங்கு மீனுக்கும் கல்யாணம்” எனும் பாடல் மீன்களின் பெயர்களை மையமாய்க் கொண்டு சிருஷ்டிக்கப்பட்டுள்ளன.



விவாதப்பாங்கிலே சில சினிமாப் பாடல்கள் அமைவதும் திரைப்பாடல்களில் கையாளப்பட்ட சில வித்தியாசமான முயற்சிகளில் ஒன்றாயே அமைகிறது. T.T ராஜேந்தர் அவர்களின் பாடல்களில் இத் தன்மை அதிகம் பிரசன்னமுற்றிருப்பதைக் காணலாம். என் தங்கை கல்யாணி எனும் படத்தில் “போட்டானே மூன்று முடிச்சுத்தானே” எனும் பாடலிலே

மகன்- “பிள்ளை இவன் கிழிச்ச கோட்டத் தாண்டியது நீயம்மா
தொல்லை பல தந்த ஆளை தேடியது நியாயமா”
தாய்-“பிள்ளை உன்னை உலகத்துக்கு தந்தவரு எவரப்பா
தாலி போட்ட அவரை மறக்க
வேலி போட யாரப்பா”
மகன்- “நட்டாற்றிலே தவிக்கவிட்டு ஓடினதை மறக்கலாமா
குடும்பத்தின் பாரந்தனை சுமந்தது நானம்மா”
தாய்- “பத்து மாதம் நான் சுமந்தேன் உன்னை அதுக்கிது ஈடாகுமா?
பெத்த மனம் அது பித்தடா
பிள்ளை மனம் ஒரு கல்லடா”

பாடலாசிரியர் கபிலன் ரசிகர்களைக் கவர சில வித்தியாசமான முயற்சிகளைக் கையாண்டுள்ளார். ஒரே பண்பினை மீட்டெடுத்து வெவ்வேறு விதமாய் பாடல்களில் கையாண்டுள்ளார்.

“உன் சமையலறையில் உப்பா சக்கரையா”
“ஆசை ஆசை இப்பொழுது பேராசை எப்பொழுது”
“கரிகாலன் காலைப் போல கறுத்திருக்கு குழலு”

மேற் கூறிய பாடல்கள் தக்க உதாரணங்களாகும்.



சினிமாப் பாடல் சில, சென்னையின் வட்டார வழக்கிலும் சில, சங்கத்தமிழிலும் அமைதல் வித்தியாசமான முயற்சிகளாகவே கொள்ளத்தக்கது. அந்த வகையிலே “நறுமுகையே நறுமுகையே” பாடல் சங்கத்தமிழிலும் “பல்டி பக்குற டார்ல வுடனும்” எனும் பாடல் சென்னைத் தமிழிலும் அமைகிறது. இதை விட மரபுக்கு ஒவ்வாத விடயங்களை அங்கதம் இழை போட பாடல்கள் வெளிப்படுத்துவதும் வித்தியாசமானதொரு முயற்சியே

“ஆட்டுக் குட்டி முட்டையிட்டு கோழிக்குஞ்சு வந்ததென்னு...” என்ற பாடலை இதற்கு உதாரணம் கூறலாம்.


பாடல்களில் அமைந்து வரும் பல்லவி, அனுபல்லவி, சரணம் முதலிய உறுப்புகளல்லாது அமைந்த மிக நீளமான பாடலாக “சத்தம் இல்லாத தனிமையை கேட்டேன்” எனும் பாடல் திகழ்வதும் திரையிசைப்பாடல்களில் கையாளப்பட்டுள்ள வித்தியாசமான முயற்சியாகவே கொள்ளத்தக்கது.

இவ்விதம் சில திரையிசைப் பாடல்கள் ஏலவே உள்ளவற்றிலிருந்து விலகிய தன்மையில் அமைவதால் ரசிகர்கள் மத்தியில் அதிக ஈர்ப்பைப் பெற்றன. ஒரு வகையிலே திசையிசைப்பாடலில் நிகழ்த்தப்பட்ட பரிசோதனை முயற்சியாக இவற்றினை கொள்ளமுடியும். இவ்விதமான மாற்று முயற்சிகள் திரைப்பட பாடல்களின் நிறத்தை மாற்ற முயன்றுள்ளது. ■



“மயக்கமா கலக்கமா
மனதிலே குழப்பமா
வாழ்க்கையில் நடுக்கமா”

— ரமணி



# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

4

சுமைதாங்கி படத்துக்காக கவியரசர் கண்ணதாசன் எழுதிய பாடலுக்கு இரட்டையர்கள் எம்.எஸ்.விஸ்வநாதன் ராமமூர்த்தி இசையமைக்க பி.பி.ஸ்ரீனிவாஸ் பாடிய பாடலின் ஆரம்ப வரிகள் அவை. மூன்று வரிகளில் நான்கு கேள்விகள் கேட்கப்பட்டன. துன்பத்திலும் துயரத்திலும் இருக்கும் ஒருவரிடம் இக் கேள்வியை நாம் கேட்டால் அவர் சொல்லும் பதிலால் நாம் கலங்கிவிடுவோம். நாம் நமது துயரத்தை பட்டியலிட அவர் உடைந்து விடுவார்.

ஆனால், கண்ணதாசன் அந்த நான்கு கேள்விகளுக்கும் நான்கு பதில்களைக் கூறி ஆறுதல் சொல்கிறார்.

“வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல்தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எதுவென்றாலும்
வாடி நின்றால் ஓடுவது இல்லை
எதையும் தாங்கும் இதயம் இருந்தால்
இறுதி வரைக்கும் அமைதி இருக்கும்.”

அந்தப் பாடல் முழுவதும் கேள்விக்கான அற்புதமான பதில்களை கண்ணதாசன் வடித்திருப்பார்.

எதற்கெடுத்தாலும் விதியை நொந்து இறைவனை வசைபாடுவதை விட்டேவிடு

எனக் கண்ணதாசன் அறிவுறுத்தியுள்ளார். “மயக்கமா கலக்கமா” எனும் பாடல் பலருக்கு உந்து சக்தியாக இருந்தது. சினிமா வாய்ப்புத் தேடிச் சலித்துப் போன வாலி ஊருக்குப் புறப்பட முடிவெடுத்த போது அவரின் வாழ்க்கையை மாற்றியது அந்தப் பாடல். திரைப் படத்தில் ஒலிக்கும் பாடல்கள் அதில் நடிக்கும் ஏதோ ஒரு பாத்திரத்தின் மனதை மாற்றுவதாக அமையும். அது கற்பனை. உண்மையிலேயே அப்படிப்பட்ட பாடல்கள் பலரின் வாழ்க்கையை மாற்றி அமைத்துள்ளன.

ஸ்ரீரங்கத்திலிருந்து கிளம்பி சென்னைக்குச் சென்று வந்த சமயம் அது. அகில இந்திய ரேடியோ, நாடக சபாக்கள் எனத் தனக்கு கிடைத்த ஒன்றிரண்டு வாய்ப்புக்களை வைத்து சென்னையில் காலத்தைத் தள்ளுகிறார் வாலி. ஆனால், அவர் எதிர்பார்த்த திரையுலக வாய்ப்புக் கிடைக்கவேயில்லை. போதிய வருமானம் இன்றி சென்னையில் அவரால் காலம் தள்ள முடியவில்லை. அவ்வப்போது ஏதாவது வாய்ப்புக்கள் வந்தாலும் எதுவும் சரியாக அமையவில்லை. நாகேஷ், வாலி இவர்கள் எல்லாம் ஒரே அறையில் தங்கியிருந்த காலகட்டம் அது. இவர்களைப் பார்க்க பாடகர் பி. பி.ஸ்ரீனிவாஸ் அங்கே அடிக்கடி வருவார். மூன்று பேரும் எங்கவாது ஒன்றாக செல்வார்கள். ஒரு பக்கம் வறட்சி, மறுபக்கம் வறுமை... ஒவ்வொரு நாளும் கொடுமையாக இருந்தது வாலிக்கு. “சரி.. இனி சென்னை நமக்கு சரிப்பட்டு வராது... நம்ம ஊருக்கே போய்விடவேண்டியதுதான்” என்று முடிவு செய்துவிட்டு தான் கொண்டு வந்த பெட்டியுடன் ஸ்ரீரங்கம் திரும்புவதற்காகத் தயாராகிக் கொண்டிருந்தார். அந்த நேரம் அங்கேவந்த பி.பி.ஸ்ரீனிவாஸ். “சுமைதாங்கி ங்கிற படத்துக்காக இன்னைக்கு ஒருபிரமாதமான பாட்டு பாடினேன்ய்யா.. கேக்குறியா?” என்று வாலியை கேட்க, ஆர்வமுடன் கேட்கும் நண்பரிடம் மறுப்பு சொல்லமுடியாமல் வாலி அரை மனதுடன் “சரி... பாடுங்க” என்று சொல்ல... ஸ்ரீனிவாஸ் ‘மயக்கமா கலக்கமா’ பாடலை பாடத்துவங்குகிறார். பாடப் பாட நிமிர்ந்து உட்கார்ந்த வாலி, என்ன தோன்றியதோ



“இனிமே ஜெயிக்காம ஊர் திரும்புற பேச்சுக்கே இடமில்லே. மெட்ராஸை விட்டு ஜெயிக்காம நான் போக மாட்டேன். முயற்சி பண்ணா நிச்சயம் ஜெயிக்கலாம்ன்னு இந்தப் பாட்டு எனக்குப் புரிய வெச்சிடுச்சு” என்று சொல்லி பெட்டியை எடுத்து உள்ளே வைத்தார். இந்தச் சம்பவத்தை வாலி பல பேட்டிகளில் சொல்லியுள்ளார்.



திரை உலக வாய்ப்புத்தேடி சென்னைக்குச் சென்ற கண்ணதாசனுக்கும் பல துன்பங்கள் துயரங்கள் நேர்ந்தன. அவற்றை எல்லாம் முறியடித்து எவரும் தொட முடியாத உச்சத்துக்குச் சென்றார் கண்ணதாசன்.

“மயக்கமா கலக்கமா எனும் பாடல் மூலம் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட அவமானத்துக்குப் பதிலளித்தவர் கண்ணதாசன்.

சென்னைக்குச் சென்று இறங்கியபோது தன்னை விரட்டிய அந்த இடத்தில் தனது செல்வாக்கை கண்ணதாசன் படம் பிடித்து வெளிப்படுத்தினார்.

கண்ணதாசன் அன்றைய மெட்ராஸ்க்குச் சென்றபோது அவருக்கு வயசு 16 இருக்கும். காரைக்குடியில் இருந்து சென்னைக்குச் சென்றபோது கையில் பணம் இல்லை. 1942 அல்லது 1943 இருக்கும். எக்மோர்ல ட்ரெயினில் இருந்து மாலையில் இறங்கினார். எங்கே போவதெனத் தெரியவில்லை. கண்ணதாசனின் ஊரவர்கள் இருக்கும் நகரத்தார் விடுதிக்குச் செல்ல வேண்டும். அது எங்கே இருக்கிறது. அந்த இடத்துக்கு எப்படிப் போவது எனத் தெரியாமல் கடற்கரை வீதியால் நடந்தார். எங்கும் ஒரே இருட்டு விடிந்ததும் போகலாம் என நினைத்து ஒரு ஓரமாகப் படுத்தார்.

திடீரென யாரோ அவரைத் தட்டி எழுப்பினார். கண்ணைத் திறந்து பார்த்தபோது ஒரு பொலிஸ்காரர் “யார் நீ? இங்கே எதுக்கு படுத்திருக்க?” என கேள்வி மேல் கேள்வி கேட்டு அவரை மிரட்டினார். தனது நிலைமையைச் சொல்லி கெஞ்சினார் கண்ணதாசன். அதெல்லாம் சரிப்பட்டு வராது என அந்தப் பொலிஸ்காரர் கண்ணதாசனை விரட்டினார்.

நாலணா காசு கொடுத்திட்டு அப்புறம் படு...” என்று பொலிஸ்காரர் சொன்னார். காசு கிடைக்காததால் பொலிஸ்காரர் கண்ணதாசனை விரட்டி விட்டார். “இந்த ஏழையிடம் நாலணா இல்லாததால் பீச்சில் கூட படுக்க இடம் கிடைக்கவில்லை” என கண்ணதாசன் பின்னாளில் எழுதினார்.

தமிழ் சினிமாவின் அசைக்க முடியாத சக்தியாக இருந்த கண்ணதாசன் படிப்படியாக உயர்ந்தார். ‘விசாலாக்ஷி ஃபிலிம்ஸ்’ என்கிற சொந்த நிறுவனத்தில் ஜெமினி கணேசனை கதாநாயகனாக நடிக்க ஸ்ரீதரின் இயக்கத்தில் ‘சுமைதாங்கி’ எனும் படத்தைத் தயாரித்தார். அந்த படத்தில்தான் “மயக்கமா கலக்கமா” எனும் பாடல் இடம் பெற்றது.

சென்னைக்குச் சென்று இறங்கிய போது பொலிஸ்காரரால் விரட்டபட்ட இடத்தில்தான் அந்தப் பாடலின் படப்பிடிப்பு நடைபெற்றது. பாடலின் போது ஜெமினியைக் கடந்து செல்லும் கார்கள் அனைத்தும் கண்ணதாசனுக்குச் சொந்தமானவை. ■

# சூனியக்காரிகள் என்று கொல்லப்பட்ட கேட்டலோனிய பெண்களுக்குப் பொது மன்னிப்பு!

15 முதல் 18 ஆம் நூற்றாண்டு வரையான காலத்தில் சூனியக்காரிகள் என்று கருதப்பட்டு கொல்லப்பட்ட நூற்றுக் கணக்கான பெண்களுக்கு, கேட்டலோனிய பிராந்திய பாராளுமன்றம் அதிகாரபூர்வமாக மன்னிப்பு வழங்கியுள்ளது. கேட்டலோனியா ஸ்பெயின் நாட்டில் உள்ள ஒரு தன்னாட்சி பிராந்தியம் ஆகும்.

கொடுமைப்படுத்தப்பட்டு கொல்லப்பட்ட 700க்கும் மேற்பட்ட பெண்களின் நினைவை மீண்டும் சரியாகக் கட்டமைக்க வேண்டும் என்கிற தீர்மானத்துக்கு அப்பிராந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் பெருவாரியாக ஆதரவளித்து நிறைவேற்றியுள்ளனர்.

ஐரோப்பாவில், சூனியக்காரிகளை வேட்டையாடும் கலாசாரத்தை ஆரம்ப காலங்களிலேயே கொண்டிருந்த பகுதிகளில் கேட்டலோனியாவும் ஒன்று என, ஸ்பானிய வரலாற்றாசிரியர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

மேலும் சூனியக்காரிகளாகக் கருதப்பட்ட பெண்கள் கொலை செய்யப்படும் மோசமான பகுதிகளில் ஒன்றாகக் கேட்டலோனியா கருதப்படுகிறது.



“15 - 18 ஆம் நூற்றாண்டு வரை துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட 700க்கும் மேற்பட்ட பெண்களின் பெயர் பட்டியலை சமீபத்தில்தான் கண்டுபிடித்தோம்,” என்று அந்த தீர்மானத்தைக் கொண்டு வந்த குழுவினர்கள் கூறினர்.

திடீரென குழந்தைகள் இறந்து போனால் அல்லது நல்ல அறுவடை இல்லை என்றால் சூனியக்காரிகள் தான் காரணமென பழி கூறப்பட்டது என பார்சிலோனா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நவீன வரலாற்றுப் பேராசிரியர் பாவ் காஸ்டெல் கூறுகிறார்.

பெண்களுக்கு எதிரான மனநிலை மற்றும் துன்புறுத்தலுக்கு பலியானவர்கள் அவர்கள் என்று சுதந்திரத்துக்கு ஆதரவான மற்றும் இடதுசாரிக் குழுக்கள் கூறுகின்றன. மேலும் அவர்களின் பெயர்களை சாலைகளுக்கு சூட்டுவதன் மூலம் அவர்களது நினைவுகள் கௌரவிக்கப்பட வேண்டும் என்றும் விரும்புகின்றன.

ஐரோப்பிய கண்டம் முழுமைக்கும் உள்ள ஆயிரக் கணக்கானவர்கள் (பெரும்பாலானோர் பெண்கள்), சூனியக்காரர்களாகக் கருதப்பட்டு கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது.

ஸ்கொட்லாந்து, சுவிட்சர்லாந்து, நோர்வே போன்ற நாடுகளில் இதே போன்ற முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்ட பின் இந்தப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

“முன்பு அவர்கள் எங்களை சூனியக்காரிகள் என்றழைத்தனர், இப்போது எங்களை ‘ஃபெமிநாஜி’ (தீவிர பெண்ணியவாதம் பேசுவோரை விமர்சிக்க பயன்படுத்தப்படும் சொல்) என்று அழைக்கின்றனர் அல்லது பாலியல் ரீதியில் விரக்தி அடைந்தவர்கள் என்று அழைக்கின்றனர் அல்லது மிகை உணர்ச்சிப் பிரச்சினை கொண்டவர்கள் என்று அழைக்கின்றனர்” என்று கேட்டலோனியா பாராளுமன்ற உறுப்பினர் ஜீன் டயஸ் கூறியதாக ஏ.எஃப்.பி முகமையில் கூறப்பட்டுள்ளது. ■



# தி.மு.க காங்கிரஸ் உறவில் விரிசல்

# கூட்டத்தில் இருந்து

## வெளியேற்றப்பட்ட ஜோதிமணி

தமிழ்நாட்டில் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் பெப்ரவரி 19 ஆம் திகதி நடைபெற உள்ளது. தமிழ்நாட்டின் இரண்டு பிரதானக் கூட்டணிகளுள் ஒன்றான அண்ணாதிராவிட முன்னேற்றக் கூட்டணியில் இருந்து ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி வெளியேறி விட்டது. கூட்டணி பேரம் படியாததால் பாரதீய ஜனதாவும் தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளது. பாட்டாளி மக்கள் கட்சியின் வெளியேற்றம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதேபோல் பாட்டாளி மக்கள் கட்சியும் எதிர்பார்த்த வெற்றியைப் பெறுவது முடியாத காரியம். இதனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இலாபம்.

கூட்டணிப் பேச்சு வார்த்தைக்கு முன்னரே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர்களை அறிவித்து, விட்டது. பாரதீய ஜனதாவும் தனது வேட்பாளர்களை அறிவித்துவிட்டது.

மற்றொரு பிரதான கட்சியான திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் கடும் இழுபறி நீடித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கட்சியும் 10 முதல் 20 சதவிகித இடங்களில் போட்டியிட வேண்டும் என எதிர்பார்த்தன.

ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் தரப்பிலிருந்து 1 முதல் 4 சதவிகித இடங்கள் மட்டுமே தனது கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. தலைமையோ, நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் மாவட்டச் செயலாளர்கள்தான் எல்லாம். கூட்டணிக் கட்சிகள் கேட்கும் இடங்களை விட்டுக் கொடுக்க உத்தரவிட்டிருக்கிறோம். உங்களுக்கு உரியது கிடைக்கும் எனச் சொல்ல மா.செ.-க்களோ நாங்கள் ஒதுக்கும் இடங்களில் விருப்பம் இருந்தால் போட்டியிடுங்கள் எனக் கூறிவிடுவதோடு நான்கு இடங்களுக்கும் குறைவான இடங்களிலேயே ஒதுக்குவதாகக் கூறப்படுகிறது.

கூட்டணிக் கட்சிகளோடு இணக்கமாக, நட்பாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் நேரத்தில் அவர்களைத் துளி அளவுகூட மதிப்பதில்லை எனக் கூட்டணிக் கட்சியினர் புலம்புகிறார்கள்.

பெரும்பாலான மாவட்டங்களில் கூட்டணிக் கட்சிகள் கேட்கும் இடங்களைக் கொடுக்க திரவிட முன்னேற்றக் கழகம் முன்வரவில்லை.

உள்ளாட்சித் தேர்தலில் குறைந்தபட்சம் 15 சதவீத இடங்களையாவது பெற வேண்டும் என்றும் அதற்கேற்ப திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று மாநிலத் தலைமை அறிவுறுத்தியிருந் தது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர்கள் நாங்கள் என்ன பேசுகிறோம் எனக் கேட்கவே தயாராக இல்லாதபோது எங்கே பேரம் எல்லாம் பேசுவது என்று காங்கிரஸ் தலைவர்கள் கடும் விரக்தியில் பேசினார்கள். 2011 உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டபோது 10 மாநகராட்சிகளில் 17 மாநகராட்சி கவுன்சிலர் இடங்களை வென்றோம். மேலும் 50 இடங்களில், சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தோம். எனவே, காங்கிரஸ் கட்சியின் பலம் மற்றும் உள்ளூர் தலைவர்களின் செல்வாக்கு போன்றவற்றைக் கருத்தில் கொண்டுதான் இடப்பகிர்வை எதிர்பார்க்கிறோம் என்கின்றனர்.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைச்சர் செந்தில் பாலாஜியும் காங்கிரஸ் எம்.பி ஜோதிமணியும் பாசமலர்கள் போல அண்ணன் தங்கையாக வலம் வந்தார்கள் கூட்டணிப் பேச்சுவார்த்தை இருவரின் சகோதரப் பாசத்தை முறித்துவிட்டது.

காங்கிரஸ் கட்சியினரைத் தி.மு.க-வினர் நடத்தும் விதங்களின் உச்சமாகக் கரூரில் நடந்த தொகுதிப் பங்கீட்டு பேச்சு வார்த்தையின் போது தன்னை வெளியில் போகச் சொன்னதாகவும் அதில் “நான் என்ன உங்கள் வீட்டுக்கு விருந்துக்கா வந்தேன்” எனக் காங்கிரஸ் எம்.பி.ஜோதிமணி ஆவேசமாகப் பேசுவதாகவும் வெளியான வீடியோ, வைரலாகி வருகிறது. ஆனால் மதுரை, திருச்சி உள்ளிட்ட சில மாவட்டங்களில் காங்கிரஸ் - தி.மு.க இடையேயான பங்கீடு நிறைவுக்கும் வந்திருக்கிறது.

தி.மு.க கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கே இந்த நிலைமை என்றால் வி.சி.க., ம.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகளின் நிலைமை அதைவிட மோசம். கூட்டணி பேச வந்த வி.சி.க-வினரை அமைச்சர் ஒருவர் நிற்க வைத்தே பேசி அனுப்ப, அது தொடர்பாக வி.சி.க தலைவர் திருமாவளவன் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் புகார் செய்யும் அளவுக்குச் சென்றிருக்கிறதாம். தங்களுக்கு ஒன்று என்ற இலக்கைத் தாண்டி தொகுதி ஒதுக்க தி.மு.க தரப்பில் தயாராகவே இல்லை என்கிறார்கள் நம்மிடம் பேசிய வி.சி.க-வினர். தொகுதி ஒதுக்கவில்லை என்றால்கூடப் பரவாயில்லை. உரிய மரியாதையாவது கிடைக்கிறதா என்றால் அதுவும் பெரிய கேள்விக் குறிதான். ‘கொடுக்குறதுல நில்லுங்க... இல்லைனா இடத்தைக் காலி பண்ணுங்க’ என்கிறார்கள். கட்சிக்குக் கட்டுப்பட்டு அவர்கள் செய்வதைப் பொறுத்துக்கொள்கிறோம். சில தொண்டர்களிடம் எதையும் எதிர்பார்க்காமல் சுயேட்சையாக நிற்க முடியுமானால் நில்லுங்கள். தலைமையில் நாங்கள் பேசிக் கொள்கிறோம் எனச் சொல்லிவிட்டோம் என்றனர் பெருமூச்சுடன்.

தி.மு.க பெரிய கட்சிதான். ஆனால், நகராட்சித் தேர்தலில் கட்சியைவிட அந்தப் பகுதியில் செல்வாக்கு யாருக்கு அதிகமோ அவர்களுக்குத்தான் வெற்றி அதிகம். ஆனால், ஆளும் கட்சி என்ற நிலையிலே அவர்கள் செயல்படுகிறார்கள் என்கின்றனர் வி.சி.க-வினர். ம.தி.மு.க., கம்யூனிஸ்ட் நிலைமை இன்னும் மோசம். “கேட்பதைக் கேட்போம். கொடுத்தால் பார்க்கலாம். இல்லையென்றால் சுயேட்சையாக நின்று கொள்ளுங்கள்” என எப்போதோ சொல்லிவிட்டார்களாம். “தொண்டர்களைத் தக்க வைத்துக்கொள்ள உள்ளாட்சித் தேர்தல்தான் ஒவ்வொரு கட்சிக்கும் இருக்கும் மிகப் பெரிய ஆயுதம். காங்கிரஸ் தேசியக் கட்சியாக இருக்கலாம். ஆனால், மாநிலத்தில் நாங்கள் பெரிய கட்சி. மாநிலக் கூட்டணி எங்கள் தலைமையில்தான் இருக்கிறது. எங்கள் கட்டமைப்பை வலுப்படுத்த உள்ளாட்சித் தேர்தலைத்தான் நாங்களும் நம்பியிருக்கிறோம். அப்படியிருக்கும்போது எல்லா இடங்களும் எங்களுக்கே வேண்டும் எனக் காங்கிரஸ் கட்சியினர் விரும்பினால் எப்படி எங்களால் அதை ஏற்றுக்கொண்டு செயல்பட முடியும். கேட்பதற்கும் ஓர் அளவு இருக்கிறது இல்லையா? சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலைப் போல இதிலும் எங்கள் மேலேயே சவாரி செய்யலாம் என நினைத்துப் பேசினால் எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும். அவர்களுக்கு என்ன தகுதியிருக்கிறதோ அதற்கு அதிகமான இடங்களைக் கொடுக்க வேண்டும் என ஜோதிமணி கூறியிருக்கிறார்.

ஆனால், இருக்கும் நிலைமையை எடுத்துச் சொல்லி வெற்றி பெறும் இடங்களைக் குறிப்பிட்டுக் கேளுங்கள். பங்கீட்டில் இறுதி முடிவு எடுத்து அனுப்ப வேண்டும்” எனத் தன்மையாகத்தான் பேசியிருக்கிறார்.

ஆனால், “மீண்டும் மீண்டும் ஜோதிமணி, தான்கேட்கும்இடங்களை ஒதுக்கியே ஆக வேண்டும் என்றதோடு இங்கு நடப்பது அநியாயம். கூட்டணிக் கட்சிகளின் குரலைக் கேட்கவில்லை என்றால் பின் ஏன் மீட்டிங். நீங்களே கையெழுத்துப் போட எங்களை ஏன் கூப்பிட்டீர்கள்” என்று ஜோதி மணி கோபமாகக் கேட்டிருக்கிறார். அதன்பின்னரே அவரை எங்கள் கட்சியினர் வெளியில் போகச் சொல்லியிருக்கிறார்கள்.

“இந்தச் சம்பவங்கள் நடந்த போது ஜோதிமணி பேசியதற்குச் செந்தில் பாலாஜி எதிர்வினை எதையும் காட்டவில்லை. ஜோதிமணிக்காக நாடாளுமன்றத் தேர்தலில் செந்தில் பாலாஜிதான் கடுமையாக உழைத்து அவருக்கு வெற்றி பெற்றுத்தந்தார். இப்போது அவருடனேயே தொடர்ந்து மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருகிறார்” எனத் தி.மு.க-வினர் கடும் விரக்தியில் பேசினார்கள்.

தி.மு.க வேட்பாளர் பட்டியல் வரை தயாராகவே வைத்திருக்கிறது. கூட்டணி முடிவானதும் பட்டியலை வெளியிடுவார்கள். ஆனால், மற்றக் கட்சிகள் வேட்பாளர் தேர்வும் நடத்தாமல் தொகுதிப் பங்கீட்டிலும் இறுதி முடிவு தெரியாமல் இருதலைக் கொள்ளி எறும்புகளாகத் தவித்து வருகிறார்கள். “ஏதாவது ஒரு முடிவு தெரிந்தால்தானே அடுத்த தேர்தல் வேலையைத் தொடர முடியும்” என்கிறார்கள். தி.மு.க தரப்பில் விசாரித்தால், “கூட்டணிப் பங்கீடு விவகாரத்தில் நிச்சயமாக நாங்கள் கடுமை காட்டவில்லை. கட்சிகளுக்கு வெற்றி வாய்ப்புள்ள இடங்களை வழங்கத்தான் செய்கிறோம். ஆனால், அதற்கும் மேல் கேட்கும் போது, அது முடியாமல் போகிறது. கூட்டணிக் கட்சிகளுக்கு செல்வாக்கு இருக்கும் இடங்களில் அதிக வார்டுகளை ஒதுக்குகிறோம். அவர்கள் செல்வாக்குக் குறைவாக இருக் கும் இடத்திலும் அதே எண்ணிக்கையை எதிர்பார்த்தால், கொடுக்க முடியாது தானே. இதைத்தான் பேச்சுவார்த்தையில் பேசி சுமூக முடிவுக்கு முயற்சி செய்கிறோம். அனைத்தும் சுமூகமாக தான் செல்கிறது. விரைவில் பங்கீடு விஷயங்கள் முடிவுக்கு வந்துவிடும்” என்கிறார்கள். ■

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைச்சர் செந்தில் பாலாஜியும் காங்கிரஸ் எம்.பி ஜோதிமணியும் பாசமலர்கள் போல அண்ணன் தங்கையாக வலம் வந்தார்கள் கூட்டணிப் பேச்சுவார்த்தை இருவரின் சகோதரப் பாசத்தை முறித்துவிட்டது. காங்கிரஸ் கட்சியினரைத் தி.மு.க-வினர் நடத்தும் விதங்களின் உச்சமாகக் கரூரில் நடந்த தொகுதிப் பங்கீடு பேச்சு வார்த்தையின் போது தன்னை வெளியில் போகச்சொன்னதாகவும் அதில் “நான் என்ன உங்கள் வீட்டுக்கு விருந்துக்கா வந்தேன்” எனக் காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி ஆவேசமாகப் பேசுவதாகவும் வெளியான வீடியோ, வைரலாகி வருகிறது. ஆனால் மதுரை, திருச்சி உள்ளிட்ட சில மாவட்டங்களில் காங்கிரஸ் - தி.மு.க இடையேயான பங்கீடு நிறைவுக்கும் வந்திருக்கிறது.”

# வடமராட்சியை உலுக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது தொழில் முறைகளை மாற்றிக் கடலில் பல நாட்கள் தங்கி நின்று மல்ரிபோட் படகுகள் மூலமான மீன்பிடித் தொழிலை 1970 களின் பிற்பகுதியில் ஆரம்பித்திருந்தனர். மல்ரிபோட் இழுவைப்படகுகள் மூலம் அவர்கள் கடற்றொழில் செய்ய ஆரம்பித்ததால், அவர்களது கடலில் மீன் குஞ்சுகளை அடியோடு இழுவைப் படகுகள் வாரிச் சுருட்டியிருந்தன. இதனால் அவர்களது கடற் பிரதேசத்தில் மீன் தங்கி இனப்பெருக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சூழல், சந்தர்ப்பங்கள் அற்றுப் போயின. இதனால் இவர்களது கடல் வளம் குறைந்து செல்லவே அவர்கள் முல்லைத்தீவு தொடக்கம் தீவுகள் வரையிலான கடற்பிரதேசங்களுக்குள் பந்தாடத் தொடங்கினார்கள்.

இலங்கை நாட்டு நிலவரம் வழமைக்குத் திரும்பிய 2005 ஆம் ஆண்டு முதல் பெருமளவில் இந்திய இழுவைப்படகுகள் வடக்குப் பிரதேசத்துக்குள் ஊடுருவி மீன்களைப் பிடிக்கத் தொடங்கின. காலப்போக்கில் வடக்கின் கடல் எல்லையைத் தாண்டி உட்பிரவேசித்த இந்திய இழுவைப் படகுகள் மீன் பிடித்து எமது கடல் வளத்தைச் சூறையாடின. மீன்களைச் சூறையாடும் இந்திய இழுவைப்படகுகள் எமது மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடிக்கும் மீன்பிடி வலைகளைத் துண்டு துண்டாக அறுத்துக்கொண்டு எமது மீனவர்கள் மீன்பிடிக்க முடியாத நிலைக்கும் வருமானத்தை இழந்து கஷ்டப்படும் நிலைக்கும் தள்ளப்படக் காரணமாகினர். இவ்வாறான இந்திய இழுவைப் படகுகளின் தொல்லைகளை இலங்கைக் கடற்படை முற்று முழுதாகத் தடைசெய்யவில்லை. மாறாக இடைக்கிடையே சில இந்திய மீனவர்களைக் கைது செய்வதும் பின்னர் பிணையில் விடுவதுமாக நடைபெற்று வந்தன.

இந்திய இழுவைப்படகுகளின் ஆக்கிரமிப்பைப் பொறுக்க முடியாத எமது மீனவர்கள் ஆங்காங்கே போராட்டங்கள் நடத்திய போதும் அதற்குரிய பலன்கள் ஏதும் கிடைக்கவில்லை.

இறுதியாக கடந்த 5 ஆண்டுகளில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் முல்லைத்தீவு தொடக்கம் தீவுகள் வரை கரையில் இருந்து அரைக் கிலோமீற்றர் தூரம் வரையிலான பகுதி வரை ஆக்கிரமித்து தொழில்களை மேற்கொண்டு வர, எமது மீனவர்களின் வலைகளும் தினமும் அறுக்கப்பட்டு தொழிலை மேற்கொள்ள முடியாத அளவுக்குப் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியது. குறிப்பாக, கரை வலைத் தொழில்களைக் கூட மேற்கொள்ள முடியாத சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அத்துடன் காலங்காலமாக பல பில்லியன் ரூபா பெறுமதியான தம்மவரின் மீன்பிடி வலைகளை இழந்ததுடன் தொழில் இன்றி வாழ்வாதாரத்தை இழந்தனர். இவற்றிற்கு எந்த விதமான நஷ்டஈடும் இது வரை கிடைக்கப் பெறவில்லை.

இந்திய இழுவைப்படகினால் மோதப்பட்டு உயிரிழந்த நிலையில் இரண்டு சடலங்கள் கரை ஒதுங்கியது. இது குறித்து அரசியல்வாதிகளுக்கும் அரசுக்கும் தெரிந்தும் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந் நிலையில் சுப்பர் மடத்தைச் சேர்ந்த மீனவர்களின் மீன்பிடி வலைகளைப் கடந்த 30 ஆம் திகதி இரவு வைத்து இந்திய இழுவைப்படகுகள் துண்டு துண்டாக அறுத்தெறிந்திருந்தன. கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான வலைகளையும் தொழிலையும் இழந்தனர்.

இதனால் சுப்பர் மடம் மீனவ சமுதாய அமைப்பு மறு நாள் 31 ஆம் திகதி சுப்பர் மடத்தில் ஆர்ப்பாட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தது. அப் போராட்டம் தொடர் போராட்டமாகப் பருத்தித்துறை பொன்னாலை வீதியை மறித்து வீதிக்கு நடுவே பந்தலைப் போட்டு தொடர்ந்தனர். வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கத்தையோ யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கத்தையோ எதிர்பாராமல் அவர்கள் ஆதரவின்றி ஆரம்பிக்கப்பட்ட இப் போராட்டத்திற்கு மீனவர்களின் ஆதரவு பெருகியது. வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த ஆழியவளை, வத்திராயன், தாளையடி, வலிகாமத்தைச் சேர்ந்த மாதகல், மயிலிட்டி மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த மீனவர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்து நேரில் வந்து அவர்களது போராட்டத்திற்கு வலுச் சேர்ந்தனர்.

இத்தருணத்தில் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம், பருத்தித்துறை பிரதேச செயலகம் மற்றும் வடமராட்சி கிழக்கு மீனவர்கள் மருதங்கேணிப் பிரதேச செயலகம் ஆகியவற்றை முற்றுகையிட்டு போராட்டங்களை நடத்தியதுடன் இந்திய மீனவர்களின் ஊடுருவல் வலைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்கு எழுத்து மூலம் உத்தரவாதம் தந்தால் மாத்திரமே போராட்டம் கைவிடப்படும். அது வரை போராட்டம் கைவிடப்பட மாட்டாது என்று சுப்பர் மட மீனவர்கள் தெரிவித்தனர். பருத்தித்துறை பிரதேச செயலக முற்றுகைப் போராட்டக்காரர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பைத் தடுக்கிறோம் என காங்கேசன்துறை கடற்படை அதிகாரிகள் உறுதியளித்த போதிலும் அதற்கு எழுத்து மூலம் உத்தரவாதம் தாருங்கள் என மீனவர்கள் கேட்டுக் கொண்டு விடாப்பிடியாக நின்றனர்.

இதேவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மருதங்கேணி பிரதேச செயலகம், யாழ்.மாவட்ட செயலகம், சுப்பர் மடம் மீனவர் அமைப்பினர் ஆகியோர் மத்தியில் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்த போதிலும் அவரிடம் எழுத்து மூலம் உத்தரவாதம் தாருங்கள் எனப் போட்டக்காரர்கள் கேட்டுக் கொண்டனர்.

எழுத்துமூலம் உறுதி மொழி தராதவரை தமது போராட்டம் பல்வேறு வடிவங்களில் கால வரையறையின்றித் தொடரும் என சுப்பர் மடம் மீனவர்கள் சமூக அமைப்பு பகிரங்கமாக அறிவித்துவிட்டது. சுப்பர் மடம் மீனவர்களின் போராட்டத்திற்கு இரவு, பகல் பாராது சென்று அவர்களின் மத்தியில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.எ.சுமந்திரன், சி.சிறிதரன், தமிழ்த் தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி எஸ்.சுகாஸ் ஆகியோர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்ததுடன், மீனவர்களாகிய நீங்கள் எடுக்கும் முடிவுகளுக்குப் பின்னால் நின்று ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கின்றோம் என அறிவித்துள்ளனர்.

தமிழர்களாகிய இலங்கை - இந்திய மீனவர்களிடையே எல்லை தாண்ட முரண்பாடு தொடர்பாக பிளவுகள், பிரச்சினைகள் ஏற்படாது தொடர்ந்து நட்புறவு பேண வேண்டும் என்பது அக்கறையாக உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே சிவாஜிலிங்கம் ஆகியோர் தமிழ் நாட்டு முதலமைச்சர் மற்றும் அரசியல்வாதிகள், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய உதவித் தூதரகம், தமிழ் நாட்டு மீனவர் சங்கப்பிரதிநிதிகள் ஆகியோருடன் தொடர்புகளை மேற்கொண்டுள்ளனர்.

அவர்களுடனும் இலங்கை மீனவர்களுடனும் கலந்துரையாடல்களை நடத்தி எல்லையைத் தாண்டாமல் கடற்றொழிலை மேற்கொள்ள தீர்வினை எட்டும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகம் அன்றாட நிலைமைகளை அவதானித்து இந்திய அரசுக்கு அறிக்கை விட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நம்மவரின் போராட்டத்தை அடுத்து இலங்கைக் கடற்பகுதிக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று இந்தியாவின் மேற்குக் கரையோராமான ஒரிசா போன்ற மாநிலங்களில் கடல் பகுதிக்குச் சென்று தொழிலை மேற்கொள்ளுமாறு இந்திய மீனவர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை தமிழ் நாடு இராமேஸ்வரம் மீனவச் சங்கத் தலைவர்கள் ஜேசுராஜா இலங்கை மீனவர்கள் ஆவேசப்படாது சற்று அமைதி காக்க வேண்டும். விரைவில் சந்திக்க வருகின்றோம், பேச்சு வார்த்தை மூலமாகத் தீர்வு காண்போம். இரண்டு தரப்பு மீனவர்களும் கடலில் மோதிக் கொள்வது நல்லதல்ல. அது எமது நீண்ட காலப் பாராம்பரிய நட்புறவைப் பாதிக்கும் எனத் தெரிவித்துள்ளார். இலங்கை மீனவர்களின் தொடர் போராட்டத்தை நாம் அவதானித்து வருகிறோம். இலங்கை எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட வேண்டாம் எனத் தமிழக அரசும் நாமும் எமது மீனவர்களை வலியுறுத்தி வருகிறோம். எனினும் ஒரு சிலர் செய்யும் தவறுகள் காரணமாக ஒட்டு மொத்த மீனவர்களும் பிரச்சினைகளை எதிர் கொள்ள நேர்ந்துள்ளது. அடுத்த இரண்டு மாத கால மீன்டித் தடை எமது நாட்டில் நடைமுறைக்கு வருவதால் இக் காலத்தை இரண்டு தரப்பினரும் பயன்படுத்தி தீர்வினைக் காண்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் வாழ்வாதாரங்களை இழந்து நிற்கும் எமது மீனவர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்து நிம்மதியாக வாழ்வதற்கு இரு தரப்பினரும் பேச்சு வார்த்தை நடத்தி தீர்த்துக் கொள்ள வேண்டும்.

வடக்கு மீனவ சங்க அமைப்புக்கள், தமிழக மீனவ சங்க அமைப்பு ஒன்றுகூடிப் பேச்சு வார்த்தைகளை நடத்தி கடல் எல்லை தாண்டாமல் அவர்களுக்கான எல்லைகளை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். இரு தரப்பினரிடம் சுதந்திரமாகப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடும் அதே வேளை இங்குள்ள தமிழ்க் கட்சிகள், தமிழகக் கட்சிகள் ஆகியவற்றின் தலைவர்கள் பின்னணியில் இருந்து பேச்சு வார்த்தை வலிமை பெற தங்களால் ஆன பங்களிப்பைச் செய்ய வேண்டும். இதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகமும் தனது பங்களிப்பை வழங்கலாம். இவ்வாறு எடுக்கப்படும் தீர்வினை இலங்கை, தமிழக அரசுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறான நடவடிக்கையினால் மீன்பிடித் தொழிலுக்குரிய தீர்வினைப் பெறுவதுடன் இரு தரப்பினரும் சுதந்திரமாகத் தொழில் செய்யும் நிலைமையும் உருவாகும் என எதிர்பார்க்கலாம். ■

# அப்பாவிகளை ஆக்கிரமிக்கும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலையில் கண் பரிசோதனை நடத்திய தனியார் நிறுவனமும் இலவசமாகச் செய்வதாகவே பலரும் நினைத்தார்கள். கண்ணாடிக்குக் காசு வேண்டும் என்று அறிவிக்கப்பட்டபோதுதான் அந்த நிறுவனத்தின் மோசடி அம்பலத்துக்கு வந்தது. கொரோனா எனும் கொடிய நோயில் இருந்து மக்களைக் காக்கும் தெய்வமாக வைத்தியர்கள் போற்றப்படும் இவ் வேளையில் ஒரு சில வைத்தியர்களின் செயற்பாடு வருத்தமளிக்கிறது. அதனையும் இன்னொரு வைத்தியர் கண்டு பிடித்தது ஆறுதலான செய்தி. ஆனாலும் அந்த நேர்மையான வைத்தியருக்கு இன்னொரு வைத்தியரும், அரசியல்வாதியும் அச்சுறுத்தல் விடுவது சினிமாவில் வரும் காட்சிபோல் உள்ளது.

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரிக்கு அச்சுறுத்தல் விடுத்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் வகையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஊடகச் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது, கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி கடந்த 26 ஆம் திகதி தொலைபேசி ஊடாக அச்சுறுத்தியதாகவும், பின்னர் வாகனம் ஒன்றில் வந்த குழுவினரால் நேரடியாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பிலும் கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விளக்க மறிய லில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் கிளிநொச்சி மாவட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் குறித்த வைத்தியரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறும், இது போன்ற சம்பவங்கள் இடம்பெறாதிருக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தும் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றவாளிகள் எனச் சந்தேகிக்கபப்டுபவர்கள் தண்டிக்கப்படுவார்களா இல்லையா என்பது விசாரணையின் முடிவில் தெரிய வரும். இந்தச் சம்பவத்தின் பின்னணியில் அரசியல்வாதிகள், மருத்துவ அதிகாரிகள் மீது சந்தேகம் எழுந்துள்ளது. தனியார் வைத்தியசாலைகளில் நடைபெறும் சம்பவங்கள் பல முன்னரும் ஊடகங்களில் முதலிடம் பிடித்தன அவற்றின் விசரணைகளின் முடிவு பகிரங்கப்படுத்தப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலையில் நடைபெற்ற கண் மருத்துவ சிகிச்சையின் பின்னர் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அந்தச் சம்பவம் பற்றி பரபரப்பான செய்திகள் வெளியாகின. வடமராட்சியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சையின் பின்னர் துணி வைத்துத் தைக்கப்பட்டதால் பெண்மணி ஒருவர் மரணமானதாகச் செய்தி பிரசுரமானது. அந்த சம்பவத்தை பலரும் மறந்த நிலையில் கண்டாவளை சம்பவம் அரங்கேறியுள்ளது. மருத்துவ மோசடியைக் கண்டு பிடித்த பெண் மருத்துவர் தொடர்ந்து அங்கு கடமையாற்றுவாரா அல்லது இடமாற்றம் எனும் பெயரில் தூக்கி எறியப்படுவாரா என்பது தெரியவில்லை. ■





# ஐ.பி.எல். மெகா ஏலம் 2022
# 590 வீரர்கள் ஏலத்தில் பங்கேற்பு




ஐ.பி.எல். 2022 தொடருக்கான ஏலத்தில் பங்கேற்கும் வீரர்களின் இறுதிப் பட்டியல் பற்றிய அறிவிப்பை ஐ.பி.எல் நிர்வாகம் கடந்த செவ்வாய்க் கிழமை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. அதன்படி ஐ.பி.எல் 2022 மெகா ஏலம் வரும் பெப்ரவரி 12 மற்றும் 13 ஆகிய திகதியில் அனைத்து அணிகளும் தாங்கள் விரும்பும் வீரர்களைத் தேர்வு செய்து அவர்களின் பெயரை ஏற்கெனவே வெளியிட்டுள்ளன. அந்த வீரர்கள் போக இந்தியா மற்றும் உலக அளவில் இருந்து ஐ.பி.எல் மெகா ஏலத்தில் பங்கேற்க மொத்தம் 1214 வீரர்கள் விண்ணப்பம் செய்திருந்தார்கள்.

விண்ணப்பங்களை ஆராய்ந்து தணிக்கை செய்த ஐ.பி.எல் நிர்வாகம் அதிலிருந்து 590 வீரர்கள் ஏலத்தில் பங்கேற்க தகுதியானவர்கள் என அறிவித்துள்ளது. இதில் 228 வீரர்கள் ஏற்கெனவே சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடியவர்கள் என்றும் 355 வீரர்கள் சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடாதவர்கள் எனவும் தெரிவித்துள்ள ஐ.பி.எல் நிர்வாகம் ஐ.சி.சி துணை உறுப்பு நாடுகளில் இருந்து 7 வீரர்கள் பங்கேற்க உள்ளதாகக் கூறியுள்ளது.

இதில் அதிகபட்ச அடிப்படை விலை தொகையான 2 கோடி ரூபாய்க்கு 48 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதிகபட்ச அடிப்படை விலை தொகையான 1.5 கோடிக்கு 20 வீரர்கள் தேர்வாகியுள்ளனர். அதேபோல் ரூபாய் 1 கோடி அடிப்படை விலையில் அதிகபட்சமாக 34 வீரர்கள் இடம் பிடித்துள்ளனர்.

பங்களாதேஷ், அயர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து தலா 5 வீரர்களும், 3 நமீபியா வீரர்களும், 2 ஸ்கொட்லாந்து வீரர்களும், அமெரிக்கா, ஸிம் பாப்வே மற்றும் நேபாள் ஆகிய நாடுகளில் இருந்து தலா ஒரு வீரரும் தேர்வாகி உள்ளனர்.




பங்கேற்க ஒவ்வொரு அணிகளிடமும் எவ்வளவு தொகை மீதமுள்ளது மற்றும் எத்தனை வீரர்களைத் தேர்வு செய்ய முடியும் என்பதை பற்றிப் பார்ப்போம்.

1. சென்னை சூப்பர் கிங்ஸ் :எம்.எஸ் டோனி தலைமையிலான நடப்பு சாம்பியன் சென்னையிடம் 48 கோடிகள் மீதம் உள்ளது. அந்த அணி அதிகபட்சமாக 21 இந்திய வீரர்களையும் 7 வெளிநாட்டு வீரர்களையும் தேர்வு செய்யலாம்.

2. டெல்லி கபிட்டல்ஸ் : டெல்லி அணியிடம் மீதம் 47.5 கோடிகள் உள்ளது. அந்த அணி அதிகபட்சமாக 21 இந்திய வீரர்களையும் 7 வெளிநாட்டவர்களையும் தேர்வு செய்ய முடியும்.




3. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் : கொல்கத்தாவிடம் 48 கோடிகள் மீதம் உள்ளது. அந்த அணியால் 21 இந்தியர்களையும் 6 வெளிநாட்டவர்களையும் தேர்வு செய்யமுடியும்.

4.மும்பை இந்தியன்ஸ் : ரோஹித் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியிடம் 48 கோடிகள் மீதம் உள்ளது. அந்த அணியால் 21 இந்திய வீரர்களையும், 7 வெளிநாட்டு வீரர்களையும் தேர்வு செய்ய முடியும்.

5. சன் ரைசெர்ஸ் ஹைதெராபாத் : ஹைதெராபாத் அணியிடம் 68 கோடிகள் உள்ளது. அந்த அணியால் 22 இந்திய வீரர்களையும் 7 வெளிநாட்டவர்களையும் தேர்வு செய்ய முடியும்

6. ராஜஸ்தான் ராயல்ஸ் : ராஜஸ்தான் அணியிடம் 62 கோடிகள் மீதியுள்ளது. அந்த அணி 22 இந்திய வீரர்களையும் 7 வெளிநாட்டு வீரர்களையும் தேர்வு செய்யலாம்.

7. ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் : பெங்களூர் அணியிடம் 57 கோடிகள் மீதம் உள்ளது. அந்த அணியால் 22 இந்திய வீரர்களையும் 7 வெளிநாட்டு வீரர்களையும் தேர்வு செய்ய முடியும்.

8. பஞ்சாப் கிங்ஸ் : பஞ்சாப் கிங்ஸ் அணியிடம் மற்ற அணிகளைக் காட்டிலும் அதிகபட்சமாக 72 கோடிகள் உள்ளது. அந்த அணியால் 23 இந்திய வீரர்களையும் 8 வெளிநாட்டு வீரர்களையும் தேர்வு செய்ய முடியும்.

9. லக்னோ சூப்பர் ஜெய்ன்ட்ஸ் : புதிய லக்னோ அணியிடம் 59 கோடிகள் மீதி உள்ளது. அந்த அணியால் 22 இந்திய வீரர்களையும் 7 வெளிநாட்டவர்களையும் தேர்வு செய்ய முடியும்.

10. அஹமதாபாத் : புதிய அஹமதாபாத் அணியிடம் 52 கோடிகள் மீதம் உள்ளது. அந்த அணியால் 22 இந்திய வீரர்களையும் 7 வெளிநாட்டு வீரர்களையும் தேர்வு செய்ய முடியும்.

ஒரு வீரருக்காகப் பல அணிகள் போட்டியிட்டால் பல கோடி செலவு செய்தால் வாங்கும் வீரர்களின் தொகை மாறி விடும்.

**ஐ.பி.எல். இல் மீண்டும் ஶ்ரீசாந்த்**

கிரிக்கெட் சூதாட்ட பிரச்சனை காரணமாக தடை விதிக்கப்பட்ட ஶ்ரீசாந்த் மீண்டும் ஐ.பி.எல்லில் விளையாடக் காத்திருக்கிறார். ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காக விளையாடும் போது ஸ்பாட் பிக்ஸிங் விவகாரத்தில் சிக்கிய அவர் ஏழு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டார். பின்னர் தன் மீது இருந்த குற்றச் சாட்டிற்கு மேல் முறையீடு செய்த ஶ்ரீசாந்த் அந்த வழக்கில் இருந்து விடுதலையான பின்னர் தற்போது 38 வயதில் மீண்டும் ஐ.பி.எல் ஏலத்திற்குத் தனது பெயரைப் பதிவு செய்துள்ளார். கடந்த 2008 ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடரில் பங்கேற்ற ஶ்ரீசாந்த் இதுவரை 44 ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடி 40 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். கடந்த ஆண்டு தன் மீது இருந்த புகாரை வழக்கின் மூலம் வென்ற ஶ்ரீசாந்த் கேரளா அணிக்காக ரஞ்சி போட்டிகளில் களமிறங்கினார். அதனைத் தொடர்ந்து தற்போது இந்த ஆண்டு நடைபெற இருக்கும் ஐ.பி.எல் ஏலத்திற்கான பட்டியலில் தனது பெயரை இணைத்த அவர் தற்போது 590 வீரர்கள் அடங்கிய இறுதிப் பட்டியலில் இடம் பிடித்துள்ளார். அவரது குறைந்தபட்ச அடிப்படை விலையாக 50 லட்ச ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ■






# சொர்க்கத்தைத் தேடி

ஆதி காலத்திலிருந்து பழக்கத்திலுள்ள ஒரு சொல்லே சொர்க்கம். அப்படியென்றால் என் பாட்டி சொன்ன படி இறந்தவர்கள் வாழும் போது செய்த பாவ புண்ணியக் கணக்கின்படி நரகம் அல்லது சொர்க்கம் செல்வார்கள் என்றே எனக்குத் தெரியும்.

ஆனால், அந்தக் கதை மீது எனக்கு நம்பிக்கையில்லை. ஒருநாள் இரவு என் வாழ்வில் மறக்க முடியாது. அடுத்த நாள், முதல் முறையாக பாடசாலை செல்ல வேண்டும் ஏதோ ஒரு பதற்றம் என் மனதில் இருந்தது.

அதற்காக என் தந்தை பல ஆறுதல்களைக் கூறினார். எனினும் பதற்றம் தீரவில்லை. புதுப்புத்தகங்கள், கொப்பிகளைப் புத்தகப் பையினுள் அடுக்கி வைத்தேன். வெள்ளை ஆடை, சப்பாத்து கழுத்துப்பட்டி அனைத்தையும் ஒழுங்குபடுத்தினேன்.

இரவு உணவை முடித்துக் கொண்டு படுக்கைக்குச் சென்றேன் படுக்கையில் படுத்தும் அடுத்த நாளை பற்றிச் சிந்தித்துக் கொண்டே உறங்கினேன். காலையில் என் அன்னை என்னை எழுப்பினார். காலைப் பொழுதைக் கண்டதும் பதற்றம் மீண்டும் தொடங்கியது.

பாடசாலைக்குத் தயாராகி பெற்றோரை முத்தமிட்டு சைக்கிளிலே பாடசாலையை நோக்கி நகர்ந்தேன். பாடசாலை எனது வீட்டிலிருந்து சற்று தூரம் ஆகையால் அந்தக் காலைப் பொழுதை அனுபவித்த படி நான் சென்று கொண்டிருந்தேன்.

மலையகப் பிரதேசம் ஆகையால் வளைந்த பாதை வழியே பாம்பு போல பலரும் பயணம் செய்ய வேண்டியிருந்தது. ஆகா! என்ன அருமையான பொழுது பனிக் காலமாகியதால் முழுவதும் பனி சூழ்ந்திருந்தது.

புகையில் சிக்கிய பூச்சிகள் போல பனி மழையில் தோய்ந்து சென்றேன் பனியில் பயணம் செய்யும் மற்றவர்களைக் கண்ணுக்குத் தெரிவதில்லை. இரவில் திரியும் மின்மினிப் பூச்சிகள் போல தூரத்திலிருந்து வருகின்ற வாகன வெளிச்சம் என்னைத் தாண்டிச் செல்கிறது.

மின் கம்பிகள் மேலே முத்தமிட்டு அன்பு வார்த்தைகள் பேசுகின்ற சிறு குருவிகளும் தம் உணவு தேடிக் கூட்டம் கூட்டமாக ஒலி எழுப்பிப் பறந்து செல்லும் பறவைகளும் கண்களுக்கும் மனதுக்கும் பெரும் விருந்தளித்தன.

சற்று நேரத்தில் பாடசாலையை அடைந்தேன். காலைப் பொழுது எனக்குத் தந்த இனிய விருந்தால் என் மனம் பதற்றத்திலிருந்து சற்று விலகியது. உள்ளே சென்று சற்று நேரத்தில் புதுப்புது நண்பர்கள் அறிமுகமானார்கள். நானும் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன் .

அந்தக் கணம் எனக்கு எதையோ விளக்க வந்தது. என்னவென்று புரியவில்லை அது பக்கமிருக்க ஆசிரியர்களும் எம்மோடு நட்புறவோடு உரையாடினர். அழகிய நேரம் எம் பாடசாலையும் அழகாகக் காட்சியளித்தது.

இயற்கை மரங்கள், பூங்கன்றுகள், பெரிய கட்டிடங்கள், வகுப்பறைகள் அனைத்தும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் காணப்பட்டன. என் மனதிலிருந்த பதற்றம் முழுதாக நீங்கியது. இவை அனைத்தும் பதற்றத்தை நீக்கி விட்டன.

பாடசாலை தவிர்ந்து வேறொரு இடமாக அது தெரிந்தது. அதுவே சொர்க்கம். அன்பு வார்த்தைகள் பேசுகின்ற ஆசிரியர்கள். அன்போடு பழகுகின்ற நண்பர்கள். இனிமை தரும் இயற்கை. இவற்றை விடவும் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழ அந்தச் சொர்க்கத்தில் முடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

இருக்கும் அதாவது வாழும் இந்த வாழ்விலேயே அனுபவித்து விடலாம். சொர்க்கத்தை ஏன் நம் கண்களுக்குத் தெரியாது இறந்த பின் கிடைக்கும் சொர்க்கத்தை நினைத்து வாழ்கின்ற வாழ்க்கையைத் தொலைக்க வேண்டும். அன்பான நபர்களும் அழகிய இயற்கையும் உள்ள இடத்தையே சொர்க்கம் என நான் சொல்கிறேன்.

சொர்க்கம் நாம் இறந்த பின் கிடைப்பதற்கு; நாம் வாழும் வாழ்க்கையிலேயே சொர்க்க வாழ்க்கை தொடரட்டும்.

**நிலானி சந்திரகுமார்**
கிளி/அக்கராயன் ம.வி,
கிளிநொச்சி.

# தடுப்பூசியைத் தடுக்கும் கற்பனைகள்!




தடுப்பூசியைத் தடுக்கும் கற்பனைகள்! சிலர் கோவிட்-19 தடுப்பூசிகளைப் போடாமல் தவிர்ப்பதற்கு, பக்க விளைவுகள் குறித்த தயக்கத்தையே காரணம் சொல்கின்றனர். ஆனால், தடுப்பூசி போடுவோரில் பாதிப்பேர் சொல்லும் பக்க விளைவுகள், வெறும் கற்பனையே என்று சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது குறித்து "ஜாமா நெட்வொர்க் ஓபன்" என்ற ஆய்விதழில் வெளியாகியுள்ள ஒரு ஆய்வு, சுவையான தகவலை வெளியிட்டுள்ளது.

கோவிட்-19 தடுப்பூசியின் பக்க விளைவுகள் குறித்து நடத்தப்பட்ட 12 ஆய்வுகளின் தரவுகளைச் சேகரித்து, ஒரு கூட்டு ஆய்வை ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்டனர். மொத்தமாக, 45 ஆயிரம் பேர்களிடம் சேகரிக்கப்பட்ட தரவுகள் அவை.

அதில், ஒரு பகுதியினருக்கு அசல் தடுப்பூசிக்குப் பதில், "பிளாசிபோ" எனப்படும் வெற்றுத் தடுப்பூசிகள் போடப்பட்டிருந்தன. பிளாசிபோ ஊசி போட்டுக்கொண்டோரில் 35 சதவீதத்தினர் தலைவலி, உடல் சோர்வு போன்ற பக்கவிளைவுகள் இருப்பதாகத் தெரிவித்தனர். அசல் தடுப்பூசி போட்டோரில், 46 சதவீதம் பேர் பக்க விளைவுகள் இருப்பதாகத் தெரிவித்தனர். இரண்டாவது தடுப்பூசியின் போதும், பிளாசிபோ குழுவினரில் 32 சதவீதத்தினரும் அசல் தடுப்பூசிக் குழுவினரில் 61 சதவீதத்தினரும் பக்கவிளைவுகள் இருப்பதாகத் தெரிவித்தனர்.


தடுப்பூசியால் பக்கவிளைவுகள் இருக்கும். ஆனால், பக்கவிளைவுகள் இருப்பதுபோல சிலருக்குக் கற்பனையாகவும் தோன்றும் என்ற தகவலை, முன்கூட்டியே தெரிவித்தால், மேலும் பலர் தாமாகவே முன்வந்து கோவிட்-19 தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்வர் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.




பால் மணம் மாறாத வயதுக் குழந்தை
உணவு ஊட்டினாள்
தனது பொம்மைகளுக்கு...
அவளின் அரவணைப்பில்
பொம்மைகள் பாதுகாப்பாய் இருந்தன
உணவூட்டும் மகளை
ஓரக்கண்ணால் பார்த்து
எனக்குள்ளே சிரித்துக் கொண்டேன்
கடவுளுக்குப் படையலிடும்
அவசரம் எனக்கு...
அவரே எங்களின் பாதுகாவலர்!
என் மகளின் செய்கையோடு
என் செய்கையும் ஒன்றானதை
இன்றுவரை என்னுள்ளம் உணரவில்லை!

**சி.லாவண்யா**
தரம்-11
யா/விக்னேஸ்வராக் கல்லூரி





**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 05.02.2022 அன்று வெளியிடப்பட்டது.